உ

கற்பகவிநாயகன்றுணை,

சிதம்பரம்.

ஸ்ரீசபாநாதர்பேரில்

# முத்துத்தாண்டவர்

பாடியருளிய

## கீர்த்தநங்களும்.பதங்களும்.

இன்னுஞ்சிலவித்வான்கள் பாடிய

கீர்த்தநங்களும்-பதங்களும்,

இவை.

திருவண்ணாமலை,

## பரமாநந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

ஆறுகாடு,

முனியப்பமுதலியாரால்

## எ. மாயாண்டி நாட்டா

ரவர்களது.

கல்விச்சமுத்திரவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

1860 ரௌத்ரி௵ கார்த்திகை மீ

சிவமயம்,

—✱✱✱—

# முத்துத்தாண்டவர்

## சரித்திரம்.

ஸ்ரீதருகாவிரி திகழ்சோழநாட்டில் அடியார்க்கருள்செய்யும் பொருட்டுப்பரமசிவம்திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்தலங்களுள்ஒன்றாகித் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதாரஞ்செய்து ஞானப்பா லுண்டருளிய மகாக்ஷேத்திரமாகிய சீர்காழியில் வீற்றிருக்கின்ற தோணியப்பாருக்கு வாச்சியத்தொண்டுசெய்யும் பேறுபெற்ற குலத்தில் தோன்றித்தாண்டவனென்கிற பெயர்பெற்றுச்சிவநேசத்துடன்வளர்ந்து வருகையில் முன்வினையினால் கர்மவியாதியொன் றுசம்பவிக்க அதனால்தங்கள் குலத்துக் குரியதாகிய தொழில கற்றுக்கொள்வதற்கில்லாமல் காலந்தோறும் ஆலயத்திற்குப்போய் பிரமபுரீசனையுந் திருநிலைநாயகியையுந் தோணியப்பரையும் பயபக்தியுடன் தரிசனஞ்செய்தும் மற்றைக்காலங்களில் அந்தசிவாலயத்தொண்டு செய்கின்றவளாய்ச்சிவநேயத்துடன்சிவநாமகீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கும்ஒருதாசிவீட்டிற்குப்போய் அந்தத்தோத்திரத்தைக் கேட்டுக்கொண்டிருப்பார்- அவள்சுற்றத்தாருக்கும் இவர்சுற்றத்தாருக்கும் அந்நியோந்நிய மின்மையால் அவள்வீட்டிற்குப்போகிறது சம்மதியில்லாமல் அவரிடத்தில்வெறுப்புற்று ஆதரணை செய்யாமலிருந்தார்கள்- அப்படியிருக்கையில் ஒருநாள்மிகவும் மனவருத்த மடைந்து சிவாலயத்திற் போய்ச்சுவாமியையும் அம்மையையுந்தரிசித்துத் தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்து பசியினால் சரீரத்துக்கிளைப் புண்டாகச் சோகத்துடன் வாகனகிடங்குக்குள் போய்ப்படுத்துக்கொண்டு சிவத்தியானத்துடனே நித்திரைசெய்துவிட்டார்- அது அந்தக்கோயில் ஸ்தானிகருக்குத்தெரியாமையால் அர்த்தஜாமம் ஆனவுடன் கோயிற்றிருக்காப்பிட்டுக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள்போய் விட்டபின்பு சற்றுநேரத்திற்கெல்லாம் நித்திரைநீங்கியெழுந்துமெய்ப்பிணியினாலும் பசிப்பிணியினாலும் வருந்தித் தோணியப்பரை தோத்திரஞ்செய்தார், உயிருக்குயிராயெங்கும் நிறைந்திருக்கும் பரமசிவம். அன்பனது வருத்தத்தைத்திரு

வுளங்கொண்டு தம்மிடப்பாகத் துமையவளைப்பார்த்தருள அந்தக் குறிப்பையுணர்ந்துகொண்டு சகலவுயிர்களையும் பெற்றவளாகிய உமையவள் கிருபைகூர்ந்து அந்தக்கோயில் பெரியகுருக்களுடையபத்துவயதுள்ள குமாரத்தியைப்போல்வந்து வியசனப்படுகிறவரைப்பார்த்து நீயேன் இப்படிவியசனப்படுகிறாயென்ன, *

தாயே, நான் பூர்வம் என்னபாவஞ்செய்தேனோ தொலையாத கர்மவியாதிசம்பவிக்க அதனால் வருத்தப்படுகிறது மன்றிவறுமை நோயென்ப தொன்று நேரிட்டதனாலும் வருந்துகின்றேனென்றுசொன்னார், அதைக்கேட்டுநீவியசனப்படவேண்டாம்உனக்குச்சம்பவித்திருக்கிற வியாதியும்வறுமையும்நீங்கிநீசௌகியமடைவதற்குநான்ஒருஉபாயஞ் சொல்லுகிறேன். ஆனால்இப்போதுனக்குமிகுந்த பசியுண்டாயிருப்பது போற்காணுகின்றது அந்தப்பசிதீர அன்னங்கொடுக்கிறேன். சாப்பிடென்றுகோயில்அன்னம்வட்டகையுடன் கொடுக்கவாங்கிப்புசித்துப் பசிதீர்ந்தவுடன் என்றாயேஇந்தவியாதி நீங்கத்தக்கவகையெதுவோ அதனைச்சொல்லவேண்டுமென்னக்கோயில் குருக்கள்குமாரத்திபோல் வந்திருக்கும் பார்வதியார் நீ சிதம்பரத்திற்குப்போய்ச் சபாநாதனைப்பாடினால் இந்தவியாதிநீங்கிச் சௌக்கியமடையலாம் இதுதானுபாயமென்று சொல்ல, *

எனக்குப்பாடத்தெரியாதேநானென்னென்று பாடுவேனென்று சொன்னார், நீ அதைக்குறித்துயோசிக்க வேண்டியதில்லைசிற்சபைக் கெதிரில்நின்றுதரிசிக்கும்போது அங்குதரிசநத்திற்குவந்திருக்குந் திருக்கூட்டத்தாரால்என்னசொல்உண்டாகின்றதோ அந்தச்சொல்லைமுதலாகவைத்துக்கொண்டுபாடத்தொடங்கினால் சபாநாதர் கிருபையினாலே பாட வாக்குண்டாமென்றுசொல்லி உமையவள் ஒருஜோதியாக மறைந்துவிட்டாள்- அப்படிமறைந்துவிடவே அச்சமுமிகுந்த துயரமுங்கொண்டுஎன்னஞ்ஞானத்தினாலே குருக்கள்குமாரத்தியென்றே நினைத்திருந்தேனேயல்லது லோகமாதாவாகியபார்வதியாரென்றுதெரிந்துக்கொள்ளாதபாவி யானேனே இவ்வளவெல்லாங்கட்டளையுட்டருளிய என்தாய்தன்னுடையஉண்மையுந்தெரிவித்து எனக்கு நேரிட்டிருக்கிறவியாதியையும் இப்போதே தீர்த்துவிடலாகாதா சிதம்பரத்துக்குப்போகும்படி கட்டளையிட்டருள வேண்டுமானால் திருவுளப்பாங்கெப்படியோ அதுயாரால் அறியத்தக்கது ஒருவராலும்அறியத்தக்கதல்லவென்று எண்ணிக்கொண்டு அதுமுதல்நித்திரை செய்யாமல் திருநிலைநாயகி சந்நிதிக்கெதிரில்வந்து தோத்திரஞ்செய்துகொண்டிருந்தார், அப்படியிருக்கையில் உதையகாலமானதால்ஸ்தானிகர்முதலா

ணவர்கள்போய்த்திருக் காப்புநீக்கிஉள்ளே சென்றுஅம்மைசந்நிதியில்தி
ற்பவரைநோக்கிச்சமீபத்தில்வந்துநீஇங்கேயெப்படிவந்தாய்உன்னைஉன்
வீட்டார்தேடுகிறார்களேஎன்றுவினவத்தான்வந்ததுந் தனக்குக்கிடைத்த
நன்மையையுஞ்சொல்லஅவர்கள்கேள்விப்பட்டுக்குருக்கள் வீட்டிலிருந்
தவட்டிகையவரிடத்திலிருப்பதைக் கண்டதுமன்றி அவர்முகத்தில்ஒருதே
ஜசுவிளங்கியிருப்பதையும்பார்த்து ஆச்சரியமடைந்து அன்றுமுதல்மு
ன்போல் தாண்டவனென்று அழைக்க மனம்ஒவ்வாமல் முத்துத்தாண்
டவனென்றுஉபசாரமாகஅழைக்கத்தொடங்கினார்கள்,

அப்பால்திருதில்லைநாயகி உத்தாரப்படிபொழுது விடிந்தவுடனேபு
றப்பட்டுச்சிதம்பரத்திற்குப்போனார் - அப்படிப்போனவர் தில்லையெல
லையைக்கண்டமாத்திரத்தில்சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்துதோத்திர
ஞ்செய்துஉள்ளேபோய் வீதிப்பிரதக்ஷணஞ்செய்துதில்லை மூவாயிரவர்
வாசஞ்செய்யும்வீதியையும்வணங்கிஆலயத்திற்குட்சென்றுசிவகங்கையி
ல்ஸ்நானஞ்செய்து நித்தியானுஷ்டானவிதிகளை முடித்துக்கொண்டுஉரா
வுடையுடன்சென்றுசந்நிதானத்தில் அஷ்டாங்கபஞ்சாங்கத்துடன் பணிந்
தெழுந்து துதிசெய்து அன்பின்மிகுதியால்மன முருகிப்புளகமடை
ந்துஆனந்தக்கண்ணீர்பெருகும்படி பரவசப்பட்டுநிற்கையில் நடேச
மூர்த்தியின்திருவருளால்தரிசனத்திற்கு வந்திருப்பவர்களில் ஒருவாக்கு
ண்டாகஅதனைப்பல்லவியாகவைத்துக் கொண்டுஒருகீர்த்தநம்பாடிதோ
த்திரஞ்செய்தார்,

அதாவது(பூலோகக்கைலாசகிரிசிதம்பரம்) என்றுதோத்திரஞ்செய்வதை
க்கேட்டருளிச்சபாநாதர்திருவுளத்திற்களிகூர்ந்து அவருக்கிருந்தவியாதி
யெல்லாம்நீங்கும்படிகடாக்ஷித்துஐந்துபொன்பணம்பஞ்சாக்ஷரப்படியி
ன்மேல்வைத்துஎடுத்துக்கொள்ளும்படிகட்டளையிட்டருளினார்அந்தக்கட்
டளையைமறுக்கக்கூடாமையால்அஞ்சுபணத்தையெடுத்துக்கொண்டுதமக்
குநேரிட்டருந்ததீராப்பிணிதீரும்படி ஆனந்தநடேசமூர்த்திகடாட்சி
த்தருளியதிருவருளின்பெருமையை எண்ணியெண்ணிக்களிப் படைந்து
பின்னும்பலமுறை அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிந்துதோத்திரஞ்
செய்துபிரியாவிடைபெற்றுக்கொண்டு சீர்காழிக்குப்போய் அன்றுமுத
ல்தினந்தோறும்சபைக்குவந்து அம்பலவாணமூர்த்தியைத்தரிசித்துஅவ்
விடத்தில்என்ன சொல்தம்முடைய செவிக்குக்கேள்வியாகின்றதோ அ
தையேபல்லவியாகவைத்துக்கொண்டு கீர்த்தனமாவது பதமாவதுபாடி
ச்சிதம்பரேஸ்வரர் கட்டளையிட்டருளுகின்றபணமும் பெற்றுக்கொள்ளு

கிறவர்ஒருநாள்சிற்சபைக்கெதிரில் வந்துநிற்கும்போதுசபா நாதர்கட்டளையினால்அங்குதரிசிக்கின்ற தொண்டர்கள்யாதொன்றும் பேசாமலிருந்தார்கள்-அப்போது (பேசாதேநெஞ்சே) யென்றுஒருகீர்த்தனம்படிக் கட்டளைப்பிரகாரம் பஞ்சாக்ஷரப்படியில்வைத்தபணத்தைப் பெற்றுக் கொண்டுசீர்காழிக்குச்சென்றார்-இவ்வாறு நடந்துவருகையில் ஒருநாள்பழையபடிசீர்காழியிலிருந்துபுறப்பட்டுச் சிதம்பரதரிசனத்திற்குவருகையில்கொள்ளி-மென்னும்நதியில் அகப்பிரவாகம்வந்து ஒருவரும்போகக்கூடாமையாகவிருக்கவே சபாநாதனைத்தரிசிப்பதற் கில்லையே யென்னுமேக்கங்கொண்டு கொள்ளிடக்கரைமேல்நின்று - (காணமல்வீணிலே காலங்கழித்தேனே) யென்றுஒருகீர்த்தனம்பாடினார் - அந்தக்கீர்த்தனத்தைக்கேட்டருளிச்சபாநாதர்திருவுளத்திற்கிர்பைகூர்ந்துபிரவாகம்விலகக் கட்டளையிட்டருள-அந்தநதியைக்கடந்துவருபவர்மனககளிப்பினால் (தரிசநஞ்செய்வேனேஎன்றுகீர்த்தனம்பாடினார் - பின்புசிற்சபையில்வந்துசபேசனைக்கண்டவுடன் (கண்டபின்கண்குளிர்ந்தே) னென்றுஒருகீர்த்தனம்பாடினார்-அதன்பின்புஒருநாள்வரும்போது வார்க்கத்தில்தம்மைச்சர்ப்பந்தீண்ட அதற்கு (அருமருந் தென்கிற) ஒருகீர்த்தனம்பாடினார்-பாடியவுடன்விஷமிரங்கிற்று- இவ்வாறு சபாநாதர்பேரில் அநேகங்கீர்த்தனங்களும்பதங்களும்பாடித் தோத்திரஞ்செய்துக் கொண்டிருந்து சபாநாதரது கிருபையினால் அநேகமகத்துவம்விளங்கப் பெற்றுகடைசிநாளில்(மாணிக்கவாசகர் பேசெனக்குத்தரவல்லாயோ வறியேன்என்கிற) கீர்த்தனம்பாடும்போதுசிற்சபையில்ஒரு ஜோதியுண்டாகஅந்தச்சோதியில்விதேகத்துடன்கலந்துவிட்டார்.

சபாநாதர் துணை,

முத்துத்தாண்டவர்சரித்திரம்

முற்றிற்று,

—*—

* ****************************************************

உ

சபாநாதர்பேரில்

# முத்துத்தாண்டவர்பாடிய-கீர்த்தநப்-பதம்

——*——*——*——

## இவைகளின் - அகராதி.


| கீர்த்தநம் | பக்கம் | கீர்த்தநம் | பக்கம் | கீர்த்தநம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஹர ஹர சிவசிவ... | ௩௩ | கனவிலுமநடப... | ௫௰ | மத்டித்தா..... ... | ௪௰ |
| அப்படியிப்படி... | ௪௯ | கனவுகண்... ... ... | ௫௩ | தேனூர்மொழி ... | ௪௫ |
| அம்பர...... ...... | ௰௩ | காணமுத்தி......... | ௩௨ | தோத்திரஞ்செய்... | ௩௯ |
| அம்பலவாணர்... | ௨௨ | காணுமலிரு......... | ௰௯ | நடநங்கண்......... | ௰௨ |
| அருமருந்... ...... | ௩௧ | காணமல்வீணி... | ௨௯ | நடிப்பவனே....... | ௨௭ |
| அவனேதேவர்...... | ௩௫ | கெட்டுப்போனா... | ௪௧ | நானேமுழு... ... | ௨௩ |
| அழைத்துவா...... | ௪௮ | சந்ததமுன்......... | ௰௫ | நானேவலிய .. .. | ௫௰ |
| ஆசைதீரவே... ... | ௪௮ | சபையில்... ... ... | ௫௧ | நிருத்தஞ்செய்... | ௨௮ |
| ஆடிக்கொண்டா . | ௰௭ | சப்போசங்கர ... | ௰௬ | நீர்த்தமிடுந்...... | ௩௯ |
| ஆடியபாதா...... ... | ௰௯ | சரசமிப்படி... ... | ௪௭ | நீனைத்துக்கொ... | ௫௫ |
| ஆடியவேடிக்கை | ௨௪ | சாமிதரிச......... | ௨௨ | நீதயவாயென்...... | ௰௩ |
| ஆடினதெப்படி... | ௰௮ | சிதம்பரமே... ... | ௩௮ | நேசமேன்......... | ௪௯ |
| ஆட்டுக்காலே... ... | ௨௧ | சித்தரின்... ... ... | ௰௯ | பரதரிசனஞ்..... | ௰௭ |
| ஆராராசைப்... ... | ௨௩ | சிவசிதம்பர......... | ௪௧ | பிரிந்தாலு...... .. | ௫௫ |
| ஆனந்தத்தா... ... | ௨௯ | சிவந்தபாத......... | ௩௫ | பூலோககயிலாச ... | ௯ |
| இனிச்சுமக்க... ... | ௪௨ | சிவனைமற...... .. | ௩௯ | ம்பசவுமென்..... | ௪௯ |
| இன்னமொரு...... | ௰ | சிற்சபைதனி.. ... | ௰௧ | பேசாதே... ...... | ௩௭ |
| இன்னம்பிறவா... | ௪௨ | சுந்தரகுஞ்சித...... | ௩௪ | மறவாதிரு......... | ௩௯ |
| ஈசனே......... ... | ௰௨ | சேவிக்கம்வல்... ... | ௰ | மனதறியாமன் ... | ௫௭ |
| உன்னைநம்பினே ... | ௰௪ | சொல்லவாராய் ... | ௫௩ | மனதினிற்...... .. | ௫௪ |
| உன்பாதமே... ... | ௰௫ | தனித்திருக்கச்... | ௫௧ | மனமுருகுதி ... | ௫௮ |
| எத்தனைத்தவ...... | ௫௯ | திருமுத்துப்பந்த | ௪௬ | மாணிக்கவாசகர் ... | ௪௪ |
| என்றுசென்று ... | ௩௨ | தீர்த்தமுதன்... .. | ௰௧ | மாயவித்தைசெய் | ௨௰ |
| என்னையென... ... | ௰௪ | தூக்கியபாதத்...... | ௩௪ | மையன்மிகவு..... | ௫௪ |
| ஐயனேநடன ..... | ௨௪ | தெண்டனிட்... ... | ௫௭ | யார்க்குத்தெரியு ... | ௩௩ |
| கண்டபின்கண்..... | ௩௰ | தெரிசனஞ்... ...... | ௩௰ | வருவார்வருவா .. | ௪௫ |
| கண்டவர்விண்..... | ௰௭ | தெரிசனமே... ... | ௩௮ | வேண்டாமிதெல்... | ௪௭ |
| கண்டாயோ...... | ௪௰ | தெரிசித்தளவி ... | ௨௰ | | |
| கலந்துகோள்...... | ௪௩ | தெருவில்...... ... | ௫௨ | | |


——*——

சிவமயம்.

சபாநாதர் பேரில்.

# மாரிமுத்தாப்பிள்ளைமுதல்

## சிலவித்வான்கள்பாடிய-கீர்த்தநம்-பதம்-இவைகளின் அகராதி


| கீர்த்தநம். | பக்கம். | கீர்த்தநம். | பக்கம் |
|---|---|---|---|
| அம்பலத்தாடி.................... | ௭௨. | ஏன்றந்தப்பராக்கு.................... | ௭௬ |
| ஆடவெடுத்தபாதம்.................... | ௭௮ | ஒருக்கால்சிவசிதம்.................... | ௬௪ |
| இதைவிடக்ஷேத்.................... | ௭௨ | காலைத்தூக்கிநின்.................... | ௬௬ |
| இன்னமுமொரு.................... | ௬௫ | சிவசிதம்பரமென்று.................... | ௬௪ |
| இன்னம்வயிரமுன்ற.................... | ௭௰ | திருக்கூத்திற்கு.................... | ௭௮ |
| உம்மைப்போலாட்டை.................... | ௬௯ | தில்லைச்சிதம்பரமே.................... | ௫௯ |
| உன்முகம்பார்த்த.................... | ௬௬ | தில்லைத்தலம்போலே.................... | ௭௭ |
| எந்தத்தலத்தையு.................... | ௬௧ | தெய்வீகஸ்தலமிந்த.................... | ௯௰ |
| எந்நாளும்வாசமாய்.................... | ௬௨ | தெரிசிக்கவேணும்.................... | ௭௯ |
| எந்நேரமுமொரு.................... | ௭௧ | தெரிசித்தபேனாய்.................... | ௫௯ |
| என்னகாரியத்துக்.................... | ௫௫ | பரந்தனையடைந்திட.................... | ௬௫ |
| என்ன துணிவாய்.................... | ௬௮ | பலமந்திரத்திற்கும்.................... | ௬௫ |
| என்னபிழைப்புன்.................... | ௬௯ | பாருங்கள்வந்து.................... | ௭௪ |
| ஏதுக்கித்தனைமோடி.................... | ௭௫ | வீடும்பலமாகி.................... | ௬௮ |
| ஏதுக்குதவியிந்த.................... | ௬௭ | | |


——✱✱✱——

உ

கடவுள்துணை,

—***—

# சிதம்பரம்

## சபாநாதர்பேரில்பாடியது.

—)*********(—

# முத்துத்தாண்டவர் கீர்த்தநம்.

—*****—

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி- ஜம்பைதாளம்,

பல்லவி.

பூலோககயிலாசகிரிசிதம்பரமல்லாற்- புவனத்தில்வேறுமுண்டோ......*

அநுபல்லவி,

சாலோக-சாமீப-சாரூப-சாயுச்சிய..........................*
சபைவாணராநந்தத்தாண்டவம்புரிவதாற்...... ... (பூலோக)

(சரணங்கள்,)

(௧) நாலுமஹாமேருவென்னும் நாலுகோபுர நிலையும் - நவரத்நமணி
களாலொளிர் சித்ரமதில்களும் - மேலுலகையள விடுதற்போலுயர்
ந்தேவெயில் - விரிந்தகப்பத்திரள்களுங் ... ... ... ... *
காலுலவுமாயிரக்கா - மணி மண்டபமும் நவசங்கையு நிறைந்தசிவ
கங்கையின் விசாலமும் - ஆலிலையின்மாலு மயனுமறியாத-பே
ரம்பலமேவுவோர்க் கற்புதம்புரிதலாற் ... ... ... (பூலோக)

(௨) வேதமுதலெனுமூல - நாதர்தூபியுமேரு - வில்லியார் சிவகாம
வல்லியார்கோயிலும் - மாதவர்விண்ணவர் முநிவர் - போதகர்வித்தி
யாதரர்- மாளிகைகள் சூளிகைகளும் ... ... ... ... ...*
ஏதமொருசத்துமணு - காதகட்டளைகளு - மிரவிபோ லிலங்குகின்ற
விந்த்ரவிமானங்களுங் - காதலுற்றேசண்ட - பூதலத்தோரெல்லாங்
காணநூறாயிரங் கண்வேண்டுமென்கையாற் ... ......(பூலோக)

(௩) மேவார்தொழுந்தில்லை - மூவாயிரம்புநிதர் - வீதியுஞ்சைவர்திரு
வீதியுமடங்களுந் ; தாவாதபசிதவிர - வாவாவெனுஞ்சத்ர-சாலைபு
ம்பலசோலையும் ... ... ... ... ... ... ... ... ...*

பூவாவிகளும்வயலும் - மோவாமலே பெருகு - பொன்னிநதியுந்தெருவு மன்னிபவளங்கண்டு - தேவார மூவர்முதற் - பாவாணரனைவருஞ் சிவஸ்லநதினிலதிகந் - தில்லைவனமென்கையாற் ... ...(பூலோக)

—*******—

கீர்த்தநம்- இ-ம்-கல்பாணி- ஏகதாளம்,

பல்லவி.

சேவிக்கவேண்டுமையா - சிதம்பரஞ்- சேவிக்கவேண்டுமையா ... *

அநுபல்லவி,

சேவிக்கவேண்டுஞ் சிதம்பரமூர்த்தியாந் ... ... ... *
தேவாதிதேவன் திருச்சந்நிதிகண்டு ... ... (சேவிக்க)

(சரணங்கள்)

(௧) காரானைமாமுகத் தைந்துகரத்தானை - கற்பகராயனை முக்குறுணியானைச்- சீரார்புலியூர்ப்பதிமேலைவாசல்வாழ்-தேவர்சிறைமீட்குஞ் சேவற்கொடியானை ..... ... ... ... ... ... ...(சேவிக்க)

(௨) சிங்காரமானசிவகங்கையின்மூழ்கிச்-சிவகாமிசந்நிதி முன்பாசவேவந்து- பங்காசவேபிரதக்ஷணமுஞ்செய்து - பத்தர்கள் சித்தர்கள்பணிவிடையோர்தொழச் ... ... ... ... ... ... .. (சேவிக்க)

(௩) சிட்டர்பரவுந் திருமூலத்தானைச்- சிற்றம்பலவென்னும்பேரம்பலத்தானை -அட்டதிக்கும்புகழம்பலவாணனை- ஆண்டவனைத்தில்லைத்தாண்டவராயனைச் ... ... ... ... ... ... ... ... (சேவிக்க)

(௪) நல்லதிருவிழாவானித்திருத்தேரும் - நாடெங்குமேபுகழ்நற் கோபுரநான்குந் -தில்லைமூவாயிரவர்வளர்வீதியுந்- திருமஞ்சநமுமார்கழிதரிசநமுஞ் ... ... ... ... ... ... ... ... (சேவிக்க)(௨)

—*********—

கீர்த்தனம்- இ-ம்- தோடி. ஏகதாளம்.

பல்லவி,

இன்னமொருஸ்தல - மின்னமொருகோயி ... ... *
லின்னமொருதெய்வ மிப்படியுண்டோ ... ... ......*

அநுபல்லவி,

பொன்னம்பலத்தினிற் - பூமலராலயன் ... ... ... ... *
போற்றுஞ்சிதம்பரர் பொற்பதமேயல்லால் ... (இன்னமொரு)

(சரணங்கள்)

(௧) காசிகமுக்குன்றங்காளாஸ்திரிகச்சி- கமலாலயந்திருவண்ணாமலையுடை

ராசியமானதெய்வங்கட்கொடுக்குமுநடனமுமிங்கேநள்ளினமுமிங்கே-இ
(௨) பாலானசந்திர சூரியர்மண்டலம்- பாரிந்திரன் பதிபற்றியமண்ட
லம்- பூலோகத்திற்றுக் கைலாசம் வைகுந்தம் – பிரம்ஹ மண்டலத்
துப்புதுமையமிங்கே ... ... ... ... .... (இன்னமொரு)
(௩) கரிசற்பிணிகள் பறந்துபோஞ்சிவ - கங்கையின் மூழ்கிச் சுகச
பைவந்து - தெரிசித்தவுடனிற் றேவனுமாவன்-தெரிசித்தாலாக்கண்டா
ற்றேவனுமாவன் ... ... ... ... ... ...(இன்னமொரு) (௩)

—*******—

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஜம்பைதாளம்,

பல்லவி,

தீர்த்தமுதன்மூர்த்தியுந்தலவிசேஷமுமெங்கள்-சிவசிதம்பரத்திற்றுனே,

அநுபல்லவி,

கீர்த்தநஞ்செய்யுமெய்ப்- பொருண் மூன்றுமொன் றென்று ... *
கேண்மையோடுவேதா- கமம்பகருமாகையால்........ ... (தீர்த்த)

(சரணங்கள்)

(௧)தெரிசித்தப்போதத்தமிரமனென்னுளும்- செலுத்தும் பாக்கியங்களு
ண்டாம்- பரிசுத்தபோதுலகுபதினைலும்ரட்சிக்கும் பதுமவிழியோனு
கலாம்- உருசிக்கும்பானீயமன்பாக வுட்கொள்ளிலுருத்திரன் பதவி
பெறலாம்- வருசிற்பராநந்த தீர்த்தமதிலாடவே மஹேசுரனுமே
யாகலாம் ... ... ... ... ... ... ... ... .... (தீர்த்த)
(௨) கல்லுமுதன்மணல் கணுந்துகள்களும்லிங்கமெனக் கருதும்வேதங்க
ளெல்லாந்- தில்லைதனிலுண்டான குளம்படியினீரெல்லாஞ் சிவகங்கை
யென்றுசொல்லலாம்- குல்லைமாற்புகழரிய கூபங்களாநந்தக்கூபமெ
ன்றேபகரலாம்- வல்லநடராஜர் பதங்களுமலேதலத்தில் வசித்தவரு
முத்திபெறலாம் ... ... .... ... ... ... ... ...(தீர்த்த)
(௩) சிந்தைமகிழ்சம்பந்தர்தரிசிக்கபாவருஞ்- சிவசரூப மானதிற முமு-
நந்திமுதலிந்திரர்மூவாயிரம்புநிதரும நாரணருந் தொழுதேத்தவே-
வந்துதெரிசித்தவர்க்குமாறுதபேரின்ப வாழ்வுதருகின்றபதமுங்- கந்
தமுறுகோதைச்சிவகாமிபங்கிடனமிடுகடவுளருள்வடிவாகையால்- (தீ)

—*******—

கீர்த்தநம்-இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்,

பல்லவி,

சிற்சபைதனிலேகண்டுகொண்டுகொண்டேனென்றும்..... *

அனுபல்லவி,

அற்புதக்கூத்தனைநாடி- அவனையெங்குந்தேடி- சிற்சபை... ✱

(சரணங்கள்)

(௧) வையந்தருஞ்சிவகாமிமாலே-கொன்றைமாலையென வணிந்தானைமாந்தர்க்குமுன்றாலே- செய்யும் நாள்வாசனையின்மேலே-கடற்-றிரையெனவேவரும்பிறவிதீரும்வகையாலே ... ... ... ... (சிற்ச)

(௨) அஷ்யவருக்கருள் புரிகுவானைப்- பண்டு - வரிபூசைக்குவந்துடன்சக்கரமளித்தோனைத் - துடியிடையாண்மலைமகள்பங்கோனை- அன்பாய்த்-தொழுவார்க்குக்கதிகொடுக்குந் தூயவெளியானைச்........ (சிற்ச)

(௩) தேவர்வான்கோனயன்மாலாதி-மெய்ம்மை - திகழ்மூவாயிரவரினொருவனென்றநீதி- மூவர்பாடற்கருளநாதி- வந்து- மூவுலகுந்தொழத்தில்லைதனிநடஞ்செய்ஜோதி ... ... ... ... ... ... (சிற்ச)

(௪) முனிவர்புரிதவமகிழ்ந்தேயென்று- இன்ப-முடிவிலாவருளளித்தமுதலேதாமென்று- தனியேநீயறிதியெனவின்று-நின்ற- சாட்சியைக்கண்ணுற்கனகசபையருகேநின்று ... ... ... ... ...(சிற்ச) (௫)

கீர்த்தனம்-இ-ம்.ஆகிரி- ஆதிதாளயும்,

பல்லவி,

நடனங்கண்டபோதேயென்றன்சடலஞ்செய்தபாக்கியமையா ...✱

அனுபல்லவி,

விடமணிந்தகண்டாமன்றுண்- மேவுமம்பலவாணனுவன் ... (நடனங்)

(சரணங்கள்)

(௧) அரியயனுந்தேடிக்காணு- வுருவமாய்நின்றகாரணு ... ... ✱
மருமலர்ப்பச்சிலைகொண்- டுருகுமன்பர்சிந்தையொன்று (நடனங்)

(௨) அன்னைதந்தைநீயேயென்றே- புன்னையேநம்பினேன் ... ... ✱
என்னையேநீகாக்கவேண்டுஞ்- சொற்னசபைநடராஜா.........(நடனங்)

(௩) பதஞ்சலிவியாக்கிரபாதர்திதயம்புகுந்தாண்டவனே ... ... ...✱
நித்தம்பிரியாச்சிவகாமி- நேசனேசிதம்பரநேசனே ...(நடனங்) (௬)

—✱✱✱✱✱✱—

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

பல்லவி,

ஈசனே-கோடிசூரியப்பிரகாசனே-கனகசபை

அனுபல்லவி,

வாசனேயாநந்தநடராசனே ... ... ... ... ...(ஈசனே)

(சரணங்கள்)

(௧) அறியேனெஞ்சினேசம்-பிறியேன் வருங்கருமம்- குறியேனறிவில்லா
தசிறியேனென்னை நீயாளாய்......... ......................... .........(ஈசனே)

(௨) நினையேனுனைவேடமும் - புனையேன் சிவகங்கையி - னனையேன்கொ
டியபதி - வினையேனுய்யவேயாளாய்............. ............. ...(ஈசனே)

(௩) துதியேன்வணங்காவஞ்ச-மதியேனென்றுனுன் சபா... ... ......... *
பதியேநம்பினேன்சிவ - கதியேதந்தென்னையாளாய்...... ஈசனே (எ)

———*———*———*———

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ஜம்பை தாளம்,

பல்லவி.

அம்பர சிதம்பர பரம்பர சதாநந்தவடிகளை மறவா தருளுமநுதிநமுமே

அநுபல்லவி.

செம்பொன்மலைச்சிலைவளைத்ததிவ்ய - பரமாநந்தசம்போ
சிவசங்கரஸ்ரீதாண்டவநடேசா...... ,,,,,, .........அம்பர

சரணங்கள்.

(௧) கங்கைமதி யரவசையக்-காதிற்குழையசையச் - செங்கைமழுத்துடி
யசையச்-சைவஜடை யசையப்- பொங்குபுலியதளசையப் பொற்பாத
ச்சிலம்பசைய-மங்கைசிவகாமவல்லி-மகிழநடம்புரியம்.....(அம்பர)

(௨) நின்மலநிராலம்ப - நிர்க்குண நிரஞ்சந - சின்ம யாநந்தபர சித்
குணசொரூப - வன்மலக்கோணிக்கி யருள்வாரி யுறவே யெனது-பு
ன்மையுறவுமைகாணப்பொதுவிநடம்புரியும் .. ...... ......(அம்பர)

(௩) துங்கமறையாகமங்கள் - சொன்னவிதிவழுவாமற் - சிங்காரமாபெங்
கள்செய்துநிதந்தினமு - மங்காததீருபுனைவைதிகமூவாயிரவர் - நம்
ஹோவென்றேபரவநாளும்நடம்புரியும்.......................அம்பர(அ)

———*———

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்,

பல்லவி

நீதயவாயென்னையாளா-யிரு-மாதவர்பாடுங்கள்காளா

அநுபல்லவி

நாதகிருடியதோளா-உமை-காதலாஞ்சிவத்தாளா- நீதய

சரணங்கள்.

(௧) ஒலிகடல்விடமுண்டதேபா-சிறு -புலியினதளுடையுடையா.............*
மெலியுமடியவர்சகாயா-பதஞ்-சலிபுலிபணிநடராயா..........(நீதய)

(௨) காலனைவதைசெய்தகாலா - புலிப் - பாலனையாண்டகபாலா... ......... ✱
வேலனைதருமநுகூலா - வைந்து - கோலனைவென்றதிரிசூலா ......(நீதய)
(௩) மூவர்பரவியநோதா - திரு - நாவலூரன்விடுதூதா... .. ......... ✱
யாவரும்தம்பினபாதா - மகா - தேவகநகசபைநாதா............நீதய(௩)

கீர்த்தநம் - இ-ம் - குறிஞ்சி - ஏகதாளம்.

பல்லவி

உனைநம்பினேனையா சரணம் - நாகம் ✱

அநுபல்லவி,

புனைசம்போநடராசாபுலியூர்வாழீசா ............உனைநம்பி

(சரணங்கள்)

(௧) இருவர்தம்பிசைகொண்டகாதா - தித்தியெனநின்றுநடனஞ்செய்யமிக்
கிதப்பொற்பாதா - திருநாவலூரன்விடுதூதா - தில்லைச் - சிவகாமியொ
ருபாகா சிதம்பரநாத... ... ... ... ... (உனை)
(௨) மழுவுழைதரிக்கின்றகையா - கொன்றை - மலர்மாலைபுனைகின்றவடி
சுடர்மெய்யா - எழுபுவிதிலக்கின்றதுய்யா - வன்ப - ரிடமாயிருந்தின்
பருடனுளுமையா... ... ... ... ... ... (உனை)
(௩) நெடியமாலயன்தேடிக்காணு - தெங்கும் - நிறைந்தவா வெனும்பெ
ல்லாமணித்திடும்பூணு - அடியவர்தொழுந்தமிழ்வாணு - தில்லை-யம்பதி
நடராஜாவம்பலவாணு... ... ... ... ... உனை(௰)

---✱---

கீர்த்தநம் - இ-ம் - ஆனந்தபைரவி - ஏகதாளம்.

பல்லவி

என்னையெனக்குத் தெரியச்சொல்லுவாய் - தில்லை - பொன்னம்பலத்தரசே

அநுபல்லவி

தன்னையறியுமறிவதுநீசத்துந்.................................. ✱
தப்பவொண்ணுதிப்போசாமிசமயம்...... ...... ......என்னை

(சரணங்கள்)

(௧) பூதமுநானல்ல பொறிபுலநானல்ல - ஓதுமநாதி யொருநான்குநா
னல்ல - போதக்கருவிபுறம்பல்ல வுள்ளல்ல - வாதமுநானல்ல வென்
றுமயங்கும்... ... ... ... ... ... ... (என்னை)
(௨) ஒளியல்லவிருளல்ல உடலிதிறைவதல்ல - வெளிசுநறுப்பல்ல - விளக்
கொத்ததல்ல - அளியுமவஸ்தையல்ல வவஸ்தைப்பிரிவதல்ல - தெளிவு
மறிவுமல்ல தெளியாததல்ல... ... ... ... ... ... (என்னை)

(௩) ப்ரசுநானல்லபதிபசுநானல்ல-பேசிலனுவுமல்ல பெரியவுருவுமல்ல-ஊசரீலக்கவிலங்கும்பொருளல்லகோசரமேயேகதேசமுமனல்ல- எ
(௪) சேர்ந்துவருவதல்ல சேராதிருப்பதல்ல - ஓர்ந்துகளிப்பதல்லவோராதிருப்பதல்ல - பேர்ந்து வருவதல்ல பேராத்தனியுமல்ல - தீர்ந்தவுயிரோதுதில்லைநடேசா... ... ... ... ... ... ... என்னை(௰௧)

கீர்த்தநம்-இராகம்-பரசுராகம்- ஆதிதாளம்.

பல்லவி.

உன்பாதமேதுணை ரக்ஷைசெய்யா - பஞ்ச
லென்பாரெனக்குவேறில்லைமெய்யாய் ... *

அநுபல்லவி

அன்பாகியம்பலத்தாடுமையா- வனல்வடி யெனவொளிர் பதசசபனன்முதலீரைநுதிநம்திறைசநகசபேசா...............(உன்)

(சரணங்கள்)

(௧) பலதெய்வமுந்தெய்வ மெனக்குறியேன்-நின்னை - யலதென் மனதிலொன்றையுமறியே - வலதெள்ள ளவுமில்லாச்சிறியேன் - மருவிய-விருவினை-யிருளற - வருளமரருமூல-கருமகிழ்-திருநடராஜா... (உன்)
(௨) எல்லளவினிற்சித்த மிரங்காதோ-வந்து - சொன்னதெல்லாத பராமுகமேதோ-உன்னைதழுதவுவதெப்போதோ - உடல்வினை-படவடர்-அடல்வினை கேடவொரு-மடவர-லொடுமிடும்- நடநவிநோதா...(உன்)
(௩) இனியொவ ரெனக்கென்குறைதீரா-போக - முநிவ்வாணாவாழ்வித்தவுபகாரா- தனியாம்பேரும்பெற்றபுலியூரா-சயமிகு-புயவலி - மூயலக-னெனியமனியபத-மருள்தம்-நியசபைநாதா...............(உன்)

—*—

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டிகம்-அடதாளம்.

பல்லவி,

சந்ததமுன் பாதசேவை தந்தென்மேற்கிருபைபாராய்

அநுபல்லவி

செந்திருமேவும்புலியூர்வாழ்சிற்சபைநடேசஸ்வாமி(சந்த)

சரணங்கள்

(௧) பண்சிலம் போசையுளிக்கப்-பாவியேன்வினையொளிக்க.........*
கண்களாநந்தந்துளுக்க-கண்டென்மனதுட்களிக்க... ... ...(சந்த)
(௨) சிந்தூரப்போர்வையுமாடத் - தேவர்கள்நான்மறைபாட.........*
ஐந்தெழுத்துருவப்நாட-வணிமலர்தூவிக்கொண்டாச்... ... ...(சந்த)

(கூ) பங்கயத்தயன்மால்காணுப்-பாதனேபொற்பணிப்பூணு... ......*
தந்ருவிவ்வாசுதிதாணு-சம்புவேயம்பலவாணு........ ... ...சந்த(யரு)

—*—

கீர்த்தநம்-இ-ம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி

சித்தரின்னமுண்டோ-பூலோகத்திற் - சித்தரின்னமுண்டோ*

அநுபல்லவி

அத்தர்தில்லைவாழுமம்பலவாண.......................*
ராதந்தத்தாண்டவராயரல்லாமற்-சித்தரின்னமுண்டோ.

சரணங்கள்,

(க) ஒப்பிடுவித்தைகளெப்படிபுலகத்தி - லுடலேசெப்பாக- வுயிரே பந்தாகச் - செப்பிடுவித்தைகள் விளையாடியபின்பு - செப்புமில்லை பந்துமில்லையென்றொளிக்குஞ்.............(சித்தரின்னமுண்டோ)

(உ) இதஞ்சொல்லிக்கின்னரர் கிம்புருடர்பாட - விடந்தனிலம்பிகை கண் களிகூடப்- பதஞ்சலிவெம்புலியஞ்சலிபண்ணப் - பதஞ்சலிபாமற்ப தஞ்சலிபண்ணுஞ்.................... ........(சித்தரின்னமுண்டோ)

(ரு) மாலொடுபிரமனுந்தேடரிதான - மலர்ப்பாதங்கண்டு உணர்ந்தெதெ ரிசிக்கச் . சாலோகசாமீபசாரூபசாயுச்யந் - தந்தருள்தாண்டவ ராய ரல்லாமற்...................... .........சித்தரின்னமுண்டோ(யச)

—*—

கீர்த்தநம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்.

பல்லவி

காணுமலிருந்தாலென்- கலக்கந்தெளியாதே

அநுபல்லவி

பூணரமரவணிந்த-பொன்னம்பலத்தானை-காணுமலிருந்தாலென் ... ...*

சரணங்கள்.

(க) திரிபுரத்தையெரித்தானைச் - செங்கையின்மான்தரித்தானைக் - கரியுரி த்துப்போர்த்தானைக்-கங்கைமுடித்தானை-அரியயனுந்துதித்தானை-யஞ் செழுத்தாயுதித்தானை - உருவிலியையெரித்தானை - யொருவெண்ணீ ற்றனைக்...................... ...........(காணுமலிருந்தா)

(உ) தலைமாலைதரித்தானைத்-தக்கன்சிரந்துணித்தானை - உலகெலாம் நிறை ந்தானை-யுவமையில்லானை-மலைத்துவாய்வளைத்தானை மறலிவிழவுதைத் தானைக்-கலைமதியைப்புனைந்தானைக்-கண்மூன்றுடையானைக்,(காணும)

(௩) நாலுங்கோபுரத்தழகும்-நன்மதின்மண்டபத்தழகுஞ்- சீல்மிகுந்தெரு வழகுஞ்- சிவகங்கையழகும் - ஆலமிடற்றினிலழகு- மாமேமல்லத்தழ கும்-பாலின்மொழியுமையழகும்-பரமா நந்தத்தழகும்(காணுமே) (௰௫)

—*******—

கீர்த்தநம்-இ-ம்.ஆகிரி-ஏகதாளம்,

பல்லவி,

கண்டவர்விண்டிலரே - யநுதினம் - விண்டவர்கண்டிலரே *

அநுபல்லவி,

கண்டவர் விண்டிலர்-விண்டவர் கண்டிலர் ... ... ... ...*

அண்டரண்டங்கடந்தாதி சோதிபாதங் ... ... ... (கண்டவர்)

(சரணங்கள்)

(௧) முத்திபத்திசத்தி - முப்பால்விளைவதல்ல - நெற்றிபொற்று மொருநீ லமை தானுமல்ல - தத்தெய் யென்று தாள மத்தள மதிரவே- தித் தியென்றுமன் றுளாடுந்திருக்கூத்தை... ... ... ...(கண்டவர்)

(௨) அந்தக்கரணமொருநான்குசத்தாதி - யைந்துமடக்கியறிவுடன் கூடி ச்- சந்தித்துநின்றருள் சற்குருவும்போற்றும் - அந்தமதாகியவானந் தநடனத்தைக் ... ... ... ... ... ... ... (கண்டவர்)

(௩) ஒவ்வுதானுமல்ல- வெளவ்வுமிவ்வுமல்ல- நவ்வுஞ்சிவ்வுமல்ல நாதநடுவ வணையிற் - சிவ்வுமவ்வுமல்ல சேர்ந்தவட்டமல்ல - அவ்வுமுவ்மதல-வா திருக்கூத்மநடநங் ... ... ... ... ... (கண்டவர்) (௰௬)

—*******—

கீர்த்தநம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி,

பாத்தரிசனஞ்செய்யும்போதே - செய்த... *

பாவம்வேறுண்டு நிஜபலமானதே... ... ...*

அநுபல்லவி

வேதம்பரவுந்தில்லைமன்றுண்மீதேமெத்த- மிடுகுள்ளகாளியுந்திடுக்கிட வுலகமும்-நடுக்கிடத்திருர்தியென் -றடுக்குடனடித்திடும்- (பாததரிசனம்)

(சரணங்கள்)

(௧) பத்தியுடனேபூஜைபண்ணும்பாலன்- தன்னைப் - பற்றிப்பிடிக்கவந்த பாசக்காலன்- தத்திவிழவேயுதைத்தருள்காலன் - வெற்றித்தாண்டவம் புரிந்தென்னை யாண்டவனெனவரு- மாண்டவனொலும்பையும்புண்டவ ர்சிலம்பணி ... ... ... ... ... ... ... (பாததரிசனம)

(௨) சுந்தரமூர்த்தியார்தமிழுக்காக- வும்பர்- தொழுதிடத் தூதுக்கிசைந்
தன்பாக- அந்தமின் பரவைக்குருள்பதாக-வந்த- வரகாசிவதிளிபுரிமெரி
படநகை- புரிவோதர் பரமரகசியமான ... ... ... ...(பாததரி)
(௩) ஆலவிடம்மருந்துஞ்சர்வேசன்-கங்கை-யணிந்தவன்கயிலைமா மலைவாச
ன்- மாலுக்கிளையவுமைமகிழ்நேசன்-சதுர்-மறைவுரி முடிமிசையணை
பவன்மூல்நிகக்- கறைவிடவரவொடு பிறையையுமணிபவன்(பா) (௧௭)

——*——

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்,

பல்லவி

ஆடினதெப்படியோ- நடநம்நீ- ராடினதெப்படியோ ... *

அனுபல்லவி,

தேடியமெய்ப்பொருளே - வனமேவுஞ் ... ... ... ... ...*
சிதம்பரத்தேயொருசேவடி தூக்கிநின் ............ ... (ரூடின)

(சரணங்கள்)

(௧) ஒன்றல்லரண்டல்லஒன்றிரண்டுமல்ல-நன்றல்லதீதல்லநாத விந்துமல்ல
அன்றல்லவின்றல்லயாதியந்தமல்ல-மன்றுண்மரகதவல்லிகொண்டாட.
(௨) ஆணல்லபெண்ணல்லவன்றியலியுமல்ல - காணரூபமல்ல காணாதரூப
மல்ல- சேணல்லவேயொரு தேவர்க்குள்ளேதேவ- வானுதற்பச்சைம
டந்தைகொண்டாட.......,.................. ......(ஆடினதெப்ப)
(௩) பூதங்களல்ல புறம்பல்லவுள்ளல்ல- வேதங்களாலே விளங்கும்பொரு
ளல்ல- ஆதவன்போலே யசையும்வடிவல்ல - மாதுமையாள்பச்சைவ
ல்லிகொண்டாட... ... ... ... ... ... (ஆடினதெப்படி)
(௪) பஞ்சவர்ணமுமல்ல- பஞ்சபூதமுமல்ல - நெஞ்சிநினைவுமல்ல நினை
விற்கனவுமல்ல-அஞ்சு முகமுமல்ல.வாருதாரமுமல்ல-வஞ்சிமரகதவல்
லிகொண்டாட... ... ... ... ... ...(ஆடினதெபப) (௧௮)

—***❋***—

கீர்த்தநம்-இ-ம்-மோகனம்-ஏகதாளம்,

பல்லவி

ஆடிக்கொண்டாரந்தவேடிக்கைகாணக்கண்- ணாயிரம்வேண்டாமோ

அனுபல்லவி,

நாடித்துதிப்பவர் பங்கிலுறைபவர் ... ... ... ... ...*
நம்பர் திருச்செம்பொன்னம்பலவாணர் (ஆடிக்கொ.ண்டா)

(சரணங்கள்)

(௧) பங்கப்பாதச்சிலம்பசைந்தாடப் - பாதச்சதங்கைகள் கிண்கிணென்று
றாடப்- பொங்கமுடனேயுரித்துத்தரித்த புரித்தோலசைந்தாடக் - செ
ங்கையிலேந்தியமான் மழுவாடச்- செம்பொற்குழைகண் முயலகனாட
க்- கங்கையிளம்பிறைச்செஞ்சடையாடக் கனகசபைதனிலே (ஆடிக்)

(௨) ஆரதவமணிமாலைகளாட- வாடுமரவம்படம்விரித்தாடச்-சீரணிகொ
ன்றைமலர்த்தொடையாடச்சிதம்பரத்தோராட - பேரணிவேதியர்தி
ல்லைமூவாயிரம் பேர்களும் பூசித்துக்கொண்டு நின்றாடக் - காரணிகா
ளியெதிர்த்து நின்றாடக்கநகசபைதனிலே...... ... (ஆடிக்கொண்)

(௩) தீர்த்தகணபதிவேலர் நின்றாட- நின்றயன்மாலுட னிந்திரனாட-முப்ப
த்து முக்கோடிதேவருடனே முனிவரும்நின்றாட - மெய்ப்பத்திமேவு
ம்பதஞ்சலிபாட- வியாக்ரமபாதரும்நந்தியுமாடத் - கொப்புற்றகாதா
ள்சிவகாமியம்மையுங் கூடவேநின்றாட .........(ஆடிக்கொண்) (௰௧)

—*—*—•—

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி,

சம்போசங்கரமகாதேவா சதாசிவ- சம்போசங்கரமகாதேவா ... *

அனுபல்லவி,

செம்பொற்சபையினடஞ்செய்யுஞ் சிதம்பர ஹரகரசிவ... ... (சம்)

(சரணங்கள்)

(௧) அரிமாற்பிரமற்கரியோனே. சித்தந்தெளிந்த - வன்பாதமக்குரியோ
னே- புவனங்களில்- திரியுமுப்புரமெரிசெய்த- சச்சிதாநந்தபர (சம்)

(௨) அன்வரதத்தாண்டவராயா- கைலைவெற்பை - பசைத்தவனைரட்சித்த
நேயா- மருவார்கொன்றை-புனலொடுமதி தும்பைபுனைடுஞ் - சிற்ப
ர ஹரஹரசிவ ... ... ...... ... ... ... (சம்போசங்கர)

(௩) இருமுனிவர்க்கருளும்நாதா- மூவாயிரவ - ரொன்று மர்ச்சனைசெய்
பொற்பாதா- வெனையாண்டருள்- திரிபுராசிவகாமிதினமும் மருவிய
ஹரஹரசிவ ............................(சம்போசங்கர) (௰௨)

—)*********(—

கீர்த்தநம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி,

ஆடியபாதா - விருவர் -பாடியகாதா *

அனுபல்லவி,

நீடியவேதா - தில்லை - நீகர்த்தவிநோதா - ஆடியபாதா... *

(சரணங்கள்)

(௧) இருமுநிவருமொரு- நிருபனுமருகினில்............... ............ *
உருகியுருகிமனம்ஹரஹரவெனவே... ...... ... ... (ஆடியபாதா)
(௨) அந்தரதுந்துபி யுந்துடியந்தவில் .... ... ... ... ... *
திந்திமிதிமிதிமிதிந்திமியெனவே ... ... ... (ஆடியபாதா)
(௩) கும்பமுனையுமையாள்- சம்ப்ரமத்தொடுகாண...... ... ...... *
உம்பர்தொழவருசிதம்பரந்தனில் ... ... ... ...(ஆடியபாதா)

——*——

கீர்த்தனம்-இ-ம்-கர்நாடகசாரங்கம்-ஏகதாளம்.

பல்லவி.

தெரிசித்தளவின்முக்திபெறலாம் - புலியூரானைத் *
தெரிசித்தளவின்முக்திபெறலாம் ... ... *

அனுபல்லவி

தெரிசித்தளவின்முக்தி- பெறலாம்புலியூரானைத் ... ...... *
திகம்பரநடம்புரிசிதம்பரதேவனைத்... ... ... (தெரிசித்)

சரணங்கள்.

(௧) அரனைமன்மதனைச்சங் கரனைமான்மழுவேந்துங் - கரனைச்சடையிற்
சங்கா தரனைப் பரனைச்சருவதயா- பரனைப்பாதிகம் - பரனைத்தில்லை
யில்வாழ்சிதம் பரனைச்சங்கரனைத் ... ... ... ... (தெரிசித்)
(௨) மாயனையாண்டவு பாயனைமலைமகள்- நேயனையழிவில்லாக்காயனைத்
தி- தூயனைவைபோக ராயனைநால்வேத- வாயனைத்தாண்டவ ராயனைச்
சிவாயனைத்... ... ... ... ...... ... ... ......(தெரிசித்)
(௩) ஈசனைசிற்பர நேசனையதிகப்ர - காசனைக் கைலாசவாசனைப்பூசனை
செய்யுமன்பர்- நேசனைத்திரிபுர - நாசனைச்சிவகாமி நேசனைச்சபே
சனைத்............... ..............................(தெரிசித்த) (௨௨)

—*******—

கீர்த்தனம்-இ-ம்-கேதாரகௌளம்-ஏகதாளம்.

பல்லவி

மாயவித்தைசெய்கிறானே-யம்பலவாணன்-மாயவித்தைசெய்கிறானே *

அனுபல்லவி.

மாயவித்தைசெய்கிறான்- காயமொன்றெடுத்துக்கொண்டு ... *
நேயமானவெளிதன்னி லுபாயமாய்கூடித்திரிந்து........ (மாய)

(சரணங்கள்.)

(க) உன்பெண்ணிவைக்கிறான் கொண்டுகொண்டு போகிறான் - நன்றாக்கு
ம்தீ்மைக்குமதமவாயிருக்கிறான் - பண்டுநாளும்வெளி யெங்கும்பாமொ
ங்குக்கணவொண்ணான் - அண்டர்தொழ வம்பலத்திலெண்டிகட்டியா
டிக்கிறான்..... ... ......... ... ,.. ...(மாயுவித்தை)

(உ) உண்கிறான்உறங்கிறான் உருவார்தேரோட்டுறான், சக்கிதத்தை மீட்டு
றான் தாமேனாதிபக்காட்டுகிறான்-மங்கையுடன் கூட்டுறான்மலைகீ கண்கள்
காட்டுறான்-அங்கலிங்கபீடமாக விங்குமங்கு மாயமைசந்து - (மாயவித்)

(௩) கூட்டுகிறானெகுசண்டை மூட்டுறான்தத்துவத்தின் - மாட்டுறானவ
கம்பாராட்டுறான்பின்னையுமோர் - ஆட்டிடையனம்பலத்திலஞ்சாடுமேய்
க்கிறவன்-காட்டுமெய்யிலா றுக்கப்பால் வீட்டிலேகுடியிருந்த (மா)

(௪) மண்ணுமலவின்னு மல்ல வாய்வுமல்லதேய்வுமல்ல - பெண்ணுமல்
லவானுமல்லபேசாமனின் றவிடம்- ஒண்ணிவிருந்தஞ்சையுமுண்டுபுண்
ணிக்கொண்டவன் - கண்மாயக் காரனென்றுங்கைக் குள்ளேயுஞ்சிக்
காமல்... ... ...... ... ... ... ... (மாயவித்தை)(உ௩)

—*—

கீர்த்தநம்-இ-ம்-பியாகடை-ஏகதாளம்.

பல்லவி

ஆட்டுக்காலைத்தாரும்-என்சாமிவா-தாட்டுக்காலைத்தாரும்...*

அநுபல்லவி

ஆட்டுக்காலைத்தேடியம்பலவாணரே... ...... ... ...... ...*
காட்டிப்புலியும்பாம்புங்காத்துக்கொண்டியிக்குதே.. (ஆட்டு)

சரணங்கள்,

(க) கின்னரர் கிம்புருடராதியர் வீணையர்கெருட காந்தருவர்சித்யவித்யா
தரர்-தன்னிகரில்லாத தந்திரர் மந்திரர் - சரணஞ்சரணமென் றிருகை
கூப்பிநிற்கப் - பொன்னின் விமானத்தர்சிவிகைவாகனத்தர் பூதகண
ங்கியர்போற்றியடிவிரும்ப - அன்னவாகனத்தன்விண்ணிலேறவாயனாட்
டுக்காலைத்தேடிக்கோட்டுப்பன்றியாயினான்... ... ...(ஆட்டுக்காலை)

(உ) முப்பத்துமுக்கோடி தேவர்குழாங்களும் முனிவரானவரும்ரிஷிகளா
னவோருஞ் - செப்பமான சந்திராதித்தருங்கூடிச் செயஜெயென்று
பாதந்தம்மைத் தேடுகிறார்கள் - ஒப்பில்லாத காளியம்பலத்தேனின் று
வுன்றன்றுலைக்கண்டு தொந்தோமென்றுடுறான், மெய்ப்பாதாகுமத்த

க்காலை யெனக்குந்தந்தால் வேண்டு மறுபத்தஞ்சாம்விளை. பட்டாகு
ஞ்சாமி... ... ... ... ... ... ... (ஆட்டுக்காலைத்தாரும்)
(௩) ஆக்கியதிசைவளர்திக்குப்பாலகரு மாதிவைரவரும்நாதரனைவருந்-தா
க்கியதாவர சங்கம கோடியுஞ் சந்தித்துப் பாதத்தைக்காத்துக் கொண்டி
ருக்கவே - பாக்கியஞ்செய்தவன் முயலகனொருகாலைப் பத்திமுதுகணையி
ல்வைத்துச்சுமந்துகொண்டான் - தூக்கியபொற்றாளை யெனக்குத்தந்தா
ற்றலைசுமக்குஞ்சுமக்கும்போதும்போதுஞ்சாமியிந்த(ஆட்டுக்காலை(உ௬)

—*—

கீர்த்தநம்-இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சாமிதரிசனங்கண்டு-சபலமானேனானே...*

அநுபல்லவி

வாமியொருபாகர்சபைவாணராதினாயில்-சாமிதரிசனம்,

(சரணங்கள்)

(க) அநுதினமுமடிபோற்று மடியர்தமைநினையாத - மனிதனையுமீடேற்
றவரமருளவே தனனவெனவேபாதசாஸ்திரவிதிதவறு மற்றினமுமு
மைகாணநடஞ்செய்தருள்சிற்சபையில் ... ... ... ... (சாமி)
(உ) சோமனுயர்நதியரவுதூயதாகியகொன்றைத் - தாமமணியுஞ்செஞ்ச
டாபாரனார் - பூமன்முதன் முனிவோர்களேம மாதவருடன்- சாமள
சொரூபர்பணிபேமசபைதனிலே... ... ........ ... ...(சாமி)
(௩) தேவாதிதேவருந் தில்லைமூவாயிரரும் - பாவாணர் மூவர்தமிழ்பகரடி
யரும்-நாவாரமேபுகழ்ந்து பூவாலர்ச்சனைசெய்து - காவாவென்றேதுதி
க்குங்கனகசபைதனிலே... ... ........ ... (சாமி) (உ௭)

—*******—

கீர்த்தநம்- இ-ம்-கல்யாணி- ஏகதாளம்,

பல்லவி.

அம்பலவாணர்நீரோ-தென்புலியூ- ரம்பலவாணர்நீரோ.........*

அநுபல்லவி

அம்பலவாணர்நீரோயன்பர்க்கன்பானசுவாமி .........*
செம்பொற்கிளிமொழியாள்சிவகாமிநாதர்நீரோ(அம்பல)

சரணங்கள்

(க) காலனையுதைத்தீரோ காமனையெரித்தீரோ ... ... ... ... ...*
வேலனையீன்றீரோவேகவஸ்துவுநீரோ ... ... ... ... (அம்பல)

(உ) திரிபுரமெரித்தீரோ திங்களைத்தரித்தீரோ... ... ... ... ... ... ... ...*
கரியையுரித்தீரோ காலகாலருநீரோ... ... ... ... ... ... ... ... (அம்பல)
(ரு) இடைபிங்கலையுநீரோ யேகப்ரம்மமுநீரோ ... ... ... ... ... ... *
விடையின்மேல்வருவீரோ வெட்டவெளியுநீரோ... ... (அம்பல) (உ.சு)

—*—

கீர்த்தனம்- இ-ம்- நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி,

ஆராராசைப்படார்-நின்பாதத்திற்-காராராசைப்படார்-அருள் ... ... ... ... *

அனுபல்லவி

யாராய்ப்பதந்தாராய்துயர்தீராய்புலியூராய்-நின்பாதத்திற்-காரா... ... *

(சரணங்கள்)

(க) கனகமேனியன் பங்கசயனன்கஞ்சனுடன் பதஞ்சலிபுலிபோற்ற,அத வரதமூங் கநகசபையுளாடிச் சிவந்தென்னைத்தேடியபாதத்திற் (காரா)
(உ) பாவித்தவெங்கநற்போதுற்றவந்தகன் பாசத்தின்மேவிய நேசிப்ப தேதுன்னைச் - சேவித்தவேளையிலே முத்திபாலிக்குந்தேவேயென்னையா ண்டகோவே நின்பாதத்திற்... ... ... ... ... ... ... ... ... ... (காரார்)
(ரு) அருவரைதன்னையொருபதுகையா லசைத்துப்பலங்கொண்டெடுத்த ராவணன் - ஒருபதுசிரம் நெரிபவேமுன் னொருவிரலூன்று மருமலர் ப்பாதத்திற் ... ... ... ... ... ... ... ... (காரார்)
(சு) மூவாயிரவரும் பூவார்மனிதரும் முப்பத்துமுக்கோடிதேவர்முனிவ ரும் - தேவாதிதேவனே வாவாவென்றேத்திடுந் தேவாசிகாமி நேசாநி ன்பாதத்திற்... ... ... ... ... ... ... ... ... ... (காரார்) (உஎ)

—*********—

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி,

நானேமுழுதுநம்பினேன்-கனகசபை-யானேநின்பதத்தானே... ... ... ... *

அனுபல்லவி,

ஆனேவாகனம்ாகக்கொண்டோனே-பலியூ... ... ... ... ... ... ... *
ரானேயதியேநான்சிறியேன் பிரியாதருள்செய்வாய் (நானே)

(சரணங்கள்)

(க) விடியாமிடியாற் கொடியார் பக்கவிற்நவிழ்ப் படியாதருள் செய்யவு ங்-குடியாயிருக்குமுன் னடியாருடனே யென்னைக்-கூட்டாய்-நாட்டா ய்-காட்டாய்-திருநடநம்... ... ... ... ... ... ... ... ... ... (நானே)

(௨) கனவிலுநனவிலுமனதிலுமுன்னைநாடிக் கவிபாடித்துதிசெய்யவுந்தி-
னமும்வந்தாமே யருளுமுன் பதியை யெண்ணித் திருநாள் - வருநா-
ளொருநாளுனைககண்டு... ... ... ... ... ...........(நானே)
(௩) அந்தரி சிவகாமசுந்தரி மணவாளாவந்தரிதொழுந்தாளா - திந்திரிடி
குடிகு திந்திமி யெனவாடுஞ்-சிவனே - சிவனே - சிவனே - துணையெ
ன்று..................................................(நானே) (உஅ)

—*****—

தாளக்கீர்த்தனம்-இ- ம்-கெவுளிபந்து-ஏகதாளம்,

பல்லவி.

ஐயனேநடனமாடியபொற்பாதா- ஆனந்தக்கயிலாயனே..............*

அநுபல்லவி,

துய்யனேதிருச்சபைதனில்தாண்டவந்.........................*
தோகுஜெம்தரி தாகுதித்திமி-திதர்கமென்றொருபாதந்தூக்கிய,ஐய

(சரணங்கள்,)

(௧) கங்கை சடைக்கணித்த கருணேசாதவளங்கா - அங்கையின் மழுவேந்
துமரனேபரமலிங்கா-செங்கைபார்ப்பதி பங்கினுறும்வெள்ளிச் சங்கா-ஜே
குஜெம்தரிதோகுதித்திமி-திகுர்தமென்றொருபாதந்தூக்கிய(ஐயனே)
(௨) வேழமுகனைப்பெற்றவிமலநமச்சிவாயா- ஆழிதரித்தமைத்துனனாமுகு
ந்தனேயா - சோழன்கைவெட்டுண்டது யாவும்பர்சகாயா, ஜோகுஜெ
ம்தரிதாகுதித்திமி-திகுர்தமென்றொருபாதந்தூக்கிய ......(ஐயனே)
(௩) சித்தஜனுடன்புரமெரித்தபாபநாசா- உத்தண்டர் சர்வேசாவுமைம
கிழ்ந்திடுநேசா - சத்திமாகாளிமுன்றலைகுனிந்திடவேசித்தாகுஜெம்தரி
தோகுதித்திமி-திகுர்தமென்றொருபாதந்தூக்கிய... ... ...(ஐயனே)

—***—

தாளக்கீர்த்தனம்-இ-ம்-தோடி-சாபுதாளம்.

பல்லவி

ஆடியவேடிக்கைப்பாரீரையா - ஆடியவேடிக்கைப்பாரீர்... *

அநுபல்லவி,

தேடியமாலயன்காணாதபாதர்-தில்லைமூவாயிரவர்கண்டதிதர் ... ...*
தாடொழுவார்க்கருணல்கும்பிரக்கியாதர்-தம்பரமானசிதம்பரநாதர் *
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கததோம்-திரிகிட....................*
ததிங்கத்தோம்- திரிகிட- ததிங்கத்தோம்....................................*
தாகுசேகிணசேகிணங்கிட-ததிங்கத்தோம்-திரிகிட........................*

தத்திங்கத்தோம்-திரிகிட-தத்திங்கத்தோம்-கிடத... ... ... *
தத்திங்கத்தோம்-கிடத-தத்திமிதித்திமிதெய்தெய் ... ... *
தத்திங்கத்தோம்-கிடத-தத்திமிதித்திமிதெய்தெய் ... ... *
தாம்தருந்தரி-தரிகுதிரிகுகு-தரிகுஜெம்தரி... ... ... *
தாம்தருந்தரி-தரிகுதிரிகுகு-தரிகுஜெம்தரி ... ... ... *
தந்த திந்தந்-தந்தணந் தணந்திமி ... ... ... ... ... *
தந்ததிந்தந்-தந்தணந் தணந்திமி ... ... ... *
தந்த திந்திமி-தக்கிடத-திக்கிடததக ... ... *
தந்த திந்திமி-தக்கிட-திக்கிடதக........................... *
தத்தடிங்கு-தடிங்குடிங்குகு ... ... ... ... ... *
ததணதஜெணுத-ததணதஜெணுத... ... ... ... ... *
தத்ததிங்கணத்தோம்.......................................... *
தத்திங்கணத்தோம்-தத்திங்கணத்தோமென (ஆடிய வேடிக்கை)

[சரணங்கள்,]

(க) அதிரும்வானன்கூட முழவோசைதிசைமுட்ட - வந்தரதுந்து
பி நாதமகிலமெங்குமெட்ட - சதுர்முகனிசைக்கொத்தங்கருகிற்று
ளந்தட்ட-சதியநிருந்தபன்றுதை தூக்கிமத்தளங்கொட்ட.............*
தாகுசேகிண சேகிணக்கிட-தத்திங்கத்தோம்-திரிகிட.............*
தத்திங்கத்தோம்-திரிகிட-தத்திங்கத்தோம்.......................*
தாகுசேகிண சேகிணங்கிட-தத்திங்கத்தோம்திரிகிட ........*
தத்திங்கத்தோம்-திரிகிட-தத்திங்கத்தோம்கிடத.....................*
தத்திங்கத்தோம்-கிடத-தத்திமிதித்திமிதெய்தெய்............ *
தத்திங்கத்தோம்-கிடத-தத்திமிதித்திமிதெய்தெய் ... ... *
தாம்தருந்தரி-தரிகுதிரிகுகுதரிகுசெம்தரி... ... ... *
தாம்தருந்தரி-தரிகுதிரிகுகு-தரிகுசெம்தரி...... ...... *
தந்ததிந்தந்-தணந் தணந்திமி ... ... - ... *
தந்ததிந்தந்-தணந்திணந்திமி.......... ... ... ... *
தந்ததிந்திமி-தக்கிடத-திக்கிடததக ... ... ... ... *
தந்ததிந்திமி-தக்கிடத-திக்கிடததக ... ... ... *
தத்தடிங்கு-தடிங்கு டிங்குகு ... ... ... ... ... *
ததணத ஜெணுத-ததணத ஜெணுத ... ... ... *
தத்ததிங்கணத்தோம் ... ...... ... ... *
தத்திங்கணத்தோம்-தத்திங்கணத்தோமென (ஆடியவேடிக்கை)

(உ) விரித்தசெஞ்சடையாட - விளங்கு குண்டலமாட - மெண்கை மான்மழுவாட - மேனியிற் பொடியாடத் - தரித்தவெம் புரியதண் மருங்கிலிசைந்தாடத் - தண்டைகிண்கிணி யிருதாளி லிசைந்தாட... ... ...... *
தாகுசேகிண சேகிணங்கிட - ததிங்கத்தோம் - திரிகிட... ... *
ததிங்கத்தோம் - திரிகிட - ததிங்கத்தோம்... ... ... ...*
தாகுசேகிணசேகிணங்கிட - ததிங்கத்தோம் - திரிகிட... ... *
ததிங்கத்தோம் - திரிகிட - ததிங்கத்தோம் - கிடத... ... *
ததிங்கத்தோம் - கிடத - தத்திமி தித்திமி தெய் தெய்... ... *
ததிங்கத்தோம் - கிடத - தத்திமி தித்திமி தெய் தெய் ... ... *
தாம்தகுந்தரி - தரிகு திரிகுகு - தரிகுஜெம்தரி... ... ... *
தாம்தகுந்தரி - தரிகு திரிகுகு - தரிகுஜெம்தரி ... ... *
தந்ததிந்தந் - தந்தணந்தணந்திமி.. ... ... ... *
தந்ததிந்தந் - தந்தணந்தணந்திமி... ... ... ... *
தந்ததிந்திமி - தக்கிடத - திக்கிடததக... ... ... *
தந்ததிந்திமி - தக்கிடத - திக்கிடததக... ... ... ... *
தத்தடிங்கு - தடிங்குடிங்குகு... ... ... ..... *
ததணதஜெணுத - ததணத ஜெணுத... ... ... ... ே
தத்ததிங்கணத்தோம்... ... ... ... ... *
ததிங்கணத்தோம் - ததிங்கணத்தோமென.......... (ஆடியவேடிக்கை)

(௩) நன்மைசேர் தும்புருநாரதரிசைபாட - நாதபிரம்மாநந்தத்தழுந்தியாவருந்தேடத் - தம்மெய்ம்மறந் திருமாதவர் கூத்தாடத் - தையலுமைமகிழ்கொண்டிருவிழிநாட... ... ... ... ... *
தாகுசேகிணசேகிணங்கிட - ததிங்கத்தோம் - திரிகிட... ... *
ததிங்கத்தோம் - திரிகிட - ததிங்கத்தோம்... ... ... ... *
தாகுசேகிண சேகிணங்கிட - ததிங்கத்தோம் - திரிகிட... ... *
ததிங்கத்தோம் - திரிகிட - ததிங்கத்தோம் - கிடத... ... ... *
ததிங்கத்தோம் - கிடத - தத்திமிதித்திமிதெய்தெய்... ... ...*
ததிங்கத்தோம் - கிடத - தத்திமிதித்திமி தெய் தெய்... ... *
தாம்தகுந்தரி - தரிகுதிரிகுகு - தரிகுஜெம்தரி... ... ... *
தாம்தகுந்தரி - தரிகுதிரிகுகு - தரிகுஜெம்தரி... ... ... *
தந்ததிந்தந் - தணந்தணந்திமி... ... ... ... *
தந்ததிந்தந் - தணந் தணந்திமி... ... ... ... ... *
தந்ததிந்திமி - தக்கிட ததக்கிடததக... ... ... *

தந்ததிந்திமி-தக்கிடத தக்கிடததக... ... ... ... *
தத்தடிங்கு-தடிங்கு டிங்குகு... ... ... ... ...*
திதணத ஜெணுத-திதணத செணுத... ... ... ...
தத்ததிங்கணத்தோம்... ... ... ... ... *
திதிங்கணத்தோம்-ததிங்கணத்தோமென............(ஆடியவேடிக்கை)

——*——

தாளக்கீர்த்தநம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

நடிப்பவனே-சிற்சபைநின்று-நடிப்பவனே... *

அநுபல்லவி,

நடிப்பனேகங்கை-முடிப்பவனேமறை.....................*
படிப்பவனேவிடம்-குடிப்பவனே............(நடிப்பவனே)

(சரணங்கள்,)

(க) அரியுமயனும்விண்ணமரர்முனிவரு-மனகதிநகரர்பணகசயனரும்-
உருகி உருகியுன் ளொளியும் வெளியே-யொளியும் வெளிபெற வடிய
ர்துதிசெய... ... ... ... ... ... *
தரிகுதரிகுகு-தரிகுதரிகுகு- தாம்தாம் தத்தாம்............*
திரிகுதிரிகுகு-திரிகுதிரிகுகு-தீம் தீம் தித்தீம்... ... *
தரிகு தரிகுகுதாம்-திரிகுதிரிகுகு தீம்........................*
தரிகுதரிகுகு-திரிகுதிரிகுகு... ... ... ... *
தத்ததெய்யத் தெய்யத்... ..............................*
திரிகிடதகத-ததிங்கணத்தோமென்று...... ...(நடிப்பவனே)
(உ) அண்டாண்டமுழுமண்டலங்களு-மஞ்சவிசிரபந்தனத்தொடு.........*
கண்டுகண்டுளம்நைந்துபொங்கக் கணங்களின்றுவணங்கியின்புற... ...*
தந்ததந்தக-தந்ததந்தக-தாம்-தாம்தத்தாம்.................*
திந்ததித்திகி-திந்ததித்திகிதீம்தீம்தித்தீம்......................*
தந்த தந்தக தாம்-திந்த திந்திகி தீம்...................*
தந்த தந்தக-திந்த திந்திகி..................................*
தத்ததெய்யத் தெய்யத்...........................................*
திரிகிடதகத-ததிங்கணத்தோமென்று.........(நடிப்பவனே)
(ந) பட்டரானவர்சிட்டரானவர்-பக்தரானவர் முக்தரானவர்............*
இட்டமாம்புலிநட்டபாத-மிணங்கிநின்றுவணங்கியின்புற...........*
தகததகதக-தகததகதகதாம்-தாம்தத்தாம்... ................*

—*****—

திகிதகிகிந்கி-கிகிதகிகிகிகிதீம்-தீம்தித்தீம் ... ... ... *
திகதகதகததாம்-திகிதகிகிகிகிதீம்... ... ... *
தகதகதகதகதாம்-கிகிதகிகிகிதீம் ... ... ... *
தகத தகதக-திகித கிகிதிகி.. ... ... *
தத்த தெய்யத் தெய்யத்... ... ... ... *
திரிகிடதகத-தகிங்கணத்தோமென்று. (நடிப்பவனே) (ரூக)

மூவடுக்கொலித்-தாளக்கீர்த்தநம்-இ-ம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி,

திருத்தஞ்செய்தாரோ ஐயர்-சதாநந்த.திருத்தஞ்செய்தாரோ ஐயர் ... ...*

அனுபல்லவி

திருத்தமானமன்றுள்-சிவசிதம்பரநாதர்
தித்திமிதிமிதமிதிக்கிட தகிக்கிடத்திகு.................. .....*
தத்திமிதமிதக-தகிங்கணத்தோமென்............ ...(திருத்தம்)

சரணங்கள்.

(க) அருமறையொலிகதிக்க- ஹரஹ்ரஹ்ரஹ்ரஹரஹ்ரவெனவேவடியர்
குழாந்துதிக்கத் - திருநுதலுமைமகிழ்க்கச்-சிவசிவசிவசிவசிவசிவவென
வே-சேர்ந்திருமுனிகுதிக்க-தரிக்கத்தோந் - தத்திமிதரிகிட - தத்தித்
தாந்தாந்தாந்................................................*
ததண ததண செணுத-செணுததசெணுத......... .........*
ததண ததண தக-தகிங்கணத்தோமென...........(திருத்தம்)

(உ) தித்திமத்தளநாதந்-திந்தோந்-திந்தோந்.திந்தோமெனவே-செகமெ
ங்கெங்கணுமோதப் - பத்தரஞ்செழுத்தோதப் - பம்பம்-பம்பம்-பம்
பம்-மெனவே-பகர்திருச்சங்கமுழத..................................*
தித்தித்தோந்தித்திமி-திரிகிடதித்தித்தீந்தீந்தீந்... ... *
திரிகுதிரிகுகு-செம்செம்செம்தரி............ .........*
தரிகுதரிதக-தகிங்கணத்தோமென... .......(திருத்தம்)

(ந) தாணிபவத்தைதக்கெலிக்கத்-தகதகதகதக-தகதக வெனவே... ......*
தரித்தகைமழுச்சொலிக்க-கருதினொண்ணம்பலிக்க - கலகலகலகலகல
கலவெனவே-காலிற்சதங்கையொலிக்க.............................*
தரிகுகுந்தரிதித்திதரிகிட-தித்தித்தோந்தோந்தோந்...*
தகணகடிங்குகு-தடிங்குடிங்குகு... ... ... *
தகணதகணதக-தகிங்கணத்தோமென-(திருத்தம்)(ரூஉ)

—*****—

மூவடுக்கொலிக்-கீர்த்தநம்-இ-ம்-கௌளிபந்து- திரிபுடைதாளம்.

பல்லவி,

ஆநந்தத்தாண்டவமாடினார் தில்லை-யம்பலவாணனார்... ...*

அநுபல்லவி.

ஆநந்தத்தாண்டவமாடிநின்றாரரி- யருள்சித்தம்-பெறச்சக்கொன்- றருச்
சிக்குந்- தனிப்புஷ்பந்- தரிச்சுத்தம்- பதத்திற்பொற் - றிருச்சிற்றம்-ப
லத்துணின்... ... ... ... ... ... ... (ஆநந்தத்)

(சரணங்கள்.)

(௧) பாதச்சிலம்பு-கலீர்கலீர்- கலீரென்னப் - பைம்பொற்குழைகள்பளீ
ர்-பளீர்-பளீரென்ன-வேதப்புராணந்-தத்தெய்-தத்தெய்- தத்தெய்யெ
ன்ன-விரித்துச்செஞ்- சடைக்குட்பெண் - தரித்துக்குஞ் - சரத்தைக்
கொன்- றுரித்துத்திண்-புரத்தைப்புன்-சிரிப்பிற்சங் கரித்துநின்(ஆநந்

(௨) மால்கைமத்தளந் -தனா-தனா-தனாவென்ன - மலர்ப்பிரம்மதாளங்க
ணீர்-கணீர்-கணீரென்னச்-சேல்விழிமாது-சபா- சபா- சபாசென்ன
சிறக்கக்கிண்-கிணிச்சத்தந்- தறைக்குட்கிங் - கிணுக்கென்று - பிறக்கச்
சொற்- கமட்டுக்குந்- திறக்கச்-சடைதிற்க... ... ... (ஆநந்தத்)

(௩) பத்தர்கள்தேகம்- விரீர்-விரீர்-விரீரென்னப் - பதஞ்சலிவியாக்கிரர்-
ஜெயா-ஜெயா-ஜெயாவென்ன- சித்தர்கணங்கள்-சிவா-சிவா- சிவாவென்
ன-திடுக்குச்செந்-தணக்குத்திந்-திடுக்குச்செந்- தணக்கென்றங்- குடுக்
கைக்கம்-புயச்செங்கை- யடிக்கத்- தொனியெடுக்க-ஆநந்தத்தாண்(ஆந)

—**********—

## இது. கொள்ளடக்கனை மேல்நின்றுபாடியது,

—❁*********❁—

கீர்த்தநம்-இ-ம்-காம்போதி-ஜம்பைதாளம்,

பல்லவி

காணாமல்வீணிலேகாலங்கழித்தோமே ...*

அனுபல்லவி

சேணாடர்போற்றுந்தில்லைச் சிதம்பரஸ்தலத்தை- காணாமல்... ...*

(சரணங்கள்)

(௧) சேரன்சோழன்பாண்டியன்- இரணியவன்மன்கோபுரமுஞ்..... ...*
சூரவீரப்பபூபன்-வைத்ததிருமதில்களும்............... ... ....*
பாருலகும்போற்றுகின்ற- பஞ்சாக்ஷரப்படிகளும்......... .......*
ஆரணங்கள்சூழ்ந்ததிரு- வாயிரக்கால்மண்டபமும்........(காணாமல்)

(௨) கங்கையுந்நிறைந்தசிவ - கங்கையும்படித்துறையும்........ .......*
மங்கைசிவகாமியம்மை - வாசல்மணிமண்டபமுந் .......... ......*
திங்களணிதிருமூல . நாதர்ருட்சந்நிதியும்..................... ......*
பொங்குசெல்வம்போலுயர்ந்த - தங்கப்பேரம்பலமும் ... (காணமல்)
(௩) நிர்த்தசபைகனகசபை - சிற்சபையின்றெரிசனமும்......... .......*
முத்திப்பெறலாமெனவே - முழங்குஞ்சின்னத்தொனியும்....... ...*
பத்தர்க்குச்சிறந்தகோ - விந்தராஜர்சந்நிதியும்................. ...*
சுற்றிலுந் துலங்குரத்ந - சொர்ணகொடிமரங்களும்.........(காணமல்)
(௪) தில்லைமூவாயிரவர் - முனிவர்பெரும்வீதிகளும்............ .......*
அல்லும்பகலும் அளிக்கும் - அன்னதானச்சிறப்பும்..................*
சொல்லரியமடங்களுஞ் - சோலைகளும்வாவிகளும்நல்லதிருக்கூட்டங்க
ளும்தாலுதெருவீதிகளுங்.............. ......... (காணமல்) (௩௪)

கீர்த்தநம்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்,

பல்லவி,

தெரிசனஞ்செய்வேனே - முத்திகொடுக்குந் - திருவம்பலவாணேசனை *

அநுபல்லவி.

அரியயனிருவருமறியாதவிமலனை........................ ...*
கரியுரிபோர்த்தநங்கருணைக்கடலைத்தேடி......, தெரிசனஞ்*

சரணங்கள்,

(௧) செஞ்சடைமதிகங்கையுந் - திருமுகஞ் - சிறந்தபங்கயச்செங்கையும்-
பஞ்சாட்சரப்படியும்பாதத்தணிசிலம்பும் - நெஞ்சாரவே துதித்து -நி
ன்றெனதுகண்ணாரத் ... ... ... ... (தெரிசனஞ்)
(௨) காளியுடன்வாதனை - யிருமுனிக்கும் -காட்சிகொடுத்தநாதனை-மா லு
டன்பணியிரண்யவன்மன்றனைச்சருள் - காலகாலனையன்பர்கருத்திற்கு
டி கொண்டானைத் ... ... ... ... (தெரிசனஞ்)
(௩) சிவகாமிபிராணேசனை - எனையாண்டருள் -தில்லையம்பதியீசனை- அவ
னிதொழுந்தயா பரனையென்னையனை - சிவசிதம்பரதேவசிற்றம்பல
வாணனைத் ... ... ... ... ...(தெரிசனஞ்)(௩௫)

——****——

கீர்த்தநம் - இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி,

கண்டபின் கண்குளிர்ந்தேன்-ஜனனக்-கடலைக்கடாகடந்தேன்......*

அநுபல்லவி,

அண்டர்பிரானைக்கருணைகடாட்சனை ; பம்பலத்தைக்கண்ட பேர்க்கருள்

மோட்சனை - அண்டபகி ரண்டமும்படைதேயனை- பாண்டவனைநித்தியத் தாண்டவராயனைக்... ... ... ... ... (கண்டபின்)

சரணங்கள்,

(௧) அந்திப்பிறைகங்கைதானசைந்தாடவே - யமரர்முனிவர்சிவசிவவென் னவே- சந்தித்தேயன்புடன் தும்புருநாரதர் சங்கீதமேபடிக்க- விந்தை க்கிசைந்தமான் மத்தளங்கொட்டவே - வேதங்கணீரொன்று தாளமுழங் கவே - திந்தோந்திரிகிட தோதிமியென்னவே - சிந்தித்துநின்றாடு மு ம்பர்கள்கோனைக் ... .. ... ... (கண்டபின்)

(௨) பரவைத்தன்வாசலிற் றூததனைவேனைப் - பத்தர்க்குமுத்தியளித்திடு ங்கர்த்தனை - கரமதிற்சூலகபாலந்தரித்தானைக் கங்காளனைப்பரனை- திரா மயமாகப் புரந்தருளுதனை நித்தியகல்யாணனைச்சரசித்தவிநோதனை ப்- பரம்பரமாகிய வாண்டவனைக்கிருபைபாரொன் பாருக்கருள் பொ ம்பலத்தானைக் ... ... ... ... ...(கண்டபின்)

(௩) தண்சேல்நல்விழிமாகாளிவாதுக்குத் - தாக்கனித்தெக்களிசொல்வி யோரண்டு - கண்படைத்தேயெதிர்த்தாடுகின்றாள் தலைசவிழ்த்தப்புறம் நிற்கவே - மண்ணிலொருபாதம்விண்ணிலொருபாதமாகவேவைத்தார் த்ததடநஞ்செ- யண்ணலைக்கண்ணனையாளு முக்கண்ணனை- யநங்கனை வென்றனகசபேசனை ... ... ... ...(கண்டபின்)(௩௬)

—*****—

## விஷ்ந்திணடியவுடன்பாடியது.

கீர்த்தநம்-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி

அருமருந்தொருதனிமருந் - தம்பலத்தேகண்டேனே......*

அனுபல்லவி

திருமருந்துடன்பாகமருந்து . தில்லை யம்பலத்தாடுமருந்து.......... *
இருவினைகளறுக்குமருந்து - ஏழையடியர்க்கிரங்குமருந்து (அருமருந்)

(சரணங்கள்)

(௧) கொன்றைதும்பையணிந்தமருந்து- கோவைமீதிற்படர்ந்தமருந்து- மன்றுளேநின்றாடுமருந்து - மாணிக்கவாசகர்கண்டமருந்து (அருமரு)

(௨) இந்திராணவர் வானவர்தாமு - மிருடிகள்தமக்கெட்டாமருந்து—சந் திரர்சூரியர்காணுமருந்து-தானேமுளைத்துத்தழைத்தமருந்து (அருமரு)

(௩) திரித்திரித்திரியென்றுடுமருந்து-தேவாதிமூவர்கள்காணாமருந்து-கருத்தைத்திருத்தியிருத்துமருந்து-காலனைக்காலாலுதைத்தமருந்து (அரும

—*********—

கீர்த்தநம்-இ-ம்- புன்னாகவராளி-ஆதிதாளம்,

பல்லவி,

என்றுசென்றுகாண்பே - னெனதுகண்குளிர.........*

அனுபல்லவி

மன்றுள்பதஞ்சலிபுலியூர் - வாழுஞ்சபாபதியை ... (என்று)

(சரணங்கள்.)

(௧) புண்டரீகமுகத்தழகும்புன்சிரிப்பினழகும்-வண்டு நிறவிழிபழகும்வரிசைதந்தத்தழகும் - குண்டலமுஞ்சவுக்களியுங்கொப்புதரித்திடுமழகும்- மண்டலமெல்லாம்விளங்கும் கண்டசரத்தழகும்...... ... (என்று)

(௨) மெய்யெல்லாம் வெண்ணீறுவிளங்கிய வற்புதவழகுங்-கைகளிலேதரித்திருக்குங்கனலுங்டமமருகமும் - பைபரவம்பூண்டகையாற்பயந்தீர்க்குமழகும்- வையமெல்லாமுய்யவங்கண்வரவீசுங்கையழகும், (என்)

(௩) குஞ்சிதபாதத்தழகுங் குனித்தவோர் பதத்தழகுங் - கஞ்சன்முடிமாலையொடுகவின்பதக்கத்தழகுங் - கொஞ்சுமொழி சிவகாமி கூடநிற்குமழகும்- நெஞ்சைவிட்டுநீங்காமனிதமுமனங்களிக்க...(என்று) (௩அ)

——*—*✼*—*——

கீர்த்தநம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்,

பல்லவி

காணமுத்திபெறலாமே - ஒருதரத்திற் - காணமுத்திபெறலாமே... ...*

அநுபல்லவி,

காணமுத்தி தருந்தில்லை தாணுவாயிருந்துபஞ்ச - பாணனைக்கண்ணாலெரித்த சோணகிரிவல்லவர்பு - ராணசுந்தரர்தமிழ் மூவாணருக்கருள்செய்யும்நிர்- வாணரொனும்பேரம்பலவாணர்தஞ்சிவந்தபாதங் (காண)

(சரணங்கள்)

(௧) பண்டுவிடமுண்டநீலகண்டபுர ஹரசம்பு - மூண்டகத்திருமணாளர் புண்டரீகாசனர்துதி - கொண்டசிவசங்கரபிர சண்டகாலனையுதைத்துத்-தண்டனைபுரிநடேசர் புண்டரீகமலர்த்தாளைக்................ (காண)

(௨) பஞ்சவதனமகேசர்குஞ்சரசருமதரர்-வஞ்சிசிவகாமிநேசர்தஞ்சமென்றடைந்தவர்தம்-நெஞ்சிலுதையம்புரிந்தவிஞ்சுகநகசபேசர்- செஞ்சிலப்பணியொளிர்- குஞ்சிதத்தாண்மலனைக்.................. (காண)

(௩) தேடரியதிகழ்பாத மாடரவப்பூணணிந்து- வேடனுக்கருளிமூவர்பா
டவேமனமகிழ்ந்து- நீடியசெஞ்சடையி னூடியகங்கைபுனைந்து -கூ
டிவொளிநடராச ராடியமலர்ப்பதத்தைக்......... ... (காண) (௩௪)

—*********—

கீர்த்தநம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்;

பல்லவி,

ஹரஹர சிவசிவநமச்சிவாயா- வெங்க-ளம்மைசிவகாம சவுந்தரிநேயா *

அனுபல்லவி,

பரவுந்தொண்டருக்கன்பு செய்யுஞ்சகாயா- நித்திய-பதம்பெறுசமய
த்தினிதம்பரிவாயிருந்து-மிதம்பெறவிளையாடுஞ்-சிதம்பரதேவா (அர)

(சரணங்கள்)

(க) தினமும்நின்பதசேவை சேவிக்கவேணு- மிந்தத்- தெரிசனமேமோ
ட்சபலமெல்லாங்காணும்- நினைவெல்லாமத்தரூபமாய்த்தோணு - மெ
ன்றும்- நித்தம்பலதேவதைகள் சுற்றும்பலவிருந்தாலும்- வெற்றம்ப
லமல்லாது- சிற்றம்பலமாமோ... ... ... ...... (ஹரஹர)

(உ) யாவர்க்குமுயிர்க்குயிராயுறைந்தாயே-பரம- ரகசியமாக வெங்கும்
நிறைந்தாயே- மூவர்க்குமுதல்வனுய்ச்சிறந்தாயே- கருணை - முகதர
செகநக நகவெண நடபிர- யுகதரவரடமருககரதரனே (ஹரஹர)

(௩) பாதிமதிபணிந்தபரஞ்சோதி-யன்பாய்ப்-பணியுந்தொண்டருக்கெல்
லாமநுபூதி-ஆதிவுமைபதியாகியநீதி-மிகவு-மம்பரமான திசம்பரரூப
ப- ரம்பரமான சிதம்பரதேவா... ... ... (ஹரஹர) (௩௫)

—*******—

கீர்த்தநம்-இ-ம்-மோகனம்-அடதாளம்,

பல்லவி

யார்க்குத்தெரியுமையா-சபாபதிநீ- ராடியவிந்தைதானையா *

அனுபல்லவி,

அக்கியபாதாதிரிசூலமுங்கையிலேந்தித்-தும்புருநாரதர்கிம்புருடர்கின்ன
ரர்- சூழப்பொதுவிலன்பர் தாழவாடினவித்தை ... ...(யாருக்குத்)

(சரணங்கள்)

(க) பாதச்சிலம்புமசைய உமையாளிடப்-பாகத்திற்கூடியொசிய-வேததே
வ்களும்நின்றேதவேமமூவேந்தி-விடையைவிட்டிறங்கிச்சடையைவிரி
த்துக்கொண்டு-வேளைபார்த்தவொரு தாளைத்தூக்கிக்கொண்ட(தார்க்)

(௨) குண்டலமிரண்டுந் துலங்க - திருச்சடையிற் - குளிர்கங்காதேவிநுழைந்
து - பண்டுசுந்தரர்க்காகப் பரவைக்குத் தூதுசென்று - பதும நல்லழகிய
வதனவிழிசுமந்த - பாதம்நோகாமற்சாமவேதம்பாடிக்கொண்ட (தார்க்

(௩) திருச்சிற்றம்பலம்வாழ்வோய் - பத்திவலையிற் - செகந்துதித்திட வீழ்
வோய் - தரித்தித்தித்தோத்திமி திரித்தித்தித்தீந்திமி - தகதகதரிகிடதிகிதி
கிதிரிகிட தாத்திமியெனத்திருக் கூத்தாடியவிந்தை (யார்கருத்) (௬௧)

—*********—

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி,

சுந்தரகுஞ்சிதபாதநிலைகண்டு - தொண்டுசெய்வாய்மனமே *

அனுபல்லவி,

சந்ததந்தில்லை சிவகாமிபங்கனார் ... ... ... *
தானந்தமாகியவானந்தநாடகச்...... ...... (சுந்தர)

(சரணங்கள்)

(௧) அச்சுதன்முன்னாளி லேனமாகித்தேடி - மாக்கன்றலைக நெருங்கிடச்
சூடி - மெச்சியோர்பாம்பும் புலியுங்கொண்டாடி - மேலாஞ்சிதம்பரந்த
னினின்றாடுஞ்........................................ (சுந்தர)

(௨) வெஞ்சினத்தேமானுயிரைமடிக்கு - விட்டின்பந்தந்தென்னைத்தன்
னைமுடிக்கும் - செஞ்சிலம்புங் கிண்கிணியும் படிக்குஞ் - சிற்றம்பலத்தி
லென்னுளுநடிக்குஞ் ..................... ... .... ... (சுந்தர)

(௩) நல்லவர்செம்மை மனத்தவர்போற்றும் - நம்புமடியார் பிறவியையமா
ற்றுந் - தில்லைமூவாயிரர் பூசைசெய்தேத்துந் - திருமால்தன்கண்ணைமல
லரெனச்சாத்துஞ் ... ... ... ... ... (சுந்தர) (௬௨)

—)*********(—

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

பல்லவி,

தூக்கியபாதத்திலேக்கொளிகண்டு - சும்மாயிருநெஞ்சமே *

அனுபல்லவி,

தூக்கியபாதத்தைக்கண்டவர்க்கேசித்தி - சொன்னேன்சொன்னேன் முக்கா
லுமேவெற்றி - தேக்குங்கருணைச்சிவகாமியேசத்தி - தில்லைச்சிதம்பரங்க
ண்டவர்க்கே முத்தி... ...... ... ... ... ...... ...(தூக்கிய)

(சரணங்கள்)

(௧) பாக்கியமானபராபரங்காணும் - பார்ப்பதல்லாமதுவாகவே தோணும்
வாக்குமனதுக்கெட்டாதது பூணும் - மன்றுள்நடநமுனக்குள்ளேகாணுந் - தூ

(௨) பிறப்பிறப்பென்னுந் துயர்போயொளிக்கும் பேரின்பமானசுகமே
யளிக்கும்- மறப்பும்- நினைப்புமிலாதெமிளிர்க்கும் - மன்றுடையான
ருள்கொண்டுதெளிர்க்குந்... ... ... ... ... ... (தாக்கிய)
(௩) தத்துவமெல்லாந் தலைதடுமாறுந் - தானேநாமான விடங்கண்டுதே
றும்- அத்துவிதப்பொருளாகியேவீறு - மானந்தவின்பவயிர்தமுள்
ளூறுந்... ... ... ... ... ... ... (ஆக்கிய) (௬௩)

———*———

கீர்த்தநம்- இ-ம்-கல்யாணி- ஆதிதாளம்,

பல்லவி.

சிவந்தபாதத்தைக்காண வேணுமென்று- சிந்தையினினைமனமே *

அநுபல்லவி

தவத்தனக்குப்பயன் தருமோவாமௌனத்தில்லைச் .. ... *
சபையினடநமிடுந்தாண்டவராயன் ... .. ... (சிவந்த)

சரணங்கள்

(௧) அம்பரத்தினின் றமரர்கோன்முநிவர்க்கு - மாறுசமயவேதசாஸ்திரத்
தலைவர்க்கும்- உம்பருக்குமுயர்ருடிகட்குமுலகி - லுள்ளபேர்களுக்கு
மோமென்றுடிச் ... ... ... ... ... ... ... ...(சிவந்த)
(௨) பதஞ்சலிபகவற்கும்வியாக்கிரபாதற்கும் - பலநாளும் நடஞ்செய்த
பாதங்காண்பதற்கு- நிதமுமவனருளினாலே ததிக்குமன்பர் - நினைவி
லுங்கனவிலும் நின்றுநடம்புரிந்த ... ... ... ......(சிவந்த)
(௩) காளியுடனேகூடிவாதாடினவிந்தை- கண்டதில்லைக்காதாற்கேட்டது
ண்டிப்போது- தூளியுடம்பிற்பூசிமானுமழுவுமேந்தித் - தொந்தோ
மென்றொருகாலைத் தூக்கிநின்றுடிச் ... ... (சிவந்த) (௬௪)

—*******—

கீர்த்தநம்-இராகம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அவனேதேவர்கள்கண்ட - வவனேதேவர்கள்தலைவ
னவனைத்தினமுநினைமனமே... ... ... ... ...*

அநுபல்லவி

தவனேசர்பணிசிதம்பரவாசனொளிருஞ்சிற்.....................*
சடைநடராஜனவனே வவனெவனே ... ... ... (அவனே)

(சரணங்கள்)

(௧) இகலாதிபேதகனநேகனொன்றேதிகழு மெழிலானஜோதியவனே - பு
கலாதிபூமியான்மாபந்தபாசபுரி பூரணமானதேவனே- சகலாதிபெயர்

சராசரமாகியேநின்ற சம்புநாதனேவனே - அகலாதியமரருக்காதார
மாந்தெய்வ மாமகாதேவனேவனே வவனேவனே ........(அவனே)
(௨) உருவானுமருவானு முருவருவதின்னு மொளிரும்பிரம்மமேவனே-
விரிவானுமுயர்வானு மெவ்வுயிர்க்குமுயிராய் விளங்கிய மெய்யனேவ
னே- ஒருநானு மறையானுமுடிக்கலைகருணனுமோ தொணநாதனேவ
னே- அரியானுமயனுமடிமுடியறியாத வாதிமுன்னாதியேவனேவவ
னேவனே... ... ... ... ..... ... ... ... (அவனே)
(௩) பேரானவரிசிரமேநிப்பிளந்திடும்பெரியதானுமேவலனே - நேரானப
ங்கயன் சிரமதைக்கிள்ளிடும் நிமலனமலனேவனே-ஏரானமதனைமுன்
னுதலின்விழியினுலெரித்தபகவனேவனே- சீரானபுலியூரிற் சிவகாமி
பங்கனுஞ் சிற்சபாபதியெவனேவவனேவனே ... (அவனே) ௪௫)

——*—*—*——

## கீர்த்தநம்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

மறவாதிருநெஞ்சமே - உனக்கிது . பிறவாமருந்தாமே... *

அநுபல்லவி

நறுமாமலர்ப்பொழில் சூழ்தில்லையம்பல... ... ... ...*
நாதர்க்குஞ்சிதச்செம்பொற்பாதமிமைப்பொழுதும் மற *

சரணங்கள்,

(௧) நிச்சயமாகவே கேளாயஞ்செழுத்துண்டு - நிற்கும்நில்லையைதிந்துச்
சரித்துக்கொண்டு- வைச்சவழியேசென்று அச்சமறவேகண்டு - மன்று
ளானந்தநடமின்றேகண்டுகொள்ளென்றும் ... ... (மறவாதிரு)
(௨) பழையவடியார் திருவடியில் வீழ்ந்தெழுந்து - பணிசெய்யவேயவ
ரிரங்கிமநமகிழ்ந்து-பிழைவராமல்காத்துத்திருவடிநீழலிற்-பிசகாதிருக்
கவைப்பாரசையாய்நீயெப்போதும் ........ ... ...(மறவாதிரு)
(௩) திநவாரமுந்திரு மூலத்தாநமேசென்று- தெரிசநஞ்செய் சிவகாமி
சந்நிதிகண்டு- அநவரதமுஞ்செம்பொனம்பலத்தாடிய-வப்மையப்பர்
பொற்றாள் செம்மையாகக்கண்டு ... ... .. (மறவாதிரு) (௪௬)

—***—

## கீர்த்தநம்-இ-ம்.முகாரி-ஆதிதாளம்,

பல்லவி,

சிவனைமறவாதே நினைமனமே................ ஒருக்தாலுஞ்
சிவனைமறவாதே நினைமனமே ........................*

அநுபல்லவி.

அவனிபுடபகிரண்டங்களையுமளித்...................... ...*
தாடண்டவனையரசம்பலத்தானைச்.........................(சிவனே)

(சரணங்கள்.)

(௧) நடவாதநடக்கைநடந்தாலுங்-கூடி- யடையாத கொடியசலியரவுதொ
தடர்ந்தாலும் - படையாளர்சுற்றுமடர்ந்தாலும் - மாதர் - சடைமனை
தோறும்நிதங்காத்துக்கிடந்தாலுஞ் ... ... ... ... ... (சிவனே)

(௨) பெண்ணாசைவந்துபிடித்தாலும்- நம்மை - யெண்ணுமலேபொருவ
ரேசியடித்தாலும்-புண்ணாகிமனது அடித்தாலு - மோய்ந்து - கண்ணு
இசெவிமூடிக்கால்கள் துடித்தாலுஞ் ... ... ... ... (சிவனே)

(௩) வாரியளவுயுடைந்திட்டாலும் - பொன்னும் -மேருகிரிவீறுபடவின்ன
ணுடைபட்டாலும் - பாருலகவாழ்வதுகெட்டாலு - முந்த - யாருமறி
யாதபழியாம்வினைதொட்டாலும்......... ........ ......(சிவனே)

(௪) அரிபிரமர்பதங்களழிந்தாலு - மின்னு-மிருசுடருமாதிலெ யதிரோதியி
ழிந்தாலும் - வருணனும்மண்மாரி பொழிந்தாலும் - நாளுந் - தரும
நெறிபகருமறைதவற்மொழிந்தாலும்......... ..............(சிவனே)

(௫) மருமலர்க ளணியுமம்பரனைத் - தேவ - தருவாகிக்கதி யின்பந்தருங்
குருபரனை - உருவாகிவருந்திகம்பரனை - நீலத்- திருவுடனே-நடநமிடு
ஞ்சிதம்பரேஸ்வரனே.....................,.... ..........(சிவனே) (௩எ)

—*******—

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்,

பல்லவி

பேசாதேநெஞ்சே-பேசாதே...............*

அநுபல்லவி

பேசாதேநெஞ்சேயின்சொல்லிப்பேசியுந்தானெனக்ண்டாய்.........*
ஈசர்புலியூரில்வளர் நேசரனுபூதியல்லாற்......................(பேசாதே)

சரணங்கள்.

(௧) சிங்காரவிடைபிங்கலை - சங்காரவழிபோகாமற்-பொங்கமாகவேநிறு
த்தி - யெங்கள்குருராயர்பாத - மேத்திக்கோ-மனதைத்-தேத்திக்கோ-
வருவினைக்காத்துக்கோ - வஞ்செழுத்தையும் - போற்றிக்கோ - நானெ
ன்றசத்தம்............................................(பேசாதே)

(௨) ஆமைபாசைபத்துறப்பையு - மூமையெழுத்துள்ளிருத்திச் - சோம
சேகரன்பதத்தை- நாமெனக்கருத்துள்வைத்து - நாடிக்கோ - பொரு

ளைத்-தேடிக்கோ - ழுத்திவழியைக்கூடிக்கோ - வானந்தக்கூத்- தாடிக்
கோ-நாமென்றசத்தம்... ......... .............. ... ...(பேசாதே)
(௩) பட்டிபசுக்களைந்துண்டு - கொட்டிலிலடைத்துக்கொண்டு - எட்டெ
ழுத்துருவையுண்டு, பொட்டென செபத்திற்சென்று - பூண்டுக்கோ.
வருளை-யீன்றுக்கோ நமது-ஆண்டவன் தில்லையம்பலத் - தாண்டவ
ன் தன்னைநீகண்டாற் ... ... ...... ... ...(பேசாதே)(௪அ)

---

கீர்த்தனம்- இ-ம்- நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி,

சிதம்பரமே நினைமனமே-ஜென்மமீடேறச்... .... .....*
சிதம்பரமேநினைமனமே... ... ... ... ... ... *

அநுபல்லவி

சிதம்பரமேமூத்தி-சின்மயமாகிய..................... ... ...*
பதஞ்சலிபூசித்த-பாதனைக்காணச்...... ..... .......(சிதம்பரமே)

(சரணங்கள்)

(௧) ஆகமவேதபுராணவுல்லாச-சிவோகமஹேசநடேசனைக்காணச்-(சித)
(௨) தக்கிட திக்கிடதரிகிடவென்வே-திக்குநடனமிடுந்தேவனைக்காணச்-சி
(௩) திந்திமி திமிதிமி திமிதிமியெனவே - வித்தைநடனமிடும் வேதனைக்
காணச்... ... .................. ... ... ... (சிதம்பரமே)
(௪) சந்தனலேபனசம்பிரமலாவித-கந்தவசந்தவைபோகனைக்காணச்-(சி)
(௫) பத்தியருட்சிவகாமசவுந்தரி-முத்திதரும்பரா சத்தியைக்காணச்-(சி)
(௬) தரணியிலனைவருந் தமியொடுதுதிசெயு - மிரணியவன்மவிநோதனை
க்காணச்... ... ... ... ... .............. ...(சிதம்பரமே)
(௭) தேவர்தொழுந்திரு மாலயன்தேடு - மூவாயிரர்பூஜித்த மூர்த்தியைக்
காணச்......................... ... ... (சிதம்பரமே)(௪௯)

---

கீர்த்தனம்-இ-ம்-மங்களகவுசிகை-ஆதிதாளம்,

பல்லவி.

தெரிசநமேநினைமனமே-சபாநாதர்-தெரிசநமேநினைமனமே... ......*

அநுபல்லவி

தெரிசநமேமுத்தி பரிசநமேநிய... ............ ...*
வரிசைநடம்புரிவாழ்சபைவாணர்... ... ...(தெரிசநமே)

(சரணங்கள்)

(௧) கஞ்சமலருதயன் - கஞ்சைவனிதைபதி - கஞ்சநயனன்பணி- கஞ்சம
லர்த்தாள் ... ... ... ...........................(தெரிசநமே)

(௨) ஆகமத்துட்பொரு - ளாகநிறைந்தசு - தாகரமகிமைகோ - ளாகாச
லிங்கர் ... ... ... ... ... ... ... ... ...(தெரிசநமே)

(௩) கநகாம்பரதர-கநகசடாதர-கநகசுபாகர-கநகசபேசர்- (தெரி) (௫௰)

——*——

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணிஆதிதாளம்,

பல்லவி

தோத்திரஞ்செய்மனமே-உனக்கிது-மாத்திரமுற்பனமே...*

அநுபல்லவி,

காத்தெமையாளும் வெண்ணீற்றனைவார்சடை........ ......*
யாற்றனையாநந்தக்கூத்தனையநுதிநம் ...........(தோத்திரஞ்)

(சரணங்கள்)

(௧) ஈசனைக்கநகசபேசனைஞாநப்பிர - காசனையோர்சொல்லும் வாசனைப
தஞ்சலி-பூசனைசெயுஞ்சரு வேசனைக்கயிலாச - வாசனைத்திருநட ராஜ
னையரனைத்... ... ... ... ... ... ...... . (தோத்திரஞ்)

(௨) பாணனையாண்டநஞ் சூணனைவாசுகி-நாணனையக்கினிப் - பூணனைமா
ல்தேடுஞ் - சேணனைநித்ய கல்யாணனைமுத்திநிர் - வாணனையம்பலவா
ணனையரனைத்..... .............................. ...... .........(தோத்திரஞ்)

(௩) வேளனைமுண்டகத் தாளனைவீறுங்கங் - காளனைவிபூதித் தூளனைப்பா
ம்பணி - தோளனையடியவர்க்காளனையாதிநா - நாளனையுமைமணவா
ளனையரனைத்... ... ... ... (தோத்திரஞ்) (௫௧)

—***※***—

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி,

நிர்த்தமிடுந்தருச்சிற்றம்பலவனை-நித்தம்நினைமனமே......*

அநுபல்லவி,

விந்தைவருமுயர் புத்தவருஞ்செல்வ........ ...... ..... *
மெத்தவருமொன்று மொத்துவருமன்றுள்... ......(நிர்த்த)

(சரணங்கள்)

(௧) செந்திருமாலய னித்திரன் மாதவர் - செய்யமுனிவர் செயசெயவென்
றிடத் - தந்திரமாயொருகாலைத் தூக்கிக்காளிமுன்- தாகுதோதிமிதித்
திமிதாவென... ... ... (நிர்த்த)

(உ) சகலபுவனத் தவரவர்போற்றிடச் - சந்திராதித்தர்கள் தாழ்ந்து துதித்திடச்-செகணதோதிமிதிமிதத்திமிதிமி - திகுததாகுதாகுதிக்கிடதத்தீயென... ... ... ... ... ... (தீர்த்த)
(ங) அத்தமுள்ளரமாலேசொந்திசௌந்தரி - யானசிவகாமியம்மை மகிழ்ந்திடத்-தந்ததகுதணதானதானதன- தக்குதிக்குடிகுதளங்குதாவென ()

—*****—

கீர்த்தனம்-இ-ம்-நாகவராளி-ஆதிதாளம்,

பல்லவி.

தேடித்திரியாதேநெஞ்சே-தேடித்திரியாதே ... ...*

அநுபல்லவி,

தேடித்திரிந்துதிகையாதேநெஞ்சே... ... ... ...*
சிற்றின்பத்தாலேஜெகமெல்லாம்பஞ்சே... ...(தேடித்)

(சரணங்கள்)

(க) நானென்றவாணவந் தன்னையேநீக்கு - நாதாந்தப் பேரொளிதன்னிலேதாக்கு - மோநமாமந்திரத் துண்மையைநோக்கு - முத்திக்குவித்தாய்முழுமதியாக்குத் .. ... ... ... (தேடித்)
(உ) ஆத்துமஞானிக்குமெய்தனிற்சொட்டு-வண்டாண்டபகிரண்டங்கள் விட்டுப்-போானவானந்த வெள்ளத்தையெட்டுப் - பேய்ச்சுளாயற்ற விடந்தனைக்கிட்டு... ... ... ... ... (தேடித்)
(ங) போட்டவிடத்திற் பொருள்தனைத்தேடு- போதநிஷ்டையுட் புகுந்துநீயாடு - நாட்டமுடன்சற் குருபாதந்தேடு - நாலாம்பதத்திலருள் ஞானவீடு... ... ... ... ...தேடித்திரியாதே(ரு)

—******—

கீர்த்தநம்- இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்!

பல்லவி

கண்டாயோமநமே-நடேசனைக்-கண்டாயோமநமே... ...*

அநுபல்லவி,

அண்டமுழுதும்பிரம்மமென்றுதோன்றலீலை... ...... ...*
கொண்டவஸ்துவாய்வந்தபுண்டரீகபுரத்தைக்- (கண்டாயோ)

(சரணங்கள்,)

(க) தொந்திப்புநீங்கினையே - மெய்ஞ்ஞானத்தின்-சத்திப்புவாங்கினையே செந்துப்பிரளயகன்ம மென்றுபகலிரவா- யந்தக்காரணமேயாநந்தக்கடலுருகிக்... ... ... ... ... (கண்டாயோ)

(உ) சத்வக்குணம்புகுந்தாய் - ரஜோதம- மற்றக்குணமிகுந்தாய்-செத்த கயிறுதனிற் புற்றுப்பாம்புப்பிரமை - சற்றுத்தெளிந்துமகிழ்ந்துபெற்ற திரள்பேரின்பங்... ... ... ... ... ... ... (கண்டாயோ)
(ங) இன்பந்தெளிந்துகண்டா - யசேதந - வெம்பசிதீர்த்துக்கொண்டாய்- அன்புக்கினியதோர் சிதம்பரந்தனிலேதெ- டம்புரிந்தருடருமம்பலவாணனைக் ... ... ... ... ... ... ...(கண்டாயோ) (ருச)

—*****—

கீர்த்தனம்-இராகம்-சாவேரி-சாபுதாளம்,

பல்லவி,

சிதசிதம்பரமே- தெரிசிக்கமரநமே- ஜெநநமில்லையிதுநிசமே... *

அநுபல்லவி.

தவசிக்குநஞ்செய் - சம்போசங்கரசிவ ........... *
பவநாசபுனிதபஞ்சாக்ஷரரூபர்வாழ்......... (சிவசிதம்)

(சரணங்கள்)

(க) பரவும்பதஞ்சலிவியாக்கிரபாதரொடும்- பார்த்தவர்க்கெல்லாம் பிரம்மாநந்தமேமூடும்- அரியும்பனுமபங்கியேதேடு-மாதியந்த மில்லாவமலனிலுறுடுஞ்... ... ... ... ... ... ... ... (சிவசித)
(உ) மங்களவேள்விபு மாதவர்பூசையு- மருவியவாகமவேதத்தினோசையுந்- துங்கமத்தன்தாள் சங்கீதவோசையுந் - துலங்குமெய்யடியார் துதிபோர்சையும்வளர்... ... ... ... ... (சிவசித)
(ங) வல்லவர்வாசஞ்செய் தில்லையுட்கொண்டு - மகிழ்ந்துசெய்வார் பதஞ்சென்னிமேற்கொண்டு- அல்லும்பகலும் பேரின்பத்தையுண்டு- ஆநந்தநிர்த்த நடேசனைக்கண்டு... ... ... ...(சிவசித)(ருடு)

—❁*********❁—

கீர்த்தநம்-இ-ம்-முகாரி-சாபுதாளம்.

பல்லவி

கெட்டுப்போகாதேநெஞ்சே - யநியாயமாய்க்............ *
கெட்டுப்போகாதே நெஞ்சே........................ ...*

அனுபல்லவி

சிட்டர்தொழுந்தில்லைச் - சிதம்பரத்தனில்வாழுஞ்............. *
சிவனே - சிவனே - சிவனேயென்றுனாயாமற் - கெட்டுப்... ...*

(சரணங்கள்.)

(க) ஆசாபாசத்தைத் தூரத்து- உனக்-கதினாலுண்டோசொல்வரத்து- பேசாமலநுதினம் பிழைக்கும்வகைதேடி- பெருமான்- பெருமான்- பெருமானென்றுனையாமல் ... ... ... ... (கெட்டுப்)

(உ) விழலுக்கு முத்துலேபோட்டு- சும்மா- வீணுக்கிளைத்தென்பலன்காட்டு- பழகப்பழகவெட்டிப் பழமென் றுசிக்குமோ-பரனே-பரனே-பரனே யென் றுனையாமற் ... ... ... (கெட்டுப்)

(ஙு) சஞ்சலமேதுனக்சடங்கு-குரு- சாமிபாதம் பணியத்தொடங்கு-ஏஞ்சகமேவேண்டா மன்னன்பொன்னம்பல- வரதா- வரதா- வரதாவென்றுனையாமற் ... ... ... ... (கெட்டுப்)(ருசா)

—*****—

கீர்த்தநம்-இ-ம்-காம்போதி-ஜம்பைதாளம்,

பல்லவி,

இனிச்சுமக்கமுடியாது - தேகம் - தில்லே ... ... ... *

அநுபல்லவி

வனத்துறையுஞ்சிவகாமவல்லியுமைபாகா ... ... (இனிச்)

(சரணங்கள்)

(க) மலத்தினால்விளைந்தபுழுக்கூடு- தும்ப- வாரியைம்புலவேடர் வாழும்பெருங்காடு- சலத்துளியாமெலிந்தவீடு- இருமை- தளைத்தலெனுஞ்சநநந்தனையெடுத்துப்போடு ... ... ... (இனிச்)

(உ) ஒருநாலுபேர்சுமக்கு மூட்டை-நா - னொருவனேசுமப்பனிந்தவுடன்மாயக்கூட்டை- மருவிலாப்பழங்காயக்கோட்டை - மன்னவாசவொண்டதாகியே வரும்பழைய வீட்டை ... ... (இனிச்)

(ஙு) வருவாதலூரனையுங்காத்தீர்- இரண்ய- வன்மனுக்குத்தனதாகம் வரவே நீர்பார்த்தீர்- திருநாளைப்போவானையுஞ் சேர்த்தீர்- நாளுஞ்- சிற்சபையிலாநந்தத்தெரிசனந்தந்தேத்தீர்... ... ... ... ... (இனிச்)

(ச) வருவதென் றுமலர்க்கொன்றைதாரும்- வந்து- வாழாது வாழுமிந்த மலமயக்கந்தீருந்- திருவருளானேக்கியென்னைப்பாரும்- பார்த்துச்-சித்தமகிழ்ந் தாநந்தத் தென்மதுரைச்சேரும்... .........(இனிச்) (ருஎ)

—*********—

கீர்த்தநம்-இ-ம்- நாதநாமக்கிரியை-ஆதிதாளம்,

பல்லவி

இன்னம்பிறவாமலேயாளாய் - கேளாய்...................... *

அநுபல்லவி.

பொன்னம்பலவாணாவாகா - பூத்தனைவென்றயோகா- நிரந்தரமும்
எமசபையில்வைபோகா- புலியூர்ச்சிவகாமவல்லியுமைபாகா (இன்)

சரணங்கள்,

(௧) காயமேநிலையென் றெண்ணி- தீயபாவமே பண்ணி- மாயநாகைநண்
ணி- வருந்தவேமுடியாது- பாவஞ்செய்யாம- விருந்தகலவுமொண்ணா
து- தவஞ்செய்தாலு-மிருந்தஜன்னமும்போதும்......(இன்னம்பிற)
(௨) தொலைபாச்சனனத்தாலே-அலைவாய்த்துரும்புபோலே- நிலையாச்சுழ
லின்மேல்-நின்மனதருளைநாட்டி-பகலாத- கன்மவினைகளைவிட்டோ
ட்டி- பழிவில்லாத- சின்மயவீடுகாட்டி............. (இன்னம்பிற)
(௩) நின்னருளினாலேவந்தேன்- சன்னிதிதனையடைந்தேன் - முன்னம்வி
னையைத் துறந்தேன்- மூண்டகடுவுண்டதூயா- வணங்கினனை- யாண்ட
ருளும்வகுநேயாயா- கனகசபையைத்-தாண்டவநடராயா (இன்னம்)

(௰௮)

—********—

கீர்த்தநம்-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்,

பல்லவி,

கலந்துகொள்வேனே - இனிநான் - கலந்துகொள்வேனே ...... *

அநுபல்லவி,

கலந்துகொள்வேன் தில்லை - யம்பலந்தன்னிலே............ *
காரணங்கடந்தபூரணத்துடனே.................... (கலந்து)

(சரணங்கள்)

(௧) கூற்றுவனாகத்தொடரு மிருமைக்கொடியவினைகளடி யோடகன்றது
சாற்றும் பெரிய புவனமெல்லாங்கொண்டு- தானதுவானது நானது
வாகக்...................... (கலந்துகொள்வேனே)
(௨) கட்டுணாகேளாத வன்மனமியான்வைத்தகாவலிற்றங்கியென் னேவலா
ளாயது- தொட்டுமகிழ்த்திங்கெனைத்தடுப்பாரெவர்சொல்லற்கரிய தோர்
நல்லவுறவினிற்........................ (கலந்துகொள்வேனே)
(௩) செங்கோட்கடவுட்பூதருமபானமுஞ் - செய்யகமலத்தோன் கையுஞ்
சலித்தது- நங்குருநாதன்குறியுந்நிலைத்தது நம்பலமானபேரம் பலச்
சோதியிற்..........(கலந்துகொள்வேனே) (௰௯)

—*********—

கீர்த்தனம்-௯-ம்- ஆரபி-ஏகதாளம்.

பல்லவி.

மாணிக்கவாசகர்பேறெனக்குத்தரவல்லாயோவறியேன்... ✱

அநுபல்லவி.

காணிக்கையாகக்கொடுத்தே - னுனக்கென்னை ... ...✱
யாணிப்பொன்னேதில்லையம்பலவாணா......... மாணி

[சரணங்கள்.]

(௧) நோயும்வறுமையுஞ் சண்டையிடாதே - நோக்கனாநோக்காகநோக்கி விடாதே- தாயுந்தமருஞ்சலித்துவிடாதே- சந்தியில்வையாதே - ஆயுமிளம்பிறை சூடியமூர்த்தி யத்துவிதமுத்திபுத்தியளித்துத் - தீயமறுமை யெதிர்நின்றுதள்ளுஞ். சிற்சபைமந்திரசிதம்பரதேவா (மாணிக்)

(௨) கட்டிலைவிட்டுக்கிடத்துமென்னாதே - காலைக்கரங்களைக் கட்டுமென்னாதே- கொட்டிமுழக்கிட்டுக் கூகூவென்னாதே - கோரணிகொள்ளாதே- எட்டியொருவர்புலம்பிவராதே- ஏழைப்பிணத்தையெடு மென்றிடாதே - சிட்டர்தொழுந்திரு கட்டளைமேவுஞ் சிதம்பரதேவா திருநடராயா... ........................................ (மாணிக்கவாசகர்)

(௩) கட்டையின்மேல்வைத்துச் சுட்டுவிடாதே கள்ளக்குழியிற்புதைத்துவிடாதே- பட்டும்பணியுந் தரித்தயலோர்வந்து- பாலள்ளிக்குத்தாதே- இட்டியொருவர் சடங்குசெய்யாதே- கேட்டவரெல்லாங்கிடைக்கத்தகுமென்னச்- சிட்டிப்பவன் பணிசிற்சபைமேவுஞ்- சின்மயரூபாசிதம்பரநாதா.............. ............................ (மாணிக்கவாசகர்)

(௪) அப்பரும்லிங்கத் தடைந்தனரென்று, மாரூரர்வெள்கிரியேறினரென்றுஞ்- செப்பரியதிருஞானசம்பந்தர்- தேசுடன்சென்றாரென்றும்- இப்படியென்னைப்பலித்துவிடாதே- எம்மாணிருந்தபடியேவிருந்திடச் செப்பவருவீர்நடம்புரிமேவுஞ்- சிதம்பரதேவாசிவகாமிநேயா...(மா)

(௫) சிற்பரதற்பர மெய்ப்பொருளுங்கண்ட - சித்தரெல்லாம் நிறைந்து தெரிசிக்கத்- தற்பதமாம் நாலாஞ் சத்தினிபாதமுஞ் - சாயுச்சியமும் பெறவே- பொற்பூமாரியிமையோர் சொரிந்திடப் - பொன்னூசலாடுந்திருவாதிரை நாளிற்- கற்பூரதீபம்போலென்றனுடலைக் கனகசபையிற்கலந்துகொள்வாயே... ... ... ... (மாணிக்கவாசகர்)(௯)

முத்துத்தாண்டவர்- சபாநாதர்பேரில்பாடிய
கீர்த்தனம் - முற்றிற்று.

௨

திருச்சிற்றம்பலம்.

சபாநாதர் துணை.

# முத்துத்தாண்டவர்பதம்.

பதம்-இ-ம்-கல்யாணி- ஆதிதாளம்.

பல்லவி.

வருவார்வருவாரென்றென் மனதைத்தேற்றுவரல்லால்*
வந்தாரென்பாரைக்காண்கிலேன்........................*

அநுபல்லவி,

தெருவிற்கும்வாசற்குந்...........திரிவார்சகிமாரெல்லாந்...*
தில்லாபுரீசர்முன்போய் நில்லாரேன்காதல்சொல்லார்- (வரு)

(சரணங்கள்,)

(க) திலவிதுலாவச்சொல்வார் - சலவைபன்னீரிறைப்பார் - கலவிக்குவே ளையென்பார் - மலர்மெத்தையிதுவென்பார் - சலமோவிதுசிநேகப்- பலமே நானேதுசெய்ய - உலகாளுந் தில்லையீச - ருலவியென்னை யணைய ... ... ... ... ... ... (வருவார்)

(உ) நாமறியோமோசாமி-தாமதஞ்செய்வாரோ - நீமயங்காதேயென்று பூமலேத்தவறிவாற்-காமனூர்வந்தாலென்ன - சோமனூர்வந்தாலென்ன பூமவர்வாடுமுன்னே-யேமசபேசரென்முன்... ... ... (வருவார்)

(௩) கங்கைசடையிலாடச் - செங்கையிற்றுடியாடப் - பங்கயமெனுங்கை கொண் - மங்கையர்கள்கொண்டாட - நங்கைசிவகாமி - கொங்கைசே ர்புயமாட-செங்கைவீசியாட - சதங்கைபாதத்திலாட-...(வருவார்) (க)

—****—

பதம் - இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்

பல்லவி,

தேனார்மொழிமானாள்தன்னைச்-சேரீர்மயல்தீரீர்..........*

அனுபல்லவி,

மானூர்கரனேயம்பலவாணாபணிபூணா-தேனார்மொழி *

சரணங்கள்,

(க) அளகமதுசரிய- முக - மலரவளோ நெரியக் - சளபமுலைபுகளமெழக்-
கலவிசெய்யத்தருணம்- வரமைபெறுமக்கு மாலிகைமார்பாவதிரூபா-
கனமார்விடவூணுதில்லைக்-கநகசபைவாணு... ... (தேனுர்மொழி)
(உ) அன்னைதான்வசைபேசவே- துணை-யானமாதருமேசவே- கன்னன்
மாமதனெய்யவே - மலர்க் - கையிற்கங்கணந்தொய்யவே-என்னதான்
செய்வாள்சொல்லீர் - மய - லெளிதல்லவே நில்லீர்-மன்னுசுந்தரர்தூ
தா-தில்லை-மன்றுளாடியபாதா ... ... ... (தேனுர்மொழி)
(ஙூ) சந்தநஞ்சுடுதென்பவள்-மதந்-தகைதீதாற்பகையென்பவள்- அந்தியு
ந்தணலென்ப- ளொரு - வல்லுநாறுகமென்பவள் - கொந்தார்கொன்
றைத்தாமா-நறுங்- கோதையம்பிகைவாமா - இந்திரன்திருமா லயன்
ஞெழுமீசா-நடராசா... ... ... ...(தேனுர்மொழி) (உ)

—**********—

பதம்-இ-ம்-ஆஷீடகன்னடம்-ஏகதாளம்.

பல்லவி,

பேசவுமெண்ணுதகோபமேதோ-தென்புலியூர்................... ......*

அனுபல்லவி

ஈசரேயுமக்குணுகாதோ... ... *

சரணங்கள்.

(க) வருந்திணைமைக்கவுமாச்சோ-உம்முடன்-பொருந்தாதவென்னைச்சே
ர்ந்தாலேச்சோ-இருந்தவிடமெல்லாமவள்பேச்சோ - வவள்கையின்-
மருந்துதான்நலைக்கேறிப்போச்சோ... ... ...... (பேசவு)
(உ) மாதர்வசையாலே மதம்நோமோ-வென்-னைத்தள்ளநீர்தாமோ -பெ
ண்பழிவீணேபோமோ - காத-லறியாதவர் நீர்தாமோ-சுந்தரனுர்தூத
ரேயிப்படிசெய்பவாமோ ... ...... ... ... (பேசவு)
(ஙூ) கொந்தலரமளியிற்சேர்ந்தீரோ - சேர்ந்தணைந்து- சந்ததம்நீங்காமய
லதந்தீரோ - அந்தமின்ஞர்தம்மைநிணைந்தீரோ-சிவகாம - சுந்தரியாகரோ
மறந்தீரோ ... ... ... ... ...(பேசவும்) (ஙூ)

——**——

பதம்-இ-ம்-கல்யாணி-அடதாளம்,

பல்லவி [யா

அப்படியிப்படிசெய்ததற்கொப்பினன் - தப்பிதமோதில்லைத்தாண்டவரா

அனுபல்லவி

பெற்றபடியேகொடுத்தப்படியாகிலும் ... ... ... *
மெய்ப்புடன்வந்தென்னை யொப்புடன்கூடநீர்...(அப்படி).

(சரணங்கள்.)

(க) வாலையிலேதந்தச்சேலையிலேமுத்து- மாலையிலேபொன்னோலையிலே
செய்த-வேலையிலேயந்தி மாலையிலேதென்னஞ் - சோலையிலே காம
லீலையிலேநீர்... ........................................(அப்படி)
(உ.) மேடையிலேமலர் சூடையிலேவிளை-யாடையிலேயறவாடையிலேநீ-
ராடையிலே யென்னைக்கூடையிலேமுத்-தாடையிலேகைபோடையி
லேநீ...................... ... ...........................(அப்படி)
(ங) நாளையிலேயென்னை யாளையிலேசொந்தக் - காளையிலேநீயேவாளையி
லேயிந்த-வேளையிலேநல்ல நாளையிலேகர்ப்பக் - கோளையிலேயாசை
மீளையிலேநீர்.............. ........................ ... ...(அப்படி)(ச)

பதம்-கல்யாணி-ஏகதாளம்

பல்லவி.

சரசமிப்படிசெய்யலாமோசாமிநீர்-சரசமிப்படிசெய்யலாமோ... ...*

அனுபல்லவி.

வரிசைபெறும்விநோதரேவளர்சிதம்பரநாதரே... ... (சரச)

சரணங்கள்,

(க) முலையிலேகைபோடுறீர்-முகத்திலேமுத்தம்நாடுறீர்... ...........*
தலையிலேமலர்சூடுறீர்-தழுவியேவிளையாடுறீர்............. ......(சரச)
(உ) மாணமுறுமெங்கள்குலத்திலே-மாதவர்வருமின்பநலத்திலே... ...*
ஞானமுமருஞ்சிவஸ்தலத்திலே-நாகரீகபொன்னம்பலத்திலே......(சரச)
(ங) வேதந்துதித்திடும்நீதரே-மிகுந்திடும் பிரக்கியாதரே... ... .. *
ஓதவருந்தில்லைவாதரோ-யுயர்சிதம்பரநாதரோ... ...(சரசமிப்படி) (ரு)

பதம்-இ-ம்-சாவேரி-திரிபுடைதாளம்,

பல்லவி.

வேண்டாமிதெல்லாங்காரியமல்ல-தீண்டாதேதில்லும்... ...*

அனுபல்லவி,

வேண்டாமிதெல்லாங்காரியமல்ல-தீண்டாதேதில்லைந்தாய்தமர்கண்டால்-*
ஆண்டவனொன்றும்பயப்படார்தில்லைத்தாண்டவராயரோ... ... (வேண்டா)

சரணங்கள்.

(க) ராவிலேவந்தென்னை மல்லிகைப்பூவினாலேயெறிந்து- சருவித்-தாவி மடியைப்பிடித்துப்பண்ணாத சரசமே பண்ணுறீர் - கோவிலில்லாதவூரோவையோ - பாவியேன்பக்ஷம் யார்சொல்வார்கள் - சேவிலேறும்நீதரோதிருத்தில்லைநாதரே............ ............... .........(வேண்டா)

(உ) ஆருமில்லாவிடத்திற்பிடித்தாற்சேருவாளென்றுபார்க்கிறீ - ரந்தத்-தாருகாவனத்துமாதர் போலல்லசமர்த்தி நானையா -ஊருமுலகுமறிய சீசேலை - தாருமிரவும்பகலும்வீட்டில்-வாருங்கூடியணையலாஞ்செம் பொன்மன்றுளீசரே ..........................................(வேண்டா)

(௩) இன்னாரினியாரென் றெண்ணா மன்முன்னாளுறவா-யிருந்தவளைப்போற்-பின்னாலேவந்ததிமுவினாற் கண்டபேரென்னசொல்வார் - சொன்னாலுஞ்சற்றுமறிகிறீரில்லை - முன்னாலறிந்தவர் வருகிறார்பாரும்-பொன்னாடர்பணிகயிலைவாசரே-புலியூரீசரே....................(வேண்டா) (௬)

——**)*—*(**——

பதம்-இ-ம்-நீலாம்புரி- ஜம்ப்பதாளம்.

பல்லவி.

அழைத்துவாபோடியடிமானே.........................யின்பந்

அநுபல்லவி.

தழைத்தபுலியூரிற் றாண்டவனைத்தாமே ..........................அழைத்து

(சரணங்கள்)

(க) அன்னநடைமின்னேயெனிவ்வன்ம-மென்னை - யன்னையென்றும்பாருன்றன்தன்மம்-சொன்னேனொருவார்த்தைகன்மம்- நாளுஞ்-சுகமுறவேமருவாதஜென்மமென்னஜென்மம்...... .........(அழைத்து)

(உ) செம்பொன்மல ரின்பமுடன்சூடி - யுயர்-செம்பவள வாயாவிசைபாடிக்-கும்பமெனுமிருதனத்தைநாடி -யென்னைக்-கூடியவர்போனவிடற்தேடியுறவாடி..........................................(அழைத்து)

(௩) தில்லைவனந்தனிலிருக்குமீசர் - எங்கள் - சிவகாமவல்லியுடன்பிரியர்தநேசர் - அல்லலறுத்தாண்டவபிரகாசர் - இப்போ-தன்னமேநீசொன்னால்வருவாரென்பிராணேசர்..........................(அழைத்து)(எ)

——*—*—*——

பதம் - இ-ம்-எதுகுலகாம்போதி - ஆதிதாளம்,

பல்லவி.

ஆசைதீரவே யென்னையணைந்தாலொன்றாதோ...... ....... .......*

அனுபல்லவி,

பூசைப்புரியுந்தில்லை - யம்பலசபைநடேசா... ...(ஆசை)

(சரணங்கள்)

(௧) சந்திரனைக்கண்டு நீல்மத்தரங்க மோங்கினதுபோல் - எந்தன்மீதிற்பட்சம் வைத்துவந்தா லொண்ணாதோ- கந்தர்ப்பன்விசைப்புஷ்பபாண மந்தி நேரமேவருமே- தந்திரமோசெய்வதெல்லாமந்திரசபைநடேசா (ஆ)

(௨) தேடிப்வல்லவன்பேடு கூடிமருவாதிருந்தா, னீடியவுலகிற்பேடோடி நின்றுய்யுமே- நாடியவந்தவெங்மேன் மோடிசெய்யலாகுமோ- பாடியகின்னரர்போற்ற வாடியசபைநடேசா... ............(ஆசை)

(௩) கருமேகங்கண்டுமயிலொருமைப்படுலீலைபோற்- கரிசனமுடன்சேர் தல்பெருமையதல்லவோ- திருவுள்மகிழ்ந்தென்னை மருவணைமீதினிற் கருதிப்புகழுந்தில்லைக் கநகசபைநடேசா..................(ஆசை)(அ)

———*———

ஏசல்-பதம்- இ-ம்-சௌராஷ்டிரம்-ஏகதாளம்;

பல்லவி

(௧) திருமுத்துப்பந்தலின்கீழ்- சுருதிப்பங்கயன்முதலோர் - இருபக்கம் தொழவேவரும்-இவரார்சொல்லன்னே- ஒருபத்தன்செயுந்தவத்தைக் கருதிதிருத்தவ்காட்ட- வருகிறபேரம்பல வாணர்காண்மின்னே ...*

(௨) வடகயிலைதனின்மூன்று - சுடருமுதித்ததுபோல் விடபமிசையே திவரு - மிவரார்சொல்லன்னே கடல்கடையும்போதெழுந்த - விடமமுதுசெயுநேசர் - நடநபராபரதில்லை- நாயகர்காண்மின்னே ......*

(௩) சுரரொனுமூவாயிரவர்- திரளுமுநிவருஞ்சூழ- விரதமிசையேதிவரு- மிவரார்சொல்லன்னே- சரமதராஜனுமூல்- புரமுமெரியட்டமூனித்த- பரமசிவகாமவல்லி- பங்கர்காண்மின்னே...........................*

(௪) கந்தருவரிசைபாட - தந்திரநான்மறைமுழங்க - இந்திரவிமானத்தில்வரு - மிவரார்சொல்லன்னே - அந்திவடிவினவர்தொண்டர் -புந்தியில்வாழ்வர்வால- சந்திரசேகரானந்தத்- தாண்டவர்காண்மின்னே *

—*******—

பதம்-இ-ம்-சௌராஷ்டிரம்- அட்டதாளம்.

பல்லவி

தேசமேன்பூசலே - ஞசையேன்பேசுநீர்.......... (தேச)

அநுபல்லவி

வாசஞ்சேர்தில்லைநடராஜரேமுந்தவும்மை... ............... *
மோசஞ்செய்தானேயந்தரோசம்போதாதோ... ... (நேச)

சரணங்கள்,

(௧) வாடியென்றழைத்துற வாடிமுகவிச்சைகள் - பாடியவன்மேற்சிந்து
பாடிக்கொள்வீரல்லாற்- போடியென்கிற பேச்சைப்போடீர்முன்னை
மும்பேய்க்கூத்- தாடியென்பதுமெய்க்கவாடியபாதரோ (நேசமேன்)
(௨) கொம்பனையாள் குதிரைக்கோப்புண்டானையொரு - கம்பஞ்சேர்த்
திர்சேர்த்தகம்புகன்றிடக்கண்டீர்- அம்பலவாணரோ ஆரம்பமேலனுமக்
கிப்போ- தென்போலுமேயொருத்தியின்பஞ்செய்யாளோ... (நேச)
(௩) பூண்டவாசையானேசம் பூண்டபோதேயெனக்கு- வேண்டாதவரைத்
தீண்டவேண்டாமென்றேனை-ஆண்டாரேநீரெணப்பெண்டாண்டார்ற
லைக்குமேலே-தாண்டவாநீரோதில்லைத்தாண்டவராயரோ(நேசமேன்)'ஆ

———*—*—*——

பதம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி

நானேவலியவந்தேனேகோபம்............... ........... *

அநுபல்லவி

ஏனேயம்பலத்துறைவானேதூயோனே ... (நானே)

சரணங்கள்.

(௧) நினதுமனதின்வன்மங்கண்டு - நெஞ்சி - நினையாதெல்லாநினைந்துநி
ன்றதுவுண்டு- கனதனமெனுமுலைரண்டு - நல்ல-காணிக்கையெனவல
ங்காரமாகக்கொண்டு ... ... ... ... ... ... ... (நானே)
(௨) தூரேதுமில்லையேயென்மீது - வீணே-தூறுசொல்லிப் பிரிந்துவந்
தேகுது- வேறேயொருவரைத்தூது- போக - விடுத்தாற்றீராதென்று
வேண்டியிப்போது........................................(நானே)
(௩) தில்லையம்பலத்திலாடி- நின்ற- சிவனே நீவாராதசேதியைநாடி - மு
ல்லையமளிமேற் கூடிக் - கொண்ட - மோகத்தை யுன்னி முயங்க
வேதேடி........................................(நானே)(ஏக)

—*********—

பதம் - இ - ம் - நீலாம்புரி - ஜம்பைதாளம்,

பல்லவி,

களவிலுமறப்பதில்லைமானே -நாளும்... ... ... ... *

அநுபல்லவி.

கனகசபையிலாடுங்கடவுள்பதந்தானே, (கனவி)

(சரணங்கள்.)

(௧) ஒன்றாகநின்றசுந்தரமும்- மூவுலகுக் - குயிர்க்குயிராகியே யுணர்த்
தும்விசித்திரமும்- குன்றாததருளளிக்குந்திரமு- மென்னைக் - கூடிவி
ளையாடியவுபாயதந்திரமும்.............................(கனவி)
(௨) இன்பவெள்ளத்தழுத்தமிங்கிதமும்- க்ரபை-யெங்கெங்குந்தானுயி
ருந்திலகுஞ்சதமும்- அம்பரத்திலாடியபொற்பதமும்- புஷ்ப- வணை
மீதிலெனையணைந்தவநுபோகவிதமும்.............................(கனவி)
(௩) பரமகல்யாணசர்வேச- மெங்கள்-பார்வதியெனுஞ்சிவகாமிபிரானே
சங் - கருணைசந்திரசேகரவிலாசம் - தானுங் - கனகசபையிலனவரத
மும்நடேசம்.............................(கனவி) (௰௨)

——✱✱✱✱✱✱——

பதம்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தனித்திருக்கப்போகாதுமானே-தில்லை........✱

அநுபல்லவி

வனத்துநடராஜர்தலைமை மருவாமனுனே.............(தனி)

(சரணங்கள்)

(௧) காமன்பெருங்கணை வளைத்தெய்யப்- பூர்ணக் - கலைநிறைந்தமாமதி
யுந்தழமாரிபெய்யச்- சாமமெல்லாங்குயிற் கூவிவைய வென் - றலையி
லெழுத்தோவிதென்றெண்ணிமனம்நையத் .....................(தனி
(௨) இரவோர்யுகமாகுதெங்கேசெல்வே - னினி - யென்தாத்துப்பெண்க
ட்கிதை யேதென்றுசொல்வேன்- காவிலெப்புமதனையென்று வெல்வே
ன்- வீறு- காதல்வெள்ளந்நீந்தென்று கலந்தணைந்துபுல்வேன் (தனித்)
(௩) திங்கள்கங்கையரவணியும்வேணிப்- புலியூர்ச் - சிவகாமவல்லிபிடப்பா
க மாக்கணீ - செங்கமலப்பதத்தின்மணமூணி - நறுந் - தேன்கமழும்
பூங்கொன்றைத்தொடையதனைக்கேணி.....................(தனி)(௰௩)

——)✱✱✱✱✱✱✱✱✱(——

பதம்-இ-ம்-கல்யாணி-அடதாளசாப்பு.

பல்லவி,

சபையில்வந்தெத்திர் நில்லடி..........அவளைக்கிட்டித்
தழுவவுன்றா... ... ... ... ... ...(மல்லடி)

அநுபல்லவி,

உபசரிப்பேன்சொல்லடி - அம்பலவாண..................*
ருளிவதிந்தெனை வெல்லடி ... ... ... ... ... ...*
சுபதினமென்றன்க்குச் - சொற்பமாய்வந்ததிப்போ... ...*
அபிநயம்பிடித்துக்கொண்டலைந்துநீதிரிகிருய் ... (சபை)

(சரணங்கள்)

(௧) வழக்கமென்றறியாயோடி- நாலுபேர்சொன்ன-வார்த்தையுங் குறியா
யோடி-இழுக்குக்குச்சிறியாயோடி-திறவெடுத்தா-லிடம்பார்த்துச்சொ
தியாயோடி-உழக்கிற்கிழக்குமேற்கென்றுண்டாக்குகிருய்த்தேடிமழை
க்கொதுங்கிமனைக்கு வழக்கிடுகிருய்வாடி ... ... ... (சபை)
(௨) தெருவிற்பெண்களைக் கூட்டுரு - யொளித்திருந்து- திருடக்கன்ன
க்கோலமிட்டுருய்- கருதித்திரகன்மூட்டுருய் - விரித்துனது - கடினத்
தொண்டையைக்காட்டுருய்ப் - பெருமைக்கொருசரிகைப் புடைவையி
ரவல்வாங்கித்- தரமறியா துடுத்தித்தசுக்குகின்றசித்ராங்கி......(சபை)
(௩) இடக்குத்தொழின்மறக்குமோ - வடியுனக் கு- வினிமேற்குணம்நிற
க்குமோ- எடுத்தவடிசிறக்குமோ - உன்னிடத்தினி - வின்பநயம்பிறக்
குமோ-முடிக்காயம்பலத்தானை- மயங்குவேனுனென்று-திடுக்கிட்டெ
வருமெச்சத்தென்பாய்ச்சொல்கிருப்நன்று ... .........(சபை)(௰௪)

—*******—

பதம்- இ-ம் -சௌராஷ்டிரம்- ஆதிதாளம்,

பல்லவி,

தெருவில்வாரானோ-என்னைச்சற்றே- திரும்பிப்பாரானோ ..*

அநுபல்லவி,

உருவிலியொடுதிரிபுரத்தையு-முடனெரிசெய்த நடனராஜன்(தெரு)

(சரணங்கள்)

(௧) வாசன்முன்னில்லானோ - வெனக்கொரு-வாசகஞ்சொல்லானோ-நேச
மாய்ப்புல்லேனோ - கழைவைத்த - ராஜனைவெல்லேனோ - தேசிகனம்
பலவாணநடம்புரி - தேவாதிதேவன்சிதம்பரநாதன்......(தெருவில்)
(௨) போதுபோவதில்லையே - எனக்கொரு - ஆதுசொல்வாரில்லையே-வ
தறிந்தேனில்லையே - யென்மேற்குற்ற - மேதொன்றுமில்லையே-வேத
னுமாலுமூவாயிரருந்திரன்- விண்ணவருந்தொழவாடியபாதன் (தெ)

(௩) மெய்யென்றிருந்தேனே - பவனிட - சைகையறிந்தேனே, மையல்த ணிந்தேனே-பசத்திட- மெய்புங்குளிர்ந்தேனே - வையகமுய்யப்பத ஞ்சலிபோற்றிட-வாழுங்கனகசபைநடராஜன்........(தெருவில்)(யஅ)

———*———

பதம்- இ-ம்-குறிஞ்சி- ஆதிதாளம்,

பல்லவி.

கனவுகண்டெழுந்திருந்தேன்மானே-இல்லை.........*

அநுபல்லவி

அனவரதநடராஜர்க்கன்புசெய்பரானே................(கனவு)

சரணங்கள்

(க) தெருவினிற்பவனிவந்திடவும் - கண்டு - தெருசித்தளவிலென்றன் சேவ ன்வாதைப்படவும் - ஒருகிளியைத்தூதுபோகவிடவு - மாசை-புள்ளத் திலடங்காமலோடிப்போய்த்தொடவுங்.........................(கனவு)

(உ) கண்டவுடனவர்மீதில்விழவும்-வாசங்-கமழ் கொன்றைமாலைதணிந்தா தலுற்றழவும் - புண்டரீகபாதத்தைத்தொழவும் - கொங்கை - பூரிக்கவு டைதாழப்புறத்தாரிகழவும்.................................(கனவு)

(௩) அங்கசன்சமர்செய்தறவு-மெத்த - வாருப்பேராசை யந்நேரமுந்அ றவுஞ்-செங்கமலவணைமீதுறவுந்-திருத்- தில்லைத்தாண்டவனைச்சேர்ந்தி ன்பம்பெறவும்.......................................(கனவு)(யகூ)

—*******—

பதம்-இராகம்- சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லவாராய்-சேதி-சொல்லவாராய்...........*

அநுபல்லவி

சொல்லவாராய்சேதி சுந்தரமாமின்னே......................*

தில்லைநடராஜனென்னைச்சேர்ந்தமாமையல்..........(சொல்ல)

(சரணங்கள்)

(க) அடுத்தடுத்தேவந்தேபத்தரங்கம்பாராட்டித் - தடுத்தாக மோடிசெய் தாற்சொல்வதேதுமானே...........................(சொல்ல)

(உ) ஆசையாகினுலென்னவதூர்ஷ்டமுன்னிலவேணும் - பேசவுமறியா தபெண்பேதைதானடி...............................(சொல்ல)

(௩) இருவருமொருமித்திருந்தசுகங்களெல்லாம்-ஒருவரறிவாரோவூரிலொ ம்மலாகுதே......................................(சொல்ல)

(௪) சம்புசிவகாமிபங்கர்சந்திரசேகரர்- செம்பொனம்பலவாணர்சேர்த்த
ணைந்தமையல்....................................(சொல்ல) (௰எ)

—**********—

பதம்-இம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி,

மையல்மிகவுமிஞ்சுதே-சுவாமிநீரிப்போ... ...*
மருவாதிருந்தாலென்செய்வேன்...... ... ......*

அநுபல்லவி,

வையம்புகழ்தில்லைவனநாதரேயென்சாமி - மருமலர்மெத்தைமீதி,லிருவ
ருமாயிருந்து-சருவிச்சருள்கொடுத்து-மருவிமுத்துமுத்தாட- (மையல்)

(சரணங்கள்,)

(௧) வரிக்குயிலேழிசைகூவத்-தென்றலுந்தாவ - மன்மதன்மலர்க்கணை தூ
வ-உருக்குமதிதனிலேயுலைவாய்மெழுகதுபோல்- உருகுதென்றனுளம்
பரவசமாயுடலம்-வருகுதுகாமவெள்ளம்பெருகுதுவரவர ... (மைய)
(௨) களபகஸ்தூரிகள்பூசத் - தேவரீருடன்-கலந்திங்கிதமொழிகள்பேச-
அளகமலர்கள்வீச - வணைதனிலேயிருந்து - அந்தரங்கமாகி யெந்த
னுளமறிந்து-சிந்தைமகிழ்ந்துநீரின்னுளிற்சேரவர... ... ...(மையல்)
(௩) தில்லைமூதூரில்வாசரே-மூவாயிரவர் - தினந்தினந்தொழுமீசரோ- வ
ல்லிசிவகாமிமகிழுஞ்சபேசரோ-மாதவர்பணியும்பொற்பாதரோ தமிழ்க்
கொரு-நீதரோயென்பிராணநாதரோவரவர...............(மையல்)(௰அ)

—*******—

பதம்-இம்-எதுகுலகாம்போதி-அடதாளம்,

பல்லவி

மனதினிற்றய வானுற்றினந்தினமிப்படி-வருமோவாராதே......*

அநுபல்லவி,

தனக்குக்குறைவுண்டோவென்கிறீர்தேவர்சித்த...........*
மௌனதுபாக்கியந்தில்லைநகசபேசரோ.........(மனதினிற்)

(சரணங்கள்)

(௧) உருமத்துக் கமலம்போற்றிருமுகம் புலர்வானேன் - ஒருமனதாயி
ந்தாற் பெருமூச்சுவருவானேனென்-அருமத்தமனதுதான் தெருவெங்கு
மூலவுதே - பெருமைக்குத்தழுவுவதுரிமையோசாமி ...(மனதினிற்)
(௨) எவர்மோகந்தன்னில் வீழ்ந்தெவர் மயமானாலுங் - கவரியின்காற்றை
ப்போற்று வளவேண்டாமோ- அவரவரிச்சைவைத்தாணவாசருசிபோ
ல்-நவபுலங்காணுமன்றே சிவகாமிபிராணேசரோ...... ...(மனதினிற்)

(௩) தப்பவானலடிக்கடிசுயமாவரவேணும் - பிரியவார்த்தைபேசினற் செயலாவதேது-அயலாகவெண்ணத்தள்ள நியமமோதேவர்க்கு - மயலார்க்குஞ்சரியேநன்னயசபைவாணா...................... (மனதினிற்) (௰௧)

——*——

பதம்-இ-ம்-நீலாம்புரி ஆதிதாளம்,

பல்லவி,

நினைத்துக்கொண்டாற்சகிக்கப்போமோ-தனக்குத்தானே........*
நிகராகியசாமிசெய்விந்தையை..............................*

அனுபல்லவி,

அனைத்துலகுந்துதிக்குமம்பலவாணனொன்ற ................*
னந்தரங்கமறிந்தேதந்தவின்பசுகத்தை...... ......(நினைத்து)

(சரணங்கள்)

(௧) வெடித்தமல்லிகைமுல்லை - முடித்தென்குழலைநீவி - மடித்தசுருள்தந்திதழ்-கடித்தசம்பிரமலீலை.............................(நினைத்து)
(௨) முலையைநெருடிநெஞ்சை - உலைமெழுகாயுருக்கிக் - கலைநெகிழ்த்தியமிர்த - நிலைசோதித்தவிதத்தை................ ..........(நினைத்து)
(௩) முத்துமுலைமேற்கையை- வைத்துநகம்பதித்துச் . சித்திரமஞ்சத்தி-முத்துமுத்தாடினதை ................. ................(நினைத்து)
(௪) நாமரூபமொன்றில்லாச் - சோமசேகரர்சிவ - காமசுந்தரிமகி-ழ மசபேசரின்பம்.................. ............ ..........(நினைத்து(௰௨)

——*——

பதம்- இ-ம்- நீலாம்புரி-ஜம்பை தாளம்.

பல்லவி,

பிரிந்தாலுமறக்குதில்லைபெண்ணே...... ... ...நடதம்

அனுபல்லவி

புரிந்தாரம்பலவாணர்-பூவணையின்கண்ணே............(பிரிந்)

(சரணங்கள்)

(௧) சந்தனகஸ்தூரிவகைபூசி-மெத்த - சரசவிங்கிதலீலைச்சுரதமொழிபேசி-சந்ததமணைந்தாலவெகுவாசி-இரவிற் - றனித்திருக்கும்பெண்சென்மந்தானென்னசீசீ.....................................(பிரிந்தாலு)
(௨) முலைமீதிலழுந்தவைத்து நகத்தைக்- கொஞ்சி - முகத்தின்முகம்வைத்துக்குறிபடுத்தியதரத்தை - கலைநெகிழ்த்தியுறவாடும் விதத்தை நாளுங்-கலவியநுராகமனுபவித்திருந்தசுகத்தைப்... ... ...(பிரிந்தாலு)

(௩) தென்கைலையம்பதியில்வாசர் - நாளுஞ்-சிவகாமவல்லியுடன்பிரியா தநேசர்-என்கவலைதீர்க்குஞ்சருவேசர்- எங்கு - மிணையொருவரில்லாத் ஈசர்நடராசர்.......................................(பிரிந்தாலு) (உக)

—*****—

பதம்-இ- ம்-கலியாணி-ஆதிதாளம்;

பல்லவி.

எத்தனைத்தவஞ்செய்தாரோ-மானே - தில்லை
ஈசருனைப்புணரத்தானே................ *

அநுபல்லவி,

கர்த்தனெனத்தெரியப்- பொன்னம்பலத்துளாடுங்
காரணபூரண வாரணமானவர்... ......(எத்தனை)

(சரணங்கள்)

(க) கொக்கிறகைச் சூடிவாருக்கிப்போது கொழுந்தும்வேருண்டாச்சே-மேலும் - அக்கரவம்பூண்டமார்பர்தமக்கு ரத்நஹாரமுமுண்டாச்சே-அந்தத் - தக்கனென்னும் மாமன்தலையை யறிந்தார்க்குத்தாக்ஷண்ணிய முண்டாச்சே- சற்றும்-வெட்கமில்லாதிரு வாணிக்குப்பட்டாடை மெத்தவுமுண்டாச்சே-யென்னம்மா........................(எத்தனைத்தவஞ்)

(உ) ஒருத்தருமில்லாத பரதேசிக்கிப்போ துலகெல்லாமுறவாச்சே-பெரு - முருத்திராக்ஷவட்டஞ் சூடுஞ்சடைக்கிப்போதுயர்பொன் துராவாச்சே-கையில் - தரித்தமான் கூச்சலைக்கேட்டவருக்கிப்போதுசங்கீதமுண்டாச்சே - புரம் - சிரித்தெரித்தவருக்குச்செகராக்ஷகமொனுந்திருநாமமுண்டாச்சே-யென்னம்மா........................(எத்தனைத்தவஞ்)

(௩) யானைத்தோலும் புலித்தோலு முடுத்தார்க்குமாடைத்திரளாச்சே- உயர்-வானத்தினம்புலி சூடினார்க்கிப்போது மணிமுடியுண்டாச்சே- மது-பானத்தைத்தமுன்னுன் சுமந்தார்க்குச்சைவப்பழமென்பேராச்சே பெண்கள் - மானத்தைப்போக்கினூர்க் காசரெனுமொரு பட்டமுமுண்டாச்சே-யென்னம்மா........................(எத்தனைத்தவஞ்)

(ச) மாட்டிலேறித்திரிவாருக்குவேண்டியவாகனமுண்டாச்சே-தலை-ஓட்டிலிரந்துகுடிப்பாருக்கிப்போதுயர்பாத்திரமாச்சே - ஒரு-வீட்டிற்குடியிருந்தேபதியார்க்குவிண்டோய்மதிலாச்சே-சுடு- காட்டிலாடுவார்க்குத்தில்லையென்றேயொருகாணியுமுண்டாச்சே-யென்னம்மா.(எ) (உஉ)

பதம்-இ-ம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி

தெண்டனிட்டேனென்றுசொல்வீர்- நடேசர்க்குநான் ... *
தெண்டனிட்டேனென்றுசொல்வீர்.................*

அநுபல்லவி

அண்டமெல்லாம்பரவும் - கொண்டல்காள்கும்பிட்டே..........*
ஞண்டவரொணுந்தில்லைத் தாண்டவராயர்முன்போய்த் ... (தெண்ட)

(சரணங்கள்.)

(௧) பொருந்துங்காதல்கொண்டு - பொன்னிதழ்த்தேனுண்டு - இருந்தோ
ர்க்குச்சொல்லவோவிண்டு- ஏகாந்தந்தனிற்கண்டு............... (தெண்ட)
(௨) கண்டாரல் வருமப்பேச்சு - கன்னிவயதிலேச்சு - பண்டுசொன்னதும்
போச்சு- - பார்வையவன்மேலாச்சு.................. (தெண்ட)
(௩) மன்னும்நாணம்போக்கி- மனதைத்தான்மலர்க்காக்கிச் - சென்னிமே
ற்காந்துக்கித் - தில்லைப்பதியைநோக்கித்.......... (தெண்ட) (௨௩)

—**********—

பதம் - இ-ம்- காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

மனதறியாமன்மையல்கொண்டேன் - கொண்ட... ... ...*
மையலுக்கென்னபலன்கண்டேன்.......................*

அநுபல்லவி.

தென்முகிருபைபுரியும்நேசர் - தில்லைச்...............*
சிவகாமிமகிழ்ந்திருந்திருநடராஜர் ... ... (மனதறி)

சரணங்கள்,

(௧) மனத்தில்தாய்க்குவெறுப்பாச்சே - இனி- வரவரநிஷ்டூரப்பேச்சே
நினைத்துக்கொண்டாற் பெருமூச்சே - பருவ - தேனிளமையர்க்கிதெல்
லாமேச்சே..........................(மனதறியாம)
(௨) மதிகாய்வதென்னகொடுமையோ- மாரன்- மலர்க்கணையெய்வதுநா
கையோ- சதிக்குயில் கூவுதுபொய்யோ- நிமிஷந் - தானுமொருயுகமா
குதையோ..........................(மனதறியாம)
(௩) அதிசெய்துசொன்னதொருகோடி- செய்த- சகலீலைதன்னைமிகநாடி
அதிவிதமாக்கவிபாடி-தில்லை-யம்பலவாணனைதான்கூடி(மனத) (௨௪)

—*****—

பதம்-இ-ம்-நாதநாமக்கிரியை-துருவதாளம்.

பல்லவி.

மனமுருகுது- விழிபுனல்பூணுது - மையல்பெருகுது-மதிம
னன்மூளுது- வருமுருவிலீசர- மெனைநீண்டுது- வகையெ
ன்னசெய்வேன்... ... ... ... ... ,.... ... ...*

அனுபல்லவி.

அனவரதமு-மதிவிதத்தாண்டவ- மரவம்புலி- முநிதெரிசித்திடும்*
ஹரஹரசிவசிவ-வென்னையாண்டரு ளம்பலவாணா......(மனமுரு)

சரணங்கள்.

(௧) தலமீதொருதாயென்தந்தை தமரோன்மைந்தர்தாமேன்- மலரோன்சந்
தநமேன்பழுகேன்- மையல்சால்வதமேகலைசோருது- வளைசோருது-
நல்வகைசோருது- மெய்சோருது-கநமுலைசோருது- பணிசோருது-
தெரிமுடிசோருதையோ- இலையோகிருபை நீவந்தென்னை யணைவிலை
யோவினி நிரந்தரமந்திர மிலையோவினியுயிர்விடுவேன்பழி- யெய்து
வதினியே ... ... ... ... ... ... ... ...(மனமுருகுது)

(௨) விரகாக்கினிமேனியி லெழுகுதுவேண்டாம் - வேழமுண்டகனிபோ
ல்-ஒருராத்திரி நாலுகமாய் விழியுறங்கேன் துறங்கேன் - அருளாற்புக
ழ்ந்திடுவது முனையே - அருளாத்திலம் பணிந்துமுனையே- அருளாற்
றெருமுவதிடுவது முனையே- அறிவேனறிவேன் கருணாகர தென்புலியூர்
ச்சிவகாமசவுந்தரி பாகாவுன் - கருணா கடாக்ஷமேபுரிகுவாய் - கநகச
பேசா................................... ..... (மனமுருகுது)

(௩) தவசம்பவிதகுண குணந்தகு- தகுதிந்திமிதிமியெனநின்றொரு- சவ
தம்பெறத்திருநடநம்புரி தருசங்கரனே - நவசந்திரநுதல்வேல்விழித
ருநவசிந்தையிலுருகியிதம்பெற- நவபஞ்சனைய தனின்மகிழ்ந்தெனை
நண்பிலணைந்தாள் - சிவசங்கரதிரிசூலாதர - திரியம்பகதிரிலோகநாய
கா- திரிபுண்டரஹரமகாதேவ- தேவராயமூர்த்தி...(மனமு) (௨௫)

முத்துத்தாண்டவர் சபாநாதர்பேரில் பாடியபதம்-

முற்றிற்று-

உ

சபாநயதர்பேரில்

# தில்லைவிடங்கன்

# மாரிமுத்தாப்பிள்ளைபாடிய

# கீர்த்தநம்

கீர்த்தநம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்,

பல்லவி.

தில்லைச்சிதம்பரமே - அல்லாமல்வே - றில்லைச்சுதந்தரமே*

அநுபல்லவி.

சொல்லுக்கெளிதுநெஞ்சே - சொல்வாய்சிவகாம.........*

வல்லிக்கன்புரசபை - வாணன்வீற்றிருக்கும்... (தில்லைச்சித)

(சரணங்கள்)

(க) தோற்றமும்மலவேளைக் காற்றிவிம்பஞ்சாகத் - தாற்றியொழித்துங் குறையாற்றிமயக்கந்தீரத் - தேற்றியணியுந்திருநீற்றிருவிருவினை - மாற்றிப்பரகதியிலேற்றிவைப்பதற்கு.................. (தில்லைச்சித)

(உ) தத்துவநிலைதெரிந்தொத்தமனதோடிரு - கைத்தலமெழுகுவித்தே முடிமீதில் - வைத்தபிறகுபயபத்தியுடனேதெரி - சித்தபொழுதிலுயர் முத்திதந்தாளத்.................................. (தில்லைச்சிதம்பரமே)

(௩) காசினிதனிற்கயிலாசமொன்றுருநட - ராசரிருத்தபாவநாசஞ்செய் வதிதுவே - வாசஞ்செய்வோருக்குமோசம்வராது - லேசம்வராதே மபாசம்வராது.................................. (தில்லைச்சிதம்பரமே) (ச)

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்,

பல்லவி,

தெரிசித்தபேணாப்பரிசுத்தராகச் - சிதம்பரமன்றியுண்டோ......*

அநுபல்லவி.

விரிவுற்றபூலோக கயிலையென்றுவமையொருமித்து நடந்தெதிர்கொண்டு - மேரு - வொத்தவிரண்டோடிரண்டு - கோ - புரத்தைக்கண்ணாரவேகண்டு.................................(தெரிசித்தபேணா)

(சரணங்கள்)

(௧) மேலைத்திசைக்கோபுரத்தினில் கற்பகவேழமுகன்றனைவாழ்த்தி - நல்ல - நீலத்திருமயிலேறுங்குமரன்முன் நின்றுதொழுதடி போற்றி- அறு- கூலச்சிவகங்கைமூழ்கியநீரையுட்கொண்டுமனக்குறைபாற்றி -பித்த- ஞாலத்தையீன்ற சிவகாமிசுந்தரிபாலுற்றிருவினைமாற்றி - வெகு- சீலத்துடன்மலர்சாத்தி- அர்த்த- சாமத்திலேதொழுதேத்தித் ... (தெ)

(௨) நம்பித்திருமூலஸ்தானத்தில் துதிதாத்சழும்பேரலேறப்பயின்று -உமை- அம்பிகைத்தாளைப்பணிந்துமலாதியோடைந்துபுலாதியை வென்று-நித- மும்பர்வணங்கும் பேரம்பலந்தன்னைக்கண்டின்மையாய்ச்சேவித்தகன்று- கன்ன- வெம்பிறவிப்பிணிவேரைப்பொடிசெய்யுஞ்- செம்பொற்சபைநாடிச்சென்று- கொடிக்- கம்பத்தருகினினின்று - கை யால்- கும்பிட்டரகராவென்று... ... .... ... (தெரிசித்த)

(௩) ஞானசபைதன்னைச்சேவித்தங்குள்ள ரகசியவுண்மையைநாடி- பொலி-பாதத்தையற்புதஞானக்கண்ணாலறிந்தானந்தவாரியிலாடித்- தவ-மோனத்துடனங்கிருந்து செபங்கண்மூழ்துஞ் செபித்தன்புநீடி-நாளும், வானத்தவர்க்குங்கிடையாதமுத்தி நிதானத்திற்சேவடிதேடி.மெய்த்தி- யானத்தினாலதுபாடி- யாக்கை யாளத்தைவேரறச்சாடித்...(தெரிசி)(௨)

—*********—

கீர்த்தனம்- இ-ம்-பூரிகல்யாணி-ஏகதாளம்.

பல்லவி,

தெய்வீகஸ்தலமிந்தத்தில்லை-இந்த-வைபோகமெங்கெங்குமில்லை *

அநுபல்லவி,

தூய்மவேதனுமாலுந் தேடியேகாணாச் - செய்யதாமரை தாளாலாடியேநின்ற - வையனிருந்துவாசஞ்செய்யுந்தென்கயிலாச - மாமேயினைசொல்லப்போமோவொருவராலே... ...... ... (தெய்வீக)

(சரணங்கள்)

(௧) மதிலாயெழுந்துபஞ்சாக்ஷரமே-சுற்றிவளைந்திருப்பதுஞ்சிதம்பரமே மேலாஞ் - சதுர்வேதநாலுங்கோபுரமேயாகிச்சமைந்துநிற்பதும் நிலவரமே- இது-வதனாலெத்தலத்தையும்-வெல்லுமே-புலகம்-பதினாலுமிதைத்தானே சொல்லுமே - யாற்குங்- கதிதந்தவிதத்தாலேபதியொன்றையினைதப்போலே- காணேனுண்டென்று - வீணே சொல்லக்கூடுமோ... ... ... ... ... ... (தெய்வீகஸ்தலமிந்தத்தில்லை(

(௨) மூர்த்தியுந்தீர்த்த மூந்தலமு-மூன்று-முக்கியமுமொருமித்தநலமுங்
கண்ணுற்-பார்த்தவர்க்குண்டோ சஞ்சலமும்-நினைவின்-படியெலாந்தமத
ப்துஞ்சகலமும் - வேத- சாஸ்திரமுமின்னதத்தானேபோதமே - நிதி
வீந் - தோத்திரமாயுணாத்தாலும் - போதுமோ திதிலோர்-மாத்திரை
யாம்போது - வீற்றிருந்தாற்றீது - வருமோபிறவிபைத - திருமோச
ற்றுத்தாது..................................................(தெய்வீக)

(௩) எப்போதும் நலந்தருவதுவே-இது - வெல்லாச்சமயத்துக்கும் பொ
துவே - இதந்-தொப்பான தலமினிபிறவே-விராட்- டேனுக்கமலத்தா
னமிதுவே - வச்சிரக் - கொப்பாருங்குழைச்சிபோர் பாகனுர்-காலத்-
தப்பாதவுமறமிகேஷிகளுர் - நமர் - கொப்பாத்தலத்தமது - மெய்பாந்
தெமிது-வுண்மையிதிலுள்ளவண்மையின்னுமதத்தம்...(தெய்வீக)(௩)

—※※※※※※※—

கீர்த்தநம்-இ-ம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்,

பல்லவி

எந்தத்தலத்தையுமித்தத்தலத்துக்-கிணைசொல்லக்கூடாதே...... (ஐயன்)

அநுபல்லவி

சொந்தத்தலஞ்சிதம்பரமென்றுமனதிலெண்ணித்-சிந்தித்துக்கருமல்போவே-எ
திர்-வர்திட்டமுயலகன்மேலே-ஆநந்தக்கூத்தாடினந்தாலே-.(எந்தத்தல)

சரணங்கள்,

(௧) ஆசியில்வெண்குட்டந்தீர்ந்துசவுடதேசத்தரசன்பொன்னிறமானான்
தேகம்-நீசச்-சாதியின்மூவர்புலைத்தன்மைபோய்க்கதி சார்ந்தாரதுவே
தெய்வீகம்-ஒரு-வேதியன்வாயிலோர் சோறிட்டுக்கூடுபோய் வீட்டுந்
புகுந்ததுகாகம் - பின்னுந் - தீதறுதவத்தாலெப்போதுந்தரிசனம்செ
ய்திடுமோர்புலிநாகம்-முன்னம் - பெய்ததுபொன்மழைமேகம் - இந்
த-வைபோகமின்னமநேகம்.........................................(எந்தத்தல)

(௨) கழுகுபுசிக்கத்தவறியிறந்தகபறுவடைந்ததுகதியே-நீரின்-முழுகியெ
ழும்பவிளமையைத்தந்து முதுமைமையத்தீர்த்ததிட்டதியே-கூவி-பழு
தபுலிக்குட்டி யுண்டிளப்பாறவருகில் வந்ததுபயோததியே - கொலை-
பழிசெய்யும் பார்ப்பானொருவனுக்கு முத்திபாலித்ததையன் சந்ததி
யே-அதனு- வித்தையேதினந்துதியே செய்து - மேவிட்டுச்சொல்லு
ம்சுருதியே.............................................(எந்தத்தல)

(௫) எங்கெங்குந்தானிதைப் பூலோககயிலாசமென்றுரைப் பாரொருபே
ரும்-இதி - லங்கமிறந்துதிரும்பிப்பிறப்பாரோவாடியதானைக் கண்டோ
ரும்-மலர்ப் -பங்கயன்மால் முதலோர்வந்தருச்சனை பண்ணுகிறாரதை
ப்பாரும்-ஒளி - பொங்குந்தொளாயிரத்தொண் ணூற் றொன்பதுங்குக்
கலையிதிலாருந்- தல - மெங்கெங்குமோர்கலைசாரு - மதுவு - மிங்கர்த்
தசாமத்திற்சேரும்........................................(எந்தத்தல)(௬)

—*✿*—

கீர்த்தநம்-இம்-பியாகடை-ஆதிதாளம்.

பல்லவி

எந்நாளும்வாசமாய்ச் சிதம்பரஸ்தலத்திலே-இருக்கத்தவஞ்செய்தேனோ

அநுபல்லவி.

பன்னகம்புலிகாகம்......... ......பார்ப்பான்புலையன்முதல்
பத்திசெய்தேயிதின்-முத்திபெற்றிடலாலே ... (எந்நாளும்)

சரணங்கள்,

(௧) முத்தியன்னை யுதரந்தனிலேகரு - விருந்துதிருவயிறு நொந்துபசி
யொடுபி-றந்துநிலமிசைதவழ்ந்துதளர்நடை ந-டந்துபருவமாகி ..*
இந்தமனைமனைவிமைந்தர்நிதிபலவு-மெந்தனுடைமையிதுசொந்தமென
வேசொல்லின்-சிந்தைதனின்மத மிகுந்துபலபலவ- கந்தைகளேசெய்
து-திரிந்ததல்லாமல்........................................(எந்நாளும்)
(௨) வட்டமுலையிற்றொங்க விட்டபணிபழகும் - ஒட்டவச்சிரமிழைத்தக
ட்டியபழகும்நுதற் - பொட்டழகுமிடையிற்பட்டழகுமுடைய-சட்ட
மூழிபர்வலையிற்........................................*
கிட்டியதிவழித் துமட்டியெனவேதொடர்ந்-தொட்டினின்மொய்த்தசிறு
சிட்டெனவேயவர்கள் - தொட்டுழயக்கிலகப்பட்டுமிகவுமதி - கெட்
டுமெலிந்தலைந்-திட்டதல்லாமல்..............................(எந்நாளும்)
(௩) தேசமதற்குளொருகாசுகொடுக்கப்பிறா - யாசமனத்தர்தமைப்போ
ஜனைனத்துதிசெய் - தாசுமுதற்கவிகள்பேசியலுத்துமனங்கூசுவதே
யல்லாமல்........................................*
ஸ்ரீசனதிகப்பிரகாசனணிசருமத் - ஆசனுமைமகிழுல்லாசனடியவர்கள்-
நேசதில்லைநகயிலாசன்கதகசபை-வாசன்புலிசைநட-ராஜனைச்சேவித்து-
(எந்நாளும்) (௪)

——**)*—*(**——

கீர்த்தநம் - இ-ங்-மத்தியமாவதி-ஏகதாளம்

பல்லவி,

பலமந்திரத்திற்கும்.................. பலமந்திரம்பொன்னம்
பலமென்னும்.................................. ...மந்திரமே

அனுபல்லவி.

புலவர்க்கும்முநிவர்க்கும் .................. பலவர்க்குந்தியானிக்கப்
பொதுவாயிருக்குமந்திர-மதுவேசுருக்கமந்திரம்....... ...(பலம)

[சரணங்கள்,]

(௧) ஜனன-மரண வாதைநீக்கியமந்திரஞ்-சேருமும்மலமாயைபோக்கி
யமந்திரம்-மனதின்மெய்ஞ்ஞானமுண்டாக்கிய-மந்திரம்- மந்திரத்திற்
கெல்லாஞ்சிலாக்கியமந்திரம்................................ .........(பலம)

(௨) முதுமைபோயிளமைகொடுத்திட்டமந்திரம் - மூன்றுபுலையர்நீசம்
விடுத்திட்டமந்திரங்-கதியிலோர்கண்காகமடுத்திட்டமந்திரங் -காட்டுப்
புலியைப்பாம்பைத்தடுத்திட்டமந்திரம்..................... ......(பலம)

(௩) அதுவேயெவர்க்குங்காயசித்திக்குமந்திரம்- அதுவேநினைவின்படிசி
த்திக்குமந்திரம் - அதுவேயழிவிலாத முத்திக்குமந்திரம் - அதுவேசி
ந்தித்தநெஞ்சிற்றித்திக்குமந்திரம்..............................(பலம) (௬)

கீர்த்தநம்-இ-ம்-மோகனம் -சாபுதாளம்.

பல்லவி.

பரந்தனையடைந்திடவேணுமென்றுற்சிதம்......*
பரந்தனையடையுங்கள்-மாந்தர்களே...... ......*

அநுபல்லவி,

வரந்தனைத்தருமிந்தத்தலந்தனிமேவியிருந்த............ *
மாந்தரொல்லாருந்தவவேந்தரோ..............(பரந்தனை)

(சரணங்கள்,)

(௧) காட்டிலிருக்கின்றபுலியும்பாம்பும்பெற்ற காட்சியுங்கேட்டிருப்பீர்க
ளே - வீட்டினிலிருக்கின்றகாகமுமுயர்ந்தமேல்- வீட்டினிற்சென்ற
துங்கேட்டிருப்பீர்களே...................... ................(பரந்தனை)

(௨) சாதியிலீனமுள்ளபுலையர்மூவரிதிற்றனித்தனியேபுனிதராகினர்- வே
தியரிலதிக பாவியொருவரிதின்-மேவிப்பரகதியிலேகினர்... (பரந்த)

(௩) வெள்ளியினுலெல்தனையனிருக்கச்செய்த வீட்டைவடகையிலையென்
பாரோ-தெள்ளியசெம்பொன்னினுற் செய்தவீடித்தை- தென்கயிலாச
மென்பாரோ.....................................(பரந்தனையடைந்திட) (எ)

கீர்த்தனம்-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி,

ஒருக்கால்சிவசிதம்பரமென்றுநீசொன்னா-லிருக்காதாம்வினையே ✱

அநுபல்லவி,

கருக்காமருக்கிதுதெரியும்பொதுவிலொரு.................✱
காலைத்தூக்கிநின்றகோலத்தைமனதில்வைத்... (தொருக்கால்)

(சரணங்கள்.)

(க) சூழ்வலியுடைய பஞ்சாக்கினியிடைநின்று சொரூபமுங் கரிவானேன்-
மனை-வாழ்வைவெறுத்துக்கனி காயுஞ்சருகுந்தின்று மாதவம்புரிவானே
ன்-பல- வேள்விகளைச்செய்தந்தவோமகுண்டத்திநெய்யை வீணிலே
சொரிவானேன்-காதுங் - கேள்வியில்லாதமுழுமுழுநிகளாய்த்தலையித்- தி
னைத்திட்டசடைதனை - வளர்த்திட்டுத்திரிவானேன் ........(ஒருக்கால்)

(உ) வேதமந்திரஞ்சொல்லி யாயிரந்தெண்டன்புவி மீதினில்விழுவானே
ன்-இரு-பாதமுஞ்சிவந்திடத்தலங்கடோறுந்திரிந்துபலதெய்வந்தொ
ழுவானேன் -கொல்லன்-ஊதும் துருத்திபோலே வாயுவைக்கும்பித்து
டல்யோகத்திலெழுவானேன்- ஐந்து - பூதங்களுங்கலக்கவெக்கப்பிரதட்
சிணமாய்ப்-புரண்டு புரண்டுமதி-மருண்டெழுந்தழுவானேன் ...(ஒ)

(௩) உருக்கியுடலைமெத்தவருத்தியுநக்கத்தையு மூனையுந்துறப்பானேன்-
சீலை-யணைக்கில்லா நிருவாணியாகிலோக வாழ்க்கையனைத்தையுமறப்பா
னேன்- வரு - நரைக்குந்திரைக்குஞ் சற்பமருந்திச்சித்தர்களாகி - நா
டெங்கும்பறப்பானேன்- சபைத்-திரைக்குள்ளே மறைவாகியிருக்கும்
ரகசியத்தின்-திறந்தெரியாமல்வீணே - யிறந்தின்னம்பிறப்பானேன்,
[ஒருக்கால் (அ)

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி,

சிவசிதம்பரமென்று நினைப்பாயே - உனக்
கபசெயம்வாராதொன்றுமனப்பேயே.........✱

அநுபல்லவி

தவசருமுனக்கிதென்றறிவாயே-நல்ல- கநகசபையில்புலி-பணமு
னிவர்கள்தொழ-வனவரதநடநத்-தனையருளுநீ...........(சிவசிதம்)

சரணங்கள்.

(க) கன்மவினைபொய்களையாறலாமே- பொல்லா - மன்மதவாதைதீர்ந்து
தேறலாமே-சென்மசாகரக்கரையேறலாமே - யெழுந்து-சென்றபோ

றிலுஞ்சிற்பமா- நின்றபோதிலுமொன்றைத் - தின்றபோதிலும்படுக்-கி
ன்றபோதிலும்நீ............................ (சிவசிதம்பரமென்று)
(௨) மனிதருறவைமெய்யென்றிருக்காதே- கதிர்முன்-பனியானவாழ்வை
ச்செல்வஞ்செருக்காதே- தனிவேதமந்திரமிதைச்சுருக்காதே- பசி -தி
ந்தவேளையுமிடர்- வந்தவேளையுமனம்- நொந்தவேளையும்பின்-னெந்
தவேளையும்நீ.................................. (சிவசிதம்பரமென்று)
(௩) ஒருமந்திரத்தையும்நீசெபிக்காதே - யிந்தத் - திருமந்திரமன்றியொ
ன்றும்லபிக்காதே- கருமந்தப்பிதஞ்செய்து தவிக்காதே-இல்லைக்- கா
ட்டினிலையன்செய்த- வாட்டினிலுறுதியை- நாட்டிடுவொன்றிலு- மா
ட்டிநில்லாதே.................. (சிவசிதம்பரமென்று) (௯)

கீர்த்தநம்-இ-ம்-செஞ்சுருட்டி- ஆதிதாளம்,

பல்லவி,

இன்னமுமொருஸ்தலமிருக்குமென்றெருக்காலே ... *
வேண்டாமலைக்கிருப்மனதே................................*

அனுபல்லவி

சொன்னசொன்னஸ்தலங்க - ளெங்குமோடிக்களைத்துச் ...*
சோதித்தறிந்தாவித்த - ஆதிச்சிதம்பரம்போல் ... ...(இன்)

(சரணங்கள்)

(க) சருக்கரையும்தேன்பாகுஞ் சரியாய்நிறம்பெற்றாலுஞ் - சருக்கரை
ருசிமாவிலிருப்பதுபிரயாசம்-முருக்குஞ்செம்பரித்தியுமநிறமொன்றா
னாலுமந்த- முருக்கிலுண்டோவாசம்- தரிக்கும் வச்சிரக்கல்லுந்தகிப்
பொத்திருந்தாலுந்தறிபைத்தள்ளிவச்சிரந்தனைத் தரிப்பதுல்லாசம்-
உரைக்கும்ஸ்தலமனந்தம் தரைக்குளிருந்திட்டாலு-மும்பர்வந்துதொ
ழும்பொன்- னம்பலமேகைலாசம்..........(இன்னமுமொருஸ்தல)
(௨) உப்புங்கர்ப்பூரமு மொன்றைப்போ லிருந்தாலு- மூரெங்கும்பெரி
தாய்க்கர்ப்பூரந்தனைச்சொல்லாரோ- இப்புவியிலெவர்க்கும் யோக்கிய
த்தருங்காவிரிக்- கேற்பதுசனஞரோ- ஒப்பரிதாய்விளங்குந் தெய்வீ
ககங்கையாற்றுக் குவமையெடுத்துரைப்ப திவர்க்கழியாற்றுநீரோ -அ
ப்படிப்போலநேகம் ஸ்தலமிருந்தாலுமந்த- வல்லல்வினை தொலைக்கு
நீ- தில்லைப்பதிக்குநேரோ........................ (இன்னமுமொருஸ்தல)
(௩) விண்ணுலகத்திலுடு மீனினமெல்லாங்கூடி- வெண்மைநிறமாமொரு
தண்மதிமுன்னில்லாது- தன்னுலவிபவல்லி திரளாய்ப் பூத்தாலுமொ
ரு தாமரைக்கொவ்வாது - மண்ணிலகத்திலுள்ள தருக்களனைத்துங்கூ

டி- மருவலவுங்கற்பகத்தவருக்கிணைவராது- புண்ணியஸ்தலங்கள் பல
விருந்தும்நம்பட்சன்வாழும்- புண்டரீக புரமபோற்-கண்டுசொல்லவே
தேது...........................(இன்னுமொருஸ்தல) (௰)

—***※***—

கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி- ஆதிதாளம்.

பல்லவி.

காலைத்தூக்கிநின்றாடுந்தெய்வமே - யென்னைக் *
கைதூக்கியாள் தெய்வமே.........................*

அநுபல்லவி.

வேலைத்தூக்கும்பிள்ளை - தனைப்பெற்றதெய்வமே.........*
பின்னும்புகழ்சேர்தில்லைப்பொன்னம்பலத்திலொரு, (காலை)

(சரணங்கள்.)

(௧) செங்கையின்மான்றூக்கிச்சிவந்தமழுவுந்தூக்கி - அங்கத்திலொருபெ
ண்ணையனுதினந்தூக்கி- கங்கையைத்திங்களைக்கதித்த சடையிற்றூக்கி-
இங்குமங்குமாய்த்தேடி யிருவர்கண்டறியாத........... (காலைத்தூக்)
(௨) நந்திமத்தளந்தூக்க நாரதர்யாழ்தூக்க - தொந்தமென்றயன்றாளஞ்
சுதியொடுதூக்க- சிந்தைமகிழ்ந்துவானோர் சென்னிமேற் கரந்தூக்க-
முந்தும்வலியுடைய முயலகனைத்தூக்கக்........... (காலைத்தூக்கி)
(௩) கும்பமண்டத்தைத்தூக்கக் கொடுங்கைக்கும்பத்தைத்தூக்கப்பைம்
பொற்சுவர்கொடுங்கைப் பாரத்தைத்தூக்க - எம்பியாரத்தைவிராட்டி.
தயதாமனாதூக்கச்- செம்பொன்னம்பலத்திலேதெற்குமுகமாயொரு
(காலைத்) (௰௧)

—******—

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்,

பல்லவி

உன்முகம் பார்த்தபயமென்று - லென்முகம் பார்த்தருளாமற் ...*
றென்முகமாயிருப்பதென்ன - வைம்முகத்தையாவே...........*

அநுபல்லவி,

பின்முகம்பார்த்தாடுந்தில்லை - மேவும்நடேசரேயருக்கன்......... ...*
நன்முகம்பார்த்திடவிரும்புந் - தாமரைபோலுன் விரும்பி......(உன்முக)

(சரணங்கள்)

(௧) யார்க்கோவந்தவிருந்தெனவே யறியாதுபோலிருந்தாற் - பார்க்கிற
வர்யாரினி யென்பரிதாபம்முழுதுந் -தீர்க்கிறதெய்வமறுதெய்தமுனை

யன்றியுண்டோ- நீர்க்குமிழியாக்கைதனை நீக்குமுன்வந்தாட்கொள்ளவை
யென்........................................ ... ... (உன்முகம்பார்த்தபய)
(௨) தூக்கியதாளினைமுடிமேற் சுமக்குமுயலகன்போலப் - பாக்கியஞ்
செய்யாதகொடும் பாதகனுதவினாலே - கூக்குரல்செய் தோலமிட்டுக்
கூவியுன்றன் கோயில்தனை- நோக்கிவல மாகவந்து நூறுதெண்டனிட்
டெழுந்து ........................... ..........(உன்முகம்பார்த்தபய)
(௩) காரினிற்பூங்கமுகுதொடுங் காவனந்தமேவுபுலி- யூரினிற்காண்பவர்
க்குமுத்திபுகவும்நடராயா- பாரினிலிவ்வுருவெடுத்துன்பதமலர்க்கான
காம- னீரினிலம்புலிபோலே நிலைகலங்கித்தலைவணங்கி...(உன்)(௰௨)

—**********—

கீர்த்தனம்-இ-ம்- சாவேரி- திரிபுடைதாளம்.

பல்லவி,

ஏதுக்குதவியிந்தகாயம் - சுமந் - ததினால்வருவதேதாயம்...*

அநுபல்லவி,

ஓதப்பிறைபணிசோதிச்சடைமுடித்தேவன்புலி சையின்மேவம்பலவ
ன்பொற்- பாதம்பணிவிடைக்காகித்தவஞ்செய்துபவத்தையொழிக்காமல
வத்திலேயிறந்...................................... (ஏதுக்குதவியிந்தகாயம்)

(சரணங்கள்,)

(௧) தருமராஜன்தறிக்குங்கட்டை-பிரமன்- வதைக்குமொன்பதுபேற்றற்சட்
டை- கிருமிகட்கொருகன்மகுட்டை- காலன் - கிட்டும்போதினிலொட
லொட்டை- வருமேயிதைமெய்யென்போர்க்கும்பெரும்பழி மாங்கி
ஸமுஞ்சியும்வழும்பும்நிறைகுழி- யருமையினியிதைதனை யொழியொ
ழி- யாரும்தம்பொண்ணாது நீரின்மேற்குமிழி ............(ஏதுக்கு)
(௨) விஞ்சுமூம்மலஞ்சேரும்வீடு - புல-வேடனாவ ரிருக்குங்காடு - சஞ்
சிதப்பறவைக்கோர்கூடு- இதைச்- சதமென்றெண்ணுவ தெல்லாங்கே
டு- மஞ்சின்மேலிடுவாணவில்லினைகூறும் -வாழ்வைநிலையென்றுமயங்
கித்தினந்தோறுந்- துஞ்சிலம்பொழிகலங்கிமதிமாறுஞ் - சுவாசமடங்
கினுத்தொடக்கூடாதுதாலும்... ... ... ... ... (ஏதுக்குதவி)
(௩) கெடுவினைமூளக்குந்தோல்மூட்டம்- கழுகு- கொடும்நாய்நரிக்கும்
விருந்துட்டஞ் - சுடுகாட்டக்கினிக்கிடுதாட்ட-மந்தச்-ருக்ஷம்பார்த்தி
டில் பொம்மலாட்டம்- விடுவிடுருவெடுத்திடுவதனைமுன்னே - வினைக்கு
க்கிருபைமருந்தளிக்கவல்லவன்னை- படரும்மெய்யன் பொன்னம்பல
வனடிதன்னைப் - பணிந்தாற்பிறவிநோய்தணிந்துபோம்பின்னை ஏ
(துக்கு) (௰௩)

—*******—

# நிந்தாஸ்துதி

கீர்த்தநம்- இ-ம்- ஆரபி- ஆதிதாளம்,

பல்லவி.

என்ன துணிவாய்நான் பயப்படாமல்வந்தேன் .... ...*
விணையடிபணிவேன் ஐயா... ... ... ... ... *

அனுபல்லவி

பொன்னம்பலவாணனே - முன்ன மூன்றனைப்பாடும்......*
புலவனை நீவிழுங்கும்- புதுமையைக்கேட்டிருந்தும்... (என்)

(சரணங்கள்)

(க) பாய்கின்றமாடொன்று வாயிலில்மேவுதே - பாம்பும்புலியுமிருபக்க மூர்த்தாவுதே- பேயும்பூதமுமூன்னும்பின்னும்மூலாவுதே - பிடித்தகை மானண்டம் வெடித்திடக்கூவுதே ... ... ... ... ... (என்ன)

(உ) கொழுந்துவிட்டோங்குமழற் பிழம்பாகுமுன்னுறுப்பு - கொடிய தில்லைக்காடு நீகுடியிருக்கப்பொறுப்பு- ஒழிந்திருக்காதெப்போதுமு னதுநெஞ்சிற்கறுப்பு- வுனைத்தான் பித்தனென்புகை நினைத்தாற்றே ன்றும்வெறுப்பு ... ... ... ... ... ... ... ...(என்ன)

(௩) ஆதியின்மாலயனு மடிமுடிதேடுவோனே - யாதியந்தமில்லா நின்ற ருமறைபாடுவோனே- ப்ாதிமதியைச் சடைமீதினிற் சூடுவோனே -பா தத்தைத்தூக்கி பொன்னம்பலத்தினின்றாடுவோனே ... (என்ன)

—*******—

கீர்த்தநம்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

பல்லவி.

ஸ்ரீமெம்புலமாகிநீருமந்தரமானீர் - வேளைபொல்லாப்பாகியோ...*

அனுபல்லவி

காடுங்காணியாகியோரோடுங்கையிற்கொண்டீரே........ ..*
கரதசபைநாதரோ பதகபூஷிணனுரோ ... ... (ஸீமெம்)

சரணங்கள்

(க) உனக்கனிவாய்பல வுயிர்களுக்கும்படிதா - னுனக்கிறமைக்துனன்வந் தருகினிலிருந்தும் - இளக்கரியாமத்செந்தெலிராழியாலறுத்ததை- யனு க்குஞ் சீமோட்டிசொர்க்கமீனயாட்டியாயிருந்தும் ... ... (ஸீமெம்)

(௨) ஈட்டும்பதிபல நிதிக்கெல்லாந்தலைவனுங் - கூட்டுங்குபேரனீங்காத்
தோழனென்றிருந்தும் - பூட்டகம்வெளியாச்சேபுலியாம்புக்குள்ளே
புன்றலை-நாட்டமல்லாமுடங்கியனையுடம்பானீரையா...... ...(வீடும்)
(௩) வெள்ளைப்பிணுக்கைப் பார்த்தான்மேல் பூச்சல்லாம - உள்ளினும்பு
றம்பினுமொன்றினுமில்லையே- என்னிலெண்ணைப்போலெங்கு மிருப்
பேனென்றொருக்காலே- துள்ளிக்கூத்தாடினீரோ சொர்ணசபைநாதனே
[வீடும்] (௰௪)

---*---*---

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்,

பல்லவி

என்னயிழைப்புன்றன்பிழைப்பையா-இதை
யெண்ணிப்பார்த்தாலார்க்கும்பழிப்பையா.

அனுபல்லவி

அன்னங்கண்டறியாமற்சொரூபமும்மாறினீர்..............*
ஆட்டையெடுத்துத்துணிந்-தம்பலமேறினீர்...... ...(என்ன)

சரணங்கள்,

(௧) கூடைமண்சுமந்துண்ணப் பரிந்தீரோ- முனிவர் - கொண்டபெண்க
ளைத்தழுவிநின்றீரோ - ஓடெடுத்திரந்துண்டுதிரிந்தீரோ - பசியா-லொரு
வன்பிள்ளையைக்கழுத்தரிந்தீரோ - வேடனுவிஜயனவில்லா லடிபட்டீ
ரோ-காடேகுடியிருப்பாய்க்கல்லாலடிபட்டீரோ............ ...(என்ன)
(௨) பெண்டாட்டிமூழுநீவிதானுச்சே-பெற்ற-பிள்ளைசகப்பன்சாமியாய்
ப்போச்சே-பண்டாரமைத்துனன் தாதனெனும்பேச்சே-யாரும்-பழிப்
புக்கிடமாய்ச்சாம்பன்மேற்பூச்சே- அண்டற்கரிய கூத்தையாடியுமும்ம
க்கிங்கே-பெண்டிற்கழியாமூவாயிரத்திலொருவங்கே... ...(என்ன)
(௩) மலைவேடனெச்சிலைத்தின்றீரோ- குதிரை - மாருடிமழுவேந்திநின்றீ
ரோ-விலைமாதிடத்திற்றூதுசென்றீரோ - வெட்கம் - விட்டுச்சபைநாத
ரென்றீரோ-கல்லயிற்கோமணத்தன்னைக்களவுசெய்தெடுத்தீரோ- தலையித்
பாதிசோமனைதரித்துத்தோலுடுத்தீரோ..................(என்ன) (௰௫)

---*---

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்,

பல்லவி,

உம்மைப்போலாட்டையெடுத் தம்பலத்திலிற்பா
ரொருவரைக்காணேனையா........................*

அநுபல்லவி

செம்மைமலர்த்திருவாரூருஞ்சிதம்பரநாதரோ... ......*
தின்னுமொருபிள்ளைகொன்றபழிகாரரோ... (உம்மை)

சரணங்கள்.

(௧) யானைத்தோல் புலித்தோலாடையுண்டதாட்சி - யதுவல்லாமலெலும்
பைக்கோத்தணிந்ததற்குச்சாட்சி - மானைக்கையிற்பிடித்தவாறேயுமக்
குத்தாட்சி-மழுவெடுத்துமெய்யாச்சோகமூக்கேற்றகண்காட்சி (உம்)
(௨) இடையிற்கிடைத்தவாயனடியைமெள்ளத்தேடிக்- இட்டும்போதுமை
ச்சாலென்னெருட்டினீருறவாடி- அடவிப்புலிப்பாம்புமயிற்றொருமித்
துக்கூடி-பாட்டுக்காலுக்கொட்டுப்போட்டிருக்குதேநாடி (உம்மை)
(௩) வெற்றிவிஜயபல்யன்றி விரும்பியடிபட்டீரோ - வேடன்வாய்த்தசை
யெச்சில்வேண்டிருசிகண்டீரோ-சிற்றிடைச்சிலைப்பாகஞ்சேர்த்துத்தா
னேகொண்டீரோ-சிதம்பரேசரோயாட்டாற்றிருமேனிதுவண்டீரோ(உம்

———*———

கீர்த்தனம்-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்,

பல்லவி,

இன்னம்வயிரமுன்றனெஞ்சிலே-யிருப்ப... ...... ...*
தென்னகாரணத்திற்கையா......... ......*

அநுபல்லவி,

தன்னந்தனியனாகிப்......... ...பொன்னம்பலனேசனே நீ
சலப்பிரளயக் காலத்திற் சர்வசங்காரஞ்செய்தும் , இன்

(சரணங்கள்)

(௧) கருப்புவின்மதன்சண்டைக் கெதிர்த்தபோதுமனக் கறுப்புத்தீரக்க
ண்ணால்வதைத்ததுவும் - நெருப்புப்போலேசீறிவந்திடுங்கொடுங்கால
னிவசதிலவதிவிழவுதைத்ததுவும் - மருப்புக்கவரியிற்றைக் கிழித்துப்
போர்த்ததும்பொல்லாமருத்துவனுருயிர்சிதைத்ததுவும்- பொறிப்பை
ப்பறித்தசைச்சுமரக்கனைக் கானகத்தாற்பூமிதனிலமுந்தப்புதைத்தது
வும்போதாமல்.................. ......(இன்னம்)
(௨) சேரலர்திரிபுரம்வெந்து நீறுநீறுகச்சிரித்துமனதின்படி முடித்தது
வும் - வேருடனருக்கன்பல் முறிந்துபலபலென்றுவிழுந்திடக்கன்ன
த்திலடித்ததுவும் - யானையுஞ்செபம்பண்ணி திக்குவிஜயம்பெற்றவ
ந்தகாசுரனையடித்ததுவும்- கோரநரசிங்கத்தை விரசிம்புள்ளாய் வந்
துகொத்தியிமுத்தாரத்தங்குடித்ததுவும்பற்றாமல்.,... ...(இன்னம்)

(௫) தன்னைமறந்துமதமிகுந்துமகஞ்செய்தக்கன் தலையரிந்துதழலித்
தீத்ததுவும் - பின்னுந்தக்கனுக்குமருகனென்னுஞ்சந்திரன்கலையொடு
ங்கிடக்காலாற்றேய்த்ததுவும்- அன்னத்தைப்பரிபாபேறும் பிரமன்ற
லைகளைந்திலொன்றையறுத்துச்சாய்த்ததுவும்-வன்னம்பலவாயுள்ளபொ
ன்னம்பலவாணரேவலியச்சலந்தரனைமாய்த்ததுவுமல்லாமல்(இன்(ம்அ)

—*—

கீர்த்தநம்-இம்-தோடி- ஆதிதாளம்.

பல்லவி

எந்நேரமுமொருகாலைத்தூக்கிநொண்டிக்கொண்…………*
டிருக்கிறவகையேனதயா…………*

அநுபல்லவி,

பொன்னுடர்போற்றுந்தொல்லைநன்னுடரேத்துந்தில்லைப்…*
பொன்னம்பலவாணரேயின்னந்தானுமூன்றுமல்… (எந்நே)

(சரணங்கள்)

(க) எக்கியநெருப்பவிக்கத்தக்கன்வீட்டினடந்தோ- யமனைவுதைத்தபோ
தெதிர்சூலுக்கேறிநொந்தோ - சிக்கெனவேபிடித்துச் சந்திரனைநிலத்
திற்-றேய்த்தபோதினிலுறைந்தோ…………*
உக்கிரசாமுண்டியுடன்வாதுக்காடியசைந்தோ - உண்டரஞ்சடம்பெங்கு
மூறிக்கால்வழிவந்தோ - தக்கபுலிபாம்பிருவர்க்குங்கூத்தாடியாடிச்-சு
வித்துத்தானோபொற்பாதம்வலித்துத்தானோதேவரீர்… …(எந்நேர)

(உ) பொருட்பெண்ணிடத்திற்றூதுபோனதினுற்றுவண்டோ-பொல்லா
முயன்மேல்வைத்தபோதினில்வலிகண்டோ- அருச்சுனனுடன்கட்டிநீ
ழ்மேலாய்விழுந்தபோ-திர்ந்துநரம்புரண்டோ…………*
சிரசித்தண்ணீரோதித்தேகத்தில்வாதங்கொண்டோ-சேர்க்குந்தோழன்போ
லுமக்கேற்கவேறுட மூண்டோ - எருத்தின்மேலேபெண்சாதிதனையு
ந் தூக்கிக்கொண்டுபோய்ந் - தேறும்போதிலொருகாற்றூறு மாறுப்ப்
புரண்டோ…………(எந்நேர)

(௩) மலைவில்விலடிவைத்துவளைக்கமக்களித்திட்டோ - வானோர்வணங்கு
ம்போதுமகுடமுடிகள்பட்டோ - நலமிகுகயிலைவிட்டேடுழுந் தருளித்
தில்லையில் நடந்தவருத்தத்தைத்தொட்டோ…………*
கலகலெனும்பொற்சிலம்பழுந்திக்கால்வலித்திட்டோ - கடியவரக்கன்ப
த்துமுடிமேலுறுத்திநட்டோ-பலபலவிதத்திலெவ் விதமோவதிபேண்
பொன்னம்பலவிலாசரேதில்லைநடேசரேநீர்தான் … …(எந்நேர)

கீர்த்தநம் - இ-ம்-தேவகாந்தாரி-சாபுதாளம்

பல்லவி,

இதைவிடக்குதித்துக்கூத்தாடினாலு - மூவா
யிரத்திலோர்பங்குமக்கே...... ...... ...*

அநுபல்லவி

பொதுவிலாடினால்விடுவரோநாகத்தைப்-பூண்டவரோ தில்லைத்தாண்டவரேயுமக்- கதிகப்பங்குக்கிடங்காணேமும்மிடபங்கி - லவைப்பங்குதனையுமோர்வவைப்பெண்ணுக்களித்தீரே..........................(இதைவிடக்)

சரணங்கள்,

(க) தென்றிசைக்கங்கையைச் சிரசின்மேலேதேக்கித் - திங்களைக்கதிரைச் செந்தீயைமுக்கண்ணாக்கி - யெண்டிசைத்தலைவருந்தொழுதிட மான்மழு-வேந்தித்தென்றிசைநோக்கி - விண்டலத்தோடண்டமெங்குமோசைபோக்கி - மிகவுங்குமுறவீரவிருதாங்கிண்கிணிவீக்கி - அண்டரரியமுயலின்மேலொருகாற்றூக்கி - யசைந்தசைந்தொருகாலையுசர்ந்து தூக்கித்தூக்கி.......................... ............... .........(இதைவிடக்கு)

(உ) படர்ந்தசடைகளிருபக்கமுந்து வண்டோடப் - பாதிப்பிறைகுழங்கக்காதிற்குழையுமாட-நடந்து கட்டியஞ்சொல்லி நந்திமத்தளந்தட்ட நாரதர்யாழ்பாட-தொடர்ந்துநான்முகன்தாளந் தாக்கிப்பண்ணொடு போடச் சுமக்குஞ்சேடனு முடிதுளக்கிநெளிந்துவாட - இடந்தெரியாதெங்குமடர்ந்துபூமழைமூட - விந்திராதிபரும் பார்க்கவந்துகூட்டங்கூட.................... ............ ............. ......(இதைவிடக்கு)

(௩) வெம்புலித்தோலாடைவிளங்கியரையிற்றோண - மெலிவுதீர்ந்தொரு பாம்பும்புலியும்மகிழ்ச்சிபூண் - கம்பீரமாய்வாகுக்காடுகின்றபத்ர-காளிமனதுநாண-பம்பைமல்லாரிதுந்துபியாதியாய்வேண - பல்லியமார்ப்பரிக்கப்பலரும்வந்தடியேண- நம்மினவரைக்காக்குஞ்செம்பொன்னம்பலவாணநாதரேநீர்கொண்டகாதலிகண்காண.........(இதை)(உ௰)

—*********—

கீர்த்தநம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

அம்பலத்தாடிமடிப்பென்பதையும்விடத்தி
லறிந்தேனறிந்தேன்ஐயா...................*

அநுபல்லவி,

வம்பவிழ்கொன்றைசூடுஞ்- சிதம்பரேசரேயுமது -மார்க்கத்தையெ
ல்லாமுன்றிப்பார்க்கப்போனால் கூத்தாச்சே ... ...(அம்பலத்)

[சரணங்கள்.]

(௧) பெண்ணுருடன் பிறந்த மைத்துனனுக்கருமைப்பிள்ளையைப்பார்த்து
க்கண்ணூற்சுட்டீரோ- பின்னுங்- கண்டோர்நகைப்பதற்குப்பெண் கொ
டுத்தமாமனைக்கழுத்தையறுத்தழலிலிட்டீரோ-உமக்- குண்டானகுணந்
தானோவேத மெல்லாங்கற்றோன்றன் னொருதலை தனைக்கொய்துவிட்டீ
ரோ-சடைப்-பண்டாரம்போலவந்து குழந்தையையறுத்துண்ட - பசி
யாளியென்றெவரும் பழிக்கத்தலைப்பட்டீரோ ... ...(அம்பலத்தா)

(௨) போரிட்டெதிர்த்தருகில் வந்தமுப்புரத்தாரைப்புன் சிரிப்பாலே குடி
கெடுத்தீரோ வய- தீரொட்டும்நிறைந்தபின் மார்க்கண்டனைத்தொடர்ந்த
வேமனைச்சொற்புரட்டினாற்றடுத்தீரோ-முநி வோரிட்டமுடன்சேருமா
தர்கண்மயக்கங்கொண்டிடை குலைந்திடவேடமெடுத்தீரோ-பன்றி- விரி
ட்டுவரும்போது கூரிட்டகணைகொண்ட - விஜயனுடன்வேடன்போ
ல்வீண்சண்டைதொடுத்தீரோ ... ... ... ... (அம்பலத்தாடி)

(௩) செம்மனக்கிழவிதந்திடும்பிட்டைத்தின்றுவேலை செய்யாமல்விளையா
டிக்குதித்தீரோ-அதற்-கும்மைப்பிரம்பினாலேபரசனடித்தாலனைத்துயி
ர்க்குமடிபடவிதித்தீரோ-எங்க- ளம்மைசிவகாமியினைபிரியாதிருந்துமமு
ழுந்தச்சிரசிலோர்பெண்மதித்தீரோ-யன்பர்-தம்மை வந்தாண்டருளுஞ்
சிதம்பரேசரேநீர்தான்-தாண்டிமுயலகனைத்தீண்டியேமிதித்தீரோ, (அ
[ம்பல(௨௧)

—*****—

கீர்த்தநம்-இ-ம்-சுருட்டி ; சாபுதாளம்.

பல்லவி,

ஏதுக்கித்தனைமோடி தானுமக்கென்றன்மேலையா......... *

அநுபல்லவி,

பாதிப்பிறையைச்சடையிற்றரித்த-பரமரேதில்லைப்பதிநடேசரே, (ஏது)

(சரணங்கள்.)

(௧) ஆட்டுக்காலெடுத்தம்பலத்தினின் றீரதனைச்சொன்னேனோ - ஒத்தை
மாட்டுக்காரனொன்றுருடனாகிலும் வாய்மதஞ்சொன்னேனோ-தலை-வோ
ட்டிலேயிரந் துண்டோரந்த உண்மையைச்சொன்னேனோ -பல்லைக்
காட்டிமுப்புரத்தார்முன்னேநின்ற-கதையுமெச்சிலுண்டதையுஞ்சொ
ன்னேனோ ... ... ... ... ... ... ... (ஏதுக்கித்தனை)

(உ) சாதியுந்தாயுந் தகப்பனுமில்லாத் தனியனொன்றேனோ - பெண்ணுந்-
பாதியுடம்பாகிக்கள்ளுஞ்சுமந்திட்ட பறையனொன்றேனோ- சாதி-பேத
மாய்ப்பிள்ளைக்குக் குறவர்வீட்டிற் பெண்கொண்டவனொன்றேனோ- ம
றை- யோதிவணங்குநடேசரேயும்மைநா- னேப்பாருமில்லாத தப்பி
லியென்றேனோ ... ... ... ... ... (ஏதுக்கித்தனைமோடி)

(௩) அழைந்தவேபிரம்படிபட்ட கூலியாளனொன்றேனோ. தலை - சுழிந்த
வெள்ளெலும்பணிந்த பயித்தியக்காரனொன்றேனோ- கட்டப்- பழந்து
ணியின்றித்தோலுடுத்ததைப்பழிப்புச் சொன்னேனோ-சிறு-குழந்தை
யைக்கொல்ல ஆண்டியாய்வந்தருட்டெல்லாம்வெளிவிட்டுச்சொன்ன
னோ ... ... ... ... ... ... (ஏதுக்கித்தனைமோடி) (உஉ)

—*****—

கீர்த்தநம்-இ-ம்- கேதாரகௌளம்- ஆதிதாளம்,

பல்லவி,

பாருங்கள்வந்துபாருங்களாட்டுது- பாம்புபிடாரனையே ... *

அநுபல்லவி,

ஆருங்காணவேதில்லையம்பலத்தில்வாடிக்கை ... ... ... *
யாலேபதமுயலோன் மேலேவைத்தவேடிக்கை... ...(பாருங்கள்)

சரணங்கள்,

(க) ஆரூரிற்புற்றிடமமர்ந்திருந்ததும்பேச்சு-ஆபரணமாய் மெய்யிலணி
ந்ததும் வீண்பேச்சு-காரூரில் விடமுண்டகதையைச் சொன்னாலேச்
சு- கையைச்சிலைக்குக்கயிறாய்க்கட்டியதுமென்னாச்சு... (பாருங்கள்)

(உ) சநந்தகரவித்தைகற்றதனாலென்ன - கற்றுமெல்லாம்வல்லசித்தனாகி
யுமென்ன- சகலமந்திரத்திற்குந் தலைவனாயுமென்ன . தலையிற் கடிக்
கேற்ற பச்சிலைவைத்திருந்துமென்ன ... ... ... (பாருங்கள்)

(௩) மைக்கண்மடந்தைகாணக்கைக்குண்மழுவைவைத்து - மாயவுயிராம்
பந்தைக்காயச்செப்பின் மறைத்துத்- தக்கதொழிலுக்கேற்ற கொக்கி
றகைத்தரித்துச் - சபைக்கேற்றகூத்தாடச்சமர்த்தனென்பதையுற்றுப்
பாருங்கள், ... ... ... ... ... ... (உ௩)

—❁**********❁—

உ

# நிந்தாஸ்துதி.

—***********—

பதம்-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்,

பல்லவி,

என்னகாரியத்துக் - இந்தப் பேயாண்டிமே... ...... *
விச்சைகொண்டாய்மகளே ... ... ... *

அநுபல்லவி.

தன்னையொருவரில்லாப் பொன்னம் பலவன்கண்ணிற்
றழலைகாட்டியெவர்க்குங்கழலைக்காட்டுவானேன் (என்)

(சரணங்கள்.)

(க) காடுசஞ்சாரம்வீடொன்றில்லாமல்- வேறே - காணேனுஸ்திபொரு
மாடேயல்லாமல்- ஓடியிரந்தான்பசிதீல்லாமற்- பின்னு- மூண்டானெ
ச்சிலைவேண்டாமென்றுசற்றுஞ்சொல்லாமல்-ஓர்ந்துபார்த்தாலுருவரு
வந்தங்கெடுவானே - போந்தபிட்டை விரும்பிப்பிரம்படி படுவானே-
சார்ந்தவனையம்பலந்தனிலேற்றிவிடுவானே - தீர்ந்தபக்ஷஞ்நெற்றியிற்
றிருநீற்றையிடுவானே ... ... ... (என்னகாரியத்துக்)

(உ) சமர்த்தாய்த்தேட்டாண்மைதேடவறிபாயோ - இந்தத்- தப்பிலிமே
லாசையைபெறியாயோ- இமப்புதட்டனென்பதுங்குறிபாயோ-மழு-
வெடுக்கும்வன்னெஞ்சனென்ப தெண்ணித்தான்றியாயோ- எலாது
சொன்னேனிசமென்றெண்ணுவாயென்சொல்லை- மாலைகொள்ளாதே
கொண்டால்வருமேபதிகசல்லை- போலேயல்லாமலுள்ளே புட்டுக்காட்
டினூற்சொல்லை-தோலேயல்லாலுடுக்கத்துணியொன்றவனுக்கில்லை, (எ)

(ங) குதிரைமாருடினையெத்தனடி . மெத்தக் - கொஞ்சமதியுடையபித்த
னடி- மூதுமையிளமையில்லாச்சித்தனடி - சடை - முடிக்கொரு
பெண்டுளையடக்குஞ்சமர்த்தனடி-முன்னம்நகைத்துச்செய்தான்மூப்
புரத்தானைமோசம்-என்னசொல்லியுமுமக்கேனவனுடனேசம்-அன்ன
ங்கண்டறிவதற்கரிதினம்பிரயாசம் - பொன்னம்பலவனை யுட்புகுந்து
பார்த்தாலாகாசம் ... ... ... ... (என்னகாரியத்)

—*********—

௨

# சிவகாமியம்மைபேரில்

கீர்த்தநம்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்,

பல்லவி,

எனிந்தப்பராக்குவேளைமீதிலுனக்-கென்னவன்மமோவம்மா... *

அநுபல்லவி.

பாணந்தலவிபழனந்தனிற்கயற் - பாயும்புலீசையிலாயன்றிசைமுகன்-
வாணிந்திரன்றொழுமாநந்தநடேசர் வாமமூறுஞ்சிவகாமசவுந்தரி, (எனி)

சரணங்கள்,

(௧) துக்கசாகரத்தழுந்தியருட்களையேறிலேன்- பிறவிச் - சுழலிலலைந்த
லைந்துழனுந்தொழிலின்னமாறிலேன்-பக்கந்தனிலெனக்குதவியுனையன்
றிவேறிலேன்-ஒழியாப்-பாரப்பெருஞ் சமுசாரச்சுமை விட்டுத்தே
றிலேன்- அதனாற்-றிக்குவேறில்லை வறுமைக்கலிபிப்போ - தீர்த்திடா
விடிற்பார்த்தவர்கட்கெப்போ-மக்கண்மேற்பெற்றதாயார்க்கும்வெறு
ப்போ- வருத்தஞ்சொன்னாற்காதைமறைத்தன்னைக்கொப்போ... (எனி)

(௨) சொல்லிமுடிகிறதல்லாமறதின்விசாரமோ- முடியக்- சோதிக்கமவுந
ஞ்சாதிப்பதும் பக்ஷபாரமோ- நல்லதல்ல வுனக்கிதுவும் நான்செய்த
நேரமோ- என்னை- நடுவினிணழுக விடுவதுனக்கலங்காரமோ சொல்
லச்சொல்லத்- கல்லுங்கரையுமுன்னெஞ்சங்கரையாயே-கடியபழிவரும்
படிசெய்தாய்நீயே- அல்லல்வினை தொலைத்தாளவருவாயே- அடிமை
ப்படைத்தவர்க்கானக்கடன்றாயே ... ... ... (எனித்த)

(௩) பிஞ்சுமதிநுதல்வஞ்சியெனுமபிராமியே- தெய்வப் - பிடிக்குமொ
ருகுறக்கொடிக்கும்வாய்த்தநன்மாமியே- தஞ்சமெனு மடியார்களிட
த்துறைவாமியே- கொன்றைத்- தாமமணிந்திடுமேமசபைச் சிவகாமி
யே- உனதிரு- செஞ்சரோருகச்சரணமேகதித்- திரும்பியொருவரைச்
செய்திடேன்றுதி- அஞ்சலஞ்செலெனமுளயிருத்தி - பசட்டையினிச்
செய்வதனைத்தும்பெண்மதி ... ... (எனித்த)(௨௫)

மாரிமுத்தாப்பிள்ளைபாடிய - கீர்த்தநம்-பதம் - முற்றிற்று.

—*********—

உ

சீர்காழி

# அருணாசலக்கவிராயர்பாடியது.

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டிரம்- அடதாளம்;

பல்லவி

தில்லைத்தலம்போலே.........சொல்லப்புவிமீதிற்
றெய்வத்தலங்களுண்டோ....................நாளும்

அநுபல்லவி

சொல்லுந்தொளாயிரத்தொண்ணூற்றொன்பது - தூயகலைநிறைபாத்திரம்-எங்கும் - போய்வருமோர்கலைமாத்திரம் - ஆக - வாயிரமாஞ்சிவக்ஷேத்திரந் ..............................(தில்லைத்தலம்போலே)

(சரணங்கள்)

(க) பத்திமணிக்கோபுரத்தைக்கண்டாற்சிவ - பத்தியிலேமனந்தூக்கும்-
அதை-உய்த்துவரவரச்சித்தம்பரிசுத்த - மூள்ளேசிவஞானந்தேக்கும்-
அந்த- நெற்றியிற்பூசிப்பொடித்தூள்கள்பட்டாலும் - நீங்காப்பிணி
யெல்லாம்நீங்கும்-வந்து - சற்றேமிதித்தாலுமெல்லவர்க்குஞ்சிவ-தன்
மதிநினைவுண்டாக்கும் பூர்வ- கன்மவினைகளைப்போக்கும்-மறுஜெ
ன்மமெடாமலேகாக்கும் ..........................(தில்லைத்தலம்)

(உ) நங்கைசிவகாமிசந்நிதிகாணவே . நன்மையிலேநிலைநாட்டும்- மஹா-
லிங்கத்திருமூலநாதனைச்சேவிக்க - நெஞ்சிற்கவலையைப்போட்டும்-ஆ-
ரங்கசபைதன்னைகண்களாற்காணவே - டற்பதந்தானேபாராட்டுஞ் - சந்
துஞ்-சங்கையில்லாச்சிவகங்கையின்மூழ்கியே- தானஞ்செய்வார்க்கின்
பங்காட்டுஞ்சிவ- ஞானத்தப்பாமாலேகூட்டும் - மூத்தி-யானந்தத்தின்
மூழுக்காட்டுந்..............................(தில்லைதலம்போலே)

(௩) கோடிமறையாலுஞ் சொல்லிமுடியுமோகோடானகோடியுல்லாசம்-
ஐயன்-ஆடியபாதம்பணியாதபேருக் - கதைவிடவேறுண்டோமோச
ம்-நானுந்- தேடியமூவருந்தேவரும்வந்து - திநந்திநஞ்செய்குவர்வா
சம்-உண்மை-நாடியசாலோகமேமுதலாகிய - நாலுகதிக்கும்விலாசம்-
இருக்-காலும்வாதிமபாசம்- இதுவே-பூலோககைலாசம்...(தில்லை)(க)

—— **** ——

ஸ்ரீ-வைத்தீச்சுரன்கோயில்

# குமாரசாமிகவிராயர்பாடியது

சொர்க்கட்டு அர்த்தமுள்ள

கீர்த்தனம் - இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி

ஆடவெடுத்தபாதம்-நன்மை-யாளவெடுத்தபாதம்

அநுபல்லவி

தோடவிழ்கஞ்சவர்விருஞ்சூழ் தில்லைநடராஜர் - சுகமிழைத்துயிலாவருத்
தும்பஞ்சமலர்த்-தொந்தமகல தொந்தோந் - தொந்தோந் தொந்தோம்
தோமென்.....................................(ஆடவெடுத்தபாதம்)

(சரணங்கள்)

(க) பறவைநுழைந்திடுச்சுடம்பை - அரவுரிபோற்-பவசாகரத் துழலுட
ம்பை-உறுதியெனும்மடமைமாற்றி - விடய-வழியுளஞ்சொல்லாமலே
தேற்றி-கரையேற்றி-மறலியைவென்றவெற்றிக் - கழல்கணீர் கணீரெ
ன்ன-மலர்க்கை யேத்தும்வந்தி-தகதகதவெண - சருவசாட்சியாய்நின்
றுநடநந்தொழுதவர்க்-கிகபரசெல்வந் - தகுந்தகுந்-தகுந்தகுந்- தகு
ந்தகுந்-தகுமென்.................................(ஆடவெடுத்தபாதம்)

(உ) பொய்வளைமதங்களைப்போக்கி- வேடமும்நீறும் - பொருளென்னு
மெய்ம்மையையுண்டாக்கித் - தெய்வத்தொழிலைந் துமிலங்கத்- தேவிமே
ல்வைத்த திருவருட்பார்வை துலங்கக்- கலிவிலங்கத் -துய்யமலர்ச்சிலம்
பு-கலின்கலிலென்னச்-சுரரும்முநிவரும்ஜெயஜெயஜெயவெனச்.சைவ
வைதிகசிவசமயம் மெய்கண்டதெய்வந் - தாந் தாந் தாந் தாந் - தாந்
தாந் தாந் தாந்-தாந் தாந் தாமென்........................(ஆடவெடுத்த)

(ங) பரிசதகோடிபோற்றொன்றி - யொருபொற்பாத - பதுமம்முயலக
ன்மேலூன்றி - இருவரின்னிசையாழ்பாடப் - புலியும்பாம்பு - மேத்
திவணங்கிக்கொண்டாடச் - சுருதிகூடத்- திருமாலைக்கந்தனுந்தந்தனு
ந்தாதாவெனச் - சிந்திக்குமரன்மாலபன்றுதாவென- வொருதுடியன்
பிலர்க்குந் தெரிசித்தளவில்லி - டுண் டுண் டுண் டுண்-டுண் டுண் டுண்
டுண் டுண் டுண் டுண்டென்..........................ஆடவெடுத்தபாதம்)(க)

நிர்தாஸ்துதி-கீர்த்தனம்-இ-ம்-பரஸ்-ஏகதாளம்,

பல்லவி.

திருக்கூத்திற்குஅணித்-தம்பலத்தில்வந்துமின்னந்... *
திலைமலையென்சொல்லும்ஐயமோ........................*

அநுபல்லவி

மருக்கூவிளம்புனை..............................சடைமீதிலொருத்தியை
வைத்துக்கொண்டசெய்தி-மறைத்தான்மறைக்கலாமோ...........திருக்

(சரணங்கள்,)

(௧) ஆதிக்கமனையாட்டி பாதியுடம்பானத்தை - யறிவார்களுலகுள்ளோ
ரியாரும்-வாதுக்காடின- காலசைந்து போனதைநீர் மறைப்பதெப்
படியெண்ணிப்பாரும் போதாக்குறைக்கு மூத்தமகன் காற்சப்பாணி
க்காற் புதுமையிதின்மேலுண்டோ வயிறும்பெருவயிறு - எதுக்கெ
ன்றுசொல்லலாஞ்சமாதாநத் தேவரீரிருக்குமிடம்வெளியின்றிருக்குஞ்
சொல்லுதேநீர்.......................................(திருக்கூத்)

(௨) இஷ்டமாயன்னம்பாலிருக்கத் தலையோட்டினி - லிறந்த பித்தனெ
ன்றசொல்லடங்குமோ- சுட்டஞ்சுட்டமொருகண்ணில்லாதவனென்று
தரணியோர்சொல்லும்வார்த்தைமடங்குமோ-பிட்டுக்கொருத்திகூலியா
ளாய்ச்சம்பத்திலைகைப் பிரம்பினாலடிபட்டபேச்சொழிக்குமோ - வொ
ரு - சட்டியிற்கொக்கவித்த வேடனையீன்றும் தலைக்கறித்தனையுண்டு
ஞ்சைவமுதலவனென்றுந்..............................(திருக்கூத்திற்)

(௩) ஹரஹராகோவணமுமோடுந்திருடினீரென் - பவர்வாயைநாமூடலா
மோ - உமா - பெற்றதிருக்கோவையுரைத்த செந்தமிழ்க்கோவை யு
ட்கொண்டதும்மைவிட்டுப்போமோ - ஒருவரறிந்தாலல்லவோ ரகசிய
ம்மூவா யிரவரறிந்திருந்துமென்றும்ரகசியமோ - தெரிசித்தவர்
க்குமுத்தி யளிக்குஞ்சுசீலரோ - திருமலைக் குகதாசன்றமிழ்க்கருகூ
லிமோ......................................(திருக்கூத்திற்(௧)

***********************************

சிதம்பரம்- அமிர்தகவி.

# சுப்பையபிள்ளைபாடியது.

கீர்த்தநம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்,

பல்லவி

தெரிசிக்கவேண்டும்-கனகசபை-தெரிசிக்கவேண்டும் *

அநுபல்லவி

தெரிசித்தபொழுதங்கேவரமுத்திபெறலாகும்...*
பரதத்துடனேயநவரதத்தாண்டவரூபந்(தெரிசிக்)

# அய சபாநாதர்பேரில்பாடியகீர்த்தநம்

(சரணங்கள்)

(க) சாத்திரமாறுநால்வேதம்மதிற்றாணுகச் - சமயமிருபத்தெட்டாகம
மூமன்பெரும்பூதம் - போற்றியபதினெண் புராணஞ்சிறு நூ[illegible]த்திர
ம்பொருந்தியகலைப்றுபத்துநாலும்பக்கத்தில் - ஏற்றுங்கைமானும்-வீ
ணுடியும்-ஆற்றநினுரமும் - ஆணிவரிச்சும் - பார்த்தவெழுபத்திரயி
ரமாமிருநூற்றிரு - பத்துநாலுபுவனஞ்சுற்றிவருங்கமலந்- தோற்றுந்
தத்துவத் தொண்ணூற்றாறும்பல்கணிவாசல் - தொடவொன்பதுகும்
பமபரவிருந்தின்பத்-தொடுக்குக்குஞ்சிற்றேறடு-மாயிரத்தெட்டுவடுக்கு
மேனுடுஞ் சுவாசமுந் - தோயவேவிருபத்தோ - ராயிரத்தறுநூறும்-
தேடமெனும்நமச்சி - வாயப்படிமுன்னின்று... (தெரிசிக்கவேண்டும்)

(உ) சங்கையும்மதியமுந்தரித்தசடைமுடியும் - கதித்தநெற்றியிற்பிறையு
தித்த திருவெண்ணீறும் - பங்கயவதனமும்புருவச்சிலைமுக்கண்ணும்
பதித்தகாதிற்குண்டலமதித்தவிலைமண்டலந் - தங்குமூன்விடமும்-மா
ர்பிற்பணியுந்- தொங்குபொன்வடமு - மாபரணமுஞ் - செங்கையின்
மழுமானுமுடுக்கைடமருகமுஞ்- சிவத்தபூதாம்பரங்குவித்தவிடைய
ழகும்-நங்கையுமைபார்வதியிடத்திலின் மனமகிழ் - நாகரீகமுந்தங்க
த்தேகமொருபுரமும் - நாதகிண்கிணியுந் - தண்டைச்சிலம்பு - பாத
மேலணியும்-புண்ணியன்மிக - நாடும்முயலகன்மே - லாடும்பொருளி
ருவர் - தேடுங்கர்த்தனையன்பு-கூடுமனமேகண்டு... (தெரிசிக்கவேண்)

(ங) இரணியவன்மன்வெண்பிணிதீரவேமன - மிரங்கிக்கருணைபொழிவர
ங்கடருபவனை-ஒருமுனிமகனுக்கே யுபர்பயோத்திதன்னை - யுரிமையு
டனழைத்துப்பருகவளித்தவனை - யரிமகன்றனையே - நெற்றிவிழியா,
லெரிசெய்தவனையே - மூத்துத்தாண்டவர் - சரசமானகவிக்குத்தரும
தங்கொடுத்தோனைச் - சுந்தரமடியவர்வத்துவணங்கிநின்று - பரவுஞ்
சிவனைச்சொல்சொலமிர்தக்கவிதுதிசெய் - பையரவணிந்தோனைவைய
கம்பணிந்தோனைப்-பகரும்மெய்யருளை - மூவாயிரவர் - மகிழரும்
பொருளைக் - காலன்விடு - பாசந்தணிற்படாம - னேசமாகரட்சிக்கும்
மாசிலாதநட-ராஜமூர்த்தியைநித்தந்... ... ...(தெரிசிக்கவேண்டும், (க)

——*—*—*——

சபாநாதர்பேரில்பாடியகீர்த்தநம், பதம்,

முற்றும்.